ஜூன் - 2024

WINMEEN.COM

LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்







நான் முதல்வன்

உலகை வெல்லும் இளைய தமிழகம்

**1. 2024 – உலக புகையிலை ஒழிப்பு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**



அ. Threat to our environment

ஆ. Grow food, not tobacco

**இ. Protecting Children From Tobacco Industry Interference ☑**

ஈ. Commit to Quit

★ ஆண்டுதோறும் மே.31 அன்று உலக புகையிலை ஒழிப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருள், "Protecting Children From Tobacco Industry Interference" என்பதாகும். இந்தக் கருப்பொருள், புகையிலையின் தீங்கு விளைவிக்கும் விளைவுகளிலிருந்து இளையோரைக் காப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், தீங்கு விளைவிக்கும் பொருட்களைக் கொண்டு இளையோரைக் குறிவைப்பதை நிறுத்துமாறு தொழிற்துறைக்கு அழைப்பு விடுக்கிறது.

**2. அண்மையில், அலாஸ்காவில் நடைபெற்ற 'செங்கொடி–24' பயிற்சியின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. தரை அடிப்படையிலான இராணுவ நடவடிக்கைகளை நடத்துதல்

**ஆ. மேம்பட்ட வான்வழி போர் பயிற்சிமூலம் பன்னாட்டு சூழலில் விமானக்குழுவை ஒருங்கிணைப்பது ☑**

இ. கடல்சார் பாதுகாப்புக்காக கடற்படைக்கு பயிற்சி அளித்தல்

ஈ. மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணப் பயிற்சி வழங்குதல்

★ அலாஸ்காவில் உள்ள எய்ல்சன் விமானப்படை தளத்திற்கு இந்திய விமானப்படையின் (IAF) குழுவொன்று சிவப்புக் கொடி–24 என்ற பயிற்சிக்காக ரஃபேல் போர் விமானங்களுடன் சென்றுள்ளது. 'Red Flag – 24' என்பது இரண்டு வார காலம் நீடிக்கும் ஒரு மேம்பட்ட வான்வழி போர் பயிற்சியாகும்; இந்தப் பயிற்சி பன்னாட்டு விமானப்படைகளை ஒருங்கிணைக்கிறது. கூட்டு பசிபிக் அலாஸ்கா ரேஞ்ச் வளாகத்தில் 77,000 ச.மைல் வான்வெளியைப் பயன்படுத்தி சுமார் 3100 சேவை உறுப்பினர்கள் மற்றும் 100–க்கும் மேற்பட்ட விமானங்கள் இதில் பங்கேற்கின்றன. இந்தப் பயிற்சி 1975ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.

**3. அண்மையில், 'உலகளாவிய உணவுக்கொள்கை அறிக்கை – 2024'ஐ வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக வங்கி

ஆ. சர்வதேச வன ஆராய்ச்சி மையம் (CIFOR)

**இ. சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (IFPRI) ☑**

ஈ. சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)

INTERNATIONAL FOOD POLICY RESEARCH INSTITUTE IFPRI

★ IFPRIஇன் உலகளாவிய உணவுக்கொள்கை அறிக்கை – 2024 ஆனது 38 சதவீத இந்தியர்கள் ஆரோக்கியமற்ற உணவுகளை உட்கொள்வதாகவும், அதே வேளையில் 28 சதவீதம் பேர் மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட 5 உணவுக் குழுக்களையும் சாப்பிடுவதாகவும் வெளிப்படுத்தியுள்ளது. இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாடு 2011இல் 15.4%இல் இருந்து 2021இல் 16.6%ஆக உயர்ந்தது. வயது வந்தோருக்கான அதிக எடை பாதிப்பு 2006இல் 12.9%இல் இருந்து 2016இல் 16.4%ஆக அதிகரித்துள்ளது. பதப்படுத்தப்பட்ட உணவு நுகர்வு அதிகரித்து வருகிறது, வீட்டு வரவு செலவுத் திட்டங்களில் தொகுக்கப்பட்ட உணவுகளின் பங்கு கிட்டத்தட்ட 12%ஆக அதிகரித்துள்ளது.

**4. "Hooking the next generation: how the tobacco industry captures young customers" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக வங்கி ஆ. UNEP

இ. ILO **ஈ. உலக சுகாதார நிறுவனம் (WHO) ☑**

World Health Organization

★ உலக புகையிலை ஒழிப்பு நாளான மே.31 அன்று "Hooking the next generation: how the tobacco industry captures young customers" என்ற அறிக்கையை WHO மற்றும் STOP வெளியிட்டது. உலகளவில் 13–15 வயதுடைய 37 மில்லியன் குழந்தைகள் புகையிலையைப் பயன்படுத்துகின்றனர்; மேலும் 15–30 வயதுடையவர்களில் 85% பேர் இ–சிகரெட் விளம்பரங்களின் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளனர். இ–சிகரெட்டுகள் நிகோடின் நிறைந்த ஏரோசால் என்ற போதைப்பொருளை உற்பத்தி செய்கின்றன.

**5. அண்மையில், மல்டி–மிஷன் கம்யூனிகேஷன் சாட்டிலைட்டை (PAKSAT MM1) ஏவிய நாடு எது?**



**அ. பாகிஸ்தான் ☑**

ஆ. சீனா

இ. ஜப்பான்

ஈ. இந்தியா

★ பாகிஸ்தானின் தேசிய விண்வெளித் திட்டம் 2047இன் ஒருபகுதியாக சீன தேசத்தின் ஸிசாங்க் செயற்கைக்கோள் ஏவுதளத்திலிருந்து பல–பயன் தொடர்பு செயற்கைக்கோளை (PAKSAT MM1) பாகிஸ்தான் ஏவியது. இச்செயற்கைக் கோள் இணைய இணைப்பு, தொலைக்காட்சி ஒளிபரப்பு, செல்லுலார் போன்கள், பிராட்பேண்ட், இ–காமர்ஸ் போன்ற நிகழ்வுகளுக்கு உதவும். அண்மையில், சீனாவின் சாங்கி–6 நிலவுப்பயணத்துடன் 'iCube–Qamar' என்ற மினி செயற்கைக்கோளையும் பாகிஸ்தான் ஏவியது. பாகிஸ்தானின் முந்தைய ஏவுதல்களில் BADR–A, BADR–B, PAKSAT 1–R, PRSS–1, PakTes 1–A மற்றும் iCube–Qamar ஆகியவை அடங்கும்.

**6. நிதி தொழில்நுட்பத் துறைக்கான சுய–ஒழுங்குமுறை அமைப்புகளுக்கான கட்டமைப்பை வெளியிட்ட நிறுவனம் எது?**

**அ. இந்திய ரிசர்வ் வங்கி ☑**

ஆ. SEBI

இ. IRDAI

ஈ. NABARD

★ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) நிதி தொழில்நுட்பத் துறையில் சுய–ஒழுங்குமுறை நிறுவனங்களை (SRO–FT) அங்கீகரிப்பதற்கான கட்டமைப்பை அறிமுகப்படுத்தியது. SRO–கள் தொழில்துறையாளர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர் ஆகியோருக்கு இடையில் இடைத்தரகர்களாக செயல்படுகின்றன; நடத்தைக்கான தரநிலைகளை அமைக்கின்றன மற்றும் நெறிமுறை நடைமுறைகளை மேம்படுத்துகின்றன. கணிசமான உலகளாவிய நிதியுதவியுடன், உலகின் மூன்றாவது பெரிய நிதி தொழில்நுட்பச் சுற்றுச்சூழல் அமைப்பை இந்தியா கொண்டுள்ளது.

★ 2021ஆம் ஆண்டில் இந்திய நிதி தொழில்நுட்பத் துறையின் மதிப்பு $50 பில்லியன் ஆகும்; 2025ஆம் ஆண்டில் 150 பில்லியன் டாலர்களை அது எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2022ஆம் ஆண்டில் உலகளாவிய நிகழ்நேர பரிவர்த்தனைகளில் இந்தியாவுடையது 46% ஆகும்.

**7. இந்தியாவின் முதல் மின்சார வாகன (EV) குறியீட்டை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?**




அ. பாம்பே பங்குச் சந்தை (BSE)

**ஆ. தேசிய பங்குச் சந்தை (NSE) ☑**

இ. SEBI

ஈ. மெட்ராஸ் பங்குச் சந்தை (MSE)

★ இந்தியாவின் தேசிய பங்குச்சந்தை குறியீடுகள் இந்தியாவின் முதல் மின்சார வாகன குறியீட்டை அறிமுகப்படுத்தி உள்ளது; இது, 'Nifty EV & New Age Automotive Index' என்று அழைக்கப்படுகிறது. இது EV சூழலில் காணப்படும் நிறுவனங்களையும், புதிய தலைமுறை வாகனத்தொழில்நுட்பங்களை உருவாக்குபவர்களையும் கண்காணிப்பு செய்கிறது. 2018 ஏப்ரல்.02ஐ அடிப்படை தேதியாகவும் 1000 மதிப்புகளுடன் தொடங்கப்பட்ட இது, NIFTY-500இன் பங்குகளை உள்ளடக்கியது.

**8. தக்ஷா திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. கருந்துளைகள் பற்றிய ஆய்வு



ஆ. செவ்வாய் கிரகத்தின் வளிமண்டலத்தை பகுப்பாய்வு செய்தல்

**இ. காமா-கதிர் வெடிப்புகள்போன்ற வெடிக்கும் வானியற்பியல் மூலங்களை ஆய்வு செய்தல் ☑**

ஈ. நிலவின் மேற்பரப்பை ஆராய்தல்

★ தக்ஷா திட்டமானது காமா–கதிர் வெடிப்புகள் மற்றும் ஈர்ப்பலைமூலங்களின் மின்காந்த நேரிணைகளைக் குறிவைத்து இரு உயராற்றல் விண்வெளி தொலைநோக்கிகளை உருவாக்க திட்டமிட்டுள்ளது. இதன் ஒவ்வொரு தொலைநோக்கியும் 1 keV முதல் 1 MeV வரையிலான ஆற்றலைக் கண்டறியும். பூமியின் எதிரெதிர் பக்கங்களில் நிலைநிறுத்தப்படும் இவை, தற்போதுள்ள பணிகளுடன் ஒப்பிடும்போது சிறந்த செயலெல்லையைக் கொண்டு இருக்கும். இது தனது ஐந்தாண்டு பயணத்தில், ஆயிரக்கணக்கான காமா–கதிர் வெடிப்புகள் மற்றும் டஜன் கணக்கான உயராற்றல் இருமய நியூட்ரான் நட்சத்திர இணைப்புகள் கண்டுபிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மற்ற பணிகளில் ஆஸ்ட்ரோசாட், ஃபெர்மி காமா–ரே விண்வெளி தொலைநோக்கி மற்றும் ஸ்விஃப்ட் அப்சர்வேட்டரி ஆகியவை அடங்கும்.

**9. அண்மையில், WHO வழங்கும் 2024 – நெல்சன் மண்டேலா விருதை சுகாதார மேம்பாட்டிற்காக வென்றுள்ள மருத்துவ நிறுவனம் எது?**

**அ. நிம்ஹான்ஸ், பெங்களூரு ☑**

ஆ. கேஜிஎம்யூ, லக்னோ

இ. எய்ம்ஸ், டெல்லி

ஈ. சி.எம்.சி., வேலூர்

★ பெங்களூருவில் உள்ள தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம் (NIMHANS) WHO வழங்கும் 2024ஆம் ஆண்டுக்கான நெல்சன் மண்டேலா விருதினைப் பெற்றது. 2019இல் நிறுவப்பட்ட இந்த விருது, சுகாதார மேம்பாட்டிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா மற்றும் மத்திய சுகாதார செயலர் அபூர்வ சந்திரா ஆகியோர் நிம்ஹான்ஸ் நிறுவனத்திற்கு வாழ்த்து தெரிவித்தனர்.

**10. தேசிய புள்ளியியல் அமைப்பின் (NSO) தற்காலிக மதிப்பீட்டின்படி, 2023–24இல் இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. 7.6%



**ஆ. 8.2% ☑**

இ. 6.6%

ஈ. 5.1%

★ தேசிய புள்ளியியல் அமைப்பின்படி, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2023–24 நிதியாண்டில் 8.2% வளர்ச்சியடைந்தது; இது இந்திய ரிசர்வ் வங்கியின் மதிப்பீட்டான 7.6%ஐவிட அதிகமாகும். இது 1960–61 முதல் ஒன்பதாவது முறையாக மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 8%ஐத் தாண்டியதைக் குறிக்கின்றது. 2023ஆம்

ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 7.8% அதிகரிப்பு காணப்படுகிறது. நான்காம் காலாண்டில் (ஜனவரி–மார்ச் 2024) வலுவான செயல்திறனால் அதிக வளர்ச்சி விகிதம் ஏற்பட்டுள்ளது.

**11. அண்மையில், PhD மாணவர்களுக்காக எந்த நிறுவனங்கள் கூட்டாக 'BIMReN' முயற்சியை தொடங்கியுள்ளன?**

அ. புவி அறிவியல் அமைச்சகம் மற்றும் இந்தியப் பெருங்கடல் ரிம் சங்கம்

**ஆ. வெளியுறவு அமைச்சகம் மற்றும் வங்காள விரிகுடா திட்டம்-அரசுகளுக்கிடையேயான அமைப்பு ☑**

இ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் BIMSTEC செயலகம்

ஈ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் சார்க் அமைச்சகம்

★ நீலப்பொருளாதார மேம்பாட்டை அதிகரிக்க இந்திய அரசாங்கம் MEA மற்றும் BOBP–IGO உடன் BIMREN (BIMSTEC–இந்திய கடல்சார் ஆராய்ச்சி வலையமைப்பு) தொடங்கியுள்ளது. BIMREN ஆனது BIMSTEC நாடுகளைச் சேர்ந்த PhD மாணவர்களுக்கு ஸ்பிலிட்–சைட் டாக்டோரல் பெல்லோஷிப்கள்மூலம் இந்தியாவில் ஆராய்ச்சி செய்ய உதவுகிறது; இது இந்திய ஆய்வகங்களில் ஆய்வு மேற்கொள்ள ₹1 மில்லியன் வரை நிதியும் 6–12 மாதங்கள் வரை காலமும் வழங்குகிறது. இது 24 மாத பிராந்திய ஒத்துழைப்புக்காக ₹5 மில்லியன் வரையிலான மானியத்துடன் இரட்டையர் ஆராய்ச்சி திட்டங்களை ஊக்குவிக்கிறது.


**12. அண்மையில், 7ஆம் வகுப்பு ICT பாடநூல்களில் செயற்கை நுண்ணறிவு (AI) கற்றலை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. கோவா

ஈ. ஒடிசா



★ 7ஆம் வகுப்பு ICT பாடநூல்களில் செயற்கை நுண்ணறிவு (AI) கற்றலை கேரள மாநிலம் அறிமுகப்படுத்துகிறது; இது செயற்கை நுண்ணறிவு (AI) பற்றி 4 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் முன்னோடியாக உள்ளது. இந்த முன்முயற்சியானது தொழில்நுட்ப கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது; சிறு வயதிலிருந்தே AI கருத்துகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. இந்த முன்னோக்கு நடவடிக்கை கேரள மாநிலத்தின் கல்வி முறையை நவீனமயமாக்குவதற்கும் எதிர்கால தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு மாணவர்களை தயார்படுத்துவதற்கும் உள்ள உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 3 ஆண்டுகளில் மின் உற்பத்தி நிறுவுதிறன் 4 ஆயிரம் மெகாவாட்டாக அதிகரிப்பு: தமிழ்நாடு அரசு தகவல்**

தமிழ்நாட்டில் 3 ஆண்டுகளில் மின்சார உற்பத்திக்கான நிறுவுதிறன் 4,076 மெகாவாட்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 3,984 மெகாவாட் சூரியமின் உற்பத்தி நிலையங்கள், தமிழ்நாடு மின்கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. இதனால், சூரியவொளி மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவு திறன் 8,496 ஆக உயர்ந்துள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. ஒவ்வோர் ஆண்டும் உலக பால் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ. ஜூன்.01 ☑**

ஆ. ஜூன்.02

இ. ஜூன்.03

ஈ. ஜூன்.04



★ உலகளாவிய ஊட்டச்சத்தில் பாலின் பங்கை வலியுறுத்தும் நோக்கோடு ஆண்டுதோறும் ஜூன்.01 அன்று உலக பால் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. FAOஆல் கடந்த 2001ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த நாள், பாலை ஒரு முக்கிய உணவாதாரமாக கொண்டாடுகிறது. பால் நுகர்வு என்பது மனிதர்களிடையே புதிய கற்கால யுகத்திற்கு முன்பில் இருந்தே தொடர்ந்து வருகிறது; பல கலாச்சாரங்கள் மற்றும் மத மரபுகளின் குறிப்பிடத்தக்க பகுதியாக பால் உள்ளது.

**2. அண்மையில், எந்த இந்திய அமைதி காக்கும் வீரர் / வீராங்கனை அவரது மரணத்திற்குப்பின் ஐநாஇன் டாக் ஹம்மர்ஸ்க்ஜோல்ட் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்?**

அ. விக்ரம் சிங்

**ஆ. நாயக் தனஞ்சய் குமார் சிங் ☑**

இ. ராம் விஷ்ணோய்

ஈ. ஜீத் சின்ஹா



★ காங்கோவில் பணியாற்றிய ஐநாஇன் அமைதி காக்கும் வீரரான நாயக் தனஞ்சய் குமார் சிங், ஐநாஇன் சர்வதேச அமைதிப்படை நாளின்போது அவரது மரணத்திற்குப்பின் டாக் ஹம்மர்ஸ்க்ஜோல்ட் பதக்கம் வழங்கி கௌரவிப்பு செய்யப்பட்டார். 1997இல் நிறுவப்பட்ட இப்பதக்கம், ஐநாஇன் அதிகாரத்தின்கீழ் தங்கள் இன்னுயிரை தியாகஞ்செய்த அமைதிகாக்கும் வீரர்களை கௌரவிக்கிறது. டாக் ஹம்மர்ஸ்க்ஜோல்டின் பெயரால் வழங்கப்படும் இந்தப் பதக்கம், அமைதி காக்கும் படைகளை இழக்கும் நாடுகளுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

**3. எந்த ஆற்றின் கரையில் புராண கிலா கட்டப்பட்டுள்ளது?**

அ. கங்கை

**ஆ. யமுனை ☑**

இ. சிந்து

ஈ. சரஸ்வதி



★ அண்மையில், மத்திய சுற்றுலா அமைச்சகத்தால், 'Adopt a Heritage' என்ற திட்டத்தின்கீழ் டால்மியா குழுமத்தின் சப்யதா அறக்கட்டளையிடம் புராண கிலா ஒப்படைக்கப்பட்டது. புது தில்லியில் அமைந்துள்ள இது யமுனை ஆற்றின் கரையில் கட்டப்பட்ட பழமையான கோட்டைகளுள் ஒன்றாகும்; இது 'கிலா–இ–கோனா' என்றும் அழைக்கப்படுகிறது. ஹுமாயூன் மற்றும் ஷெர்ஷா சூரியின் ஆட்சியின்கீழ் கட்டப்பட்ட இது இசுலாமிய மற்றும் இந்து கட்டிடக்கலையின் கலவையை பிரதிபலிக்கிறது. செவ்வக வடிவிலான இக்கோட்டை மூன்று வாயில்களைக் கொண்டுள்ளது, குறிப்பாக பாரா தர்வாசா, இசுலாமிய மற்றும் இந்து கூறுகளை இணைக்கும் விதத்தில் உள்ளது.


**4. அண்மையில், தொற்றுநோய்கள் சட்டம், 1897இன்கீழ் மனிதர்களுக்குப் பரவும் ரேபிஸை அறிவிக்கத்தகு நோயாக அறிவித்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ. இலட்சத்தீவுகள்

**ஆ. ஜம்மு காஷ்மீர் ☑**

இ. சிக்கிம்

ஈ. நாகாலாந்து



★ ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசாங்கம் 1897ஆம் ஆண்டு தொற்றுநோய்கள் சட்டத்தின்கீழ் மனிதர்களிடையே பரவும் வெறிநாய்க்கடி நோயை அறிவிக்கத்தகு நோயாக அறிவித்துள்ளது. RABV வைரஸால் ஏற்படும் வெறிநாய்க்கடி நோய், மத்திய நரம்பு மண்டலத்தை பாதிக்கும் ஒரு கொடிய வைரஸ் நோயாகும். இது முதன்மையாக பாதிக்கப்பட்ட விலங்குகளின் உமிழ்நீர்மூலம் பரவுகிறது; வீட்டில் வளர்க்கப்படும் நாய்கள்மூலமாக இது முதன்மையாகப்பரவுகிறது. குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வெறிநாய்க்கடி நோய், குறிப்பாக ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில், விளிம்பு நிலை சமூகங்களை பெருமளவு பாதிக்கிறது. இது ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயாகவே உள்ளது.

**5. அண்மையில், 'ஔட்லுக் பிளானட் சஸ்டைனபிலிட்டி உச்சிமாநாடு & விருதுகள் – 2024' நிகழ்வை நடத்திய மாநிலம் எது?**




அ. தமிழ்நாடு

ஆ. கர்நாடகா

**இ. கோவா ☑**

ஈ. மகாராஷ்டிரா

★ மத்திய பொதுத்துறை நிறுவனங்களுக்கான, 'ஔட்லுக் பிளானட் சஸ்டைனபிலிட்டி உச்சிமாநாடு மற்றும் விருதுகள் – 2024' நிகழ்வை அண்மையில் கோவா மாநிலம் நடத்தியது. ஔட்லுக் மீடியா குழுமத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு, BDO இந்தியா விருதுகள் செயல்முறை ஆலோசகராகவும், IIT கோவா அறிவுப்பங்காளராகவும், நிலைத்தன்மை முயற்சிகள்பற்றி விவாதிக்க கொள்கை வகுப்பாளர்களையும் இது ஒன்றுதிரட்டியது. REC லிமிடெட், "Sustainability Champion–Editor's Choice Award" வழங்கி கௌரவிக்கப்பட்டது; மேலும் Power Finance Corporation (PFC) Limited ஆனது புதைபடிவமற்ற எரிபொருள் பிரிவில் கார்ப்பரேட் சமூகப்பொறுப்பு விருதைப்பெற்றது.

**6. அண்மையில், 2024 – உலக புகையிலை ஒழிப்பு நாளன்று புகையிலை இல்லா கல்வி நிறுவனங்களை (ToFEI) செயல்படுத்துதல் குறித்த கையேட்டை வெளியிட்ட அமைச்சகம் எது?**

**அ. கல்வி அமைச்சகம் ☑**

ஆ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

இ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம்

ஈ. வேளாண்மை அமைச்சகம்

शिक्षा मंत्रालय
MINISTRY OF EDUCATION
सत्यमेव जयते

★ கல்வியமைச்சகத்தின் பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறையானது, புகையிலை இலா கல்வி நிறுவனங்களின் செயலாக்கக் கையேட்டை, 2024ஆம் ஆண்டு உலக புகையிலை ஒழிப்பு நாளில் புது தில்லியில், SEEDSஉடன் இணைந்து வெளியிட்டது. "Protecting Children from Tobacco Industry Interference" என்ற நடப்பு ஆண்டுக்கானக் கருப்பொருளுடன் ஒத்திசைந்த இக்கையேடு, சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட ToFEI வழிகாட்டுதல்களைச் செயல்படுத்த பள்ளிகளுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**7. பம்பை ஏரி அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. கேரளா

**ஆ. கர்நாடகா ☑**

இ. ஒடிசா

ஈ. குஜராத்

★ கர்நாடக மாநில தொல்பொருள் அருங்காட்சியகங்கள் மற்றும் பாரம்பரியத் துறையைச் சேர்ந்த குழுவொன்று, ஹம்பி உலக பாரம்பரியப் பகுதியில் அமைந்துள்ள பம்பை ஏரிக்கருகில் 2,500 ஆண்டுகள் பழமையான பாறை தங்குமிட ஓவியங்களைக் கண்டுபிடித்துள்ளது. ஹம்பி அருகே கர்நாடகாவின் கொப்பல் மாவட்டத்தில் அமைந்துள்ள பம்பை

ஏரி, இந்து புராணங்களில் உள்ள 5 புனித ஏரிகளுள் ஒன்றாகும். மலைகள் மற்றும் திருக்கோவில்களால் சூழப்பட்ட இது, இராமாயணம்போன்ற இந்து புராணங்களின் கலாச்சார முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

**8. '*Paraparatrechina neela*' என்பது சார்ந்த இனம் எது?**

**அ. எறும்பு ☑**



ஆ. மீன்

இ. சிலந்தி

ஈ. தவளை

★ அருணாச்சல பிரதேச மாநிலத்தின் தொலைதூர சியாங் பள்ளத்தாக்கில் இந்திய ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் '*Paraparatrechina neela*' என்ற ஒரு புதிய எறும்பு இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர். '*Paraparatrechina*' என்ற அரிய வகையைச் சேர்ந்த இந்த உயிரினம் அதன் உலோக நீலநிறத்தால் தனித்து தெரிகிறது; இதன் காரணமாக 'நீலா' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது 121 ஆண்டுகளில் கண்டறியப்பட்ட ஒரு புதிய '*Paraparatrechina*' இனமாகும்.

**9. அண்மையில், சேர்க்கை உற்பத்திமூலம் நிலையான விண்வெளி ஆய்வுக்காக கீழ்க்காணும் எந்நிறுவனத்துடன் ISRO கூட்டிணைந்துள்ளது?**

**அ. விப்ரோ 3D ☑**

ஆ. ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்

இ. கூகுள் 3D

ஈ. IBM

★ விப்ரோ 3D மற்றும் ISRO ஆகியவை PSLVஇன் 4ஆவது நிலைக்கான PS4 ஏவுகல எஞ்சினை வெற்றிகரமாக 3D-பிரிண்ட் செய்துள்ளன. இந்தச் சாதனையை ISROஇன் Dr V நாராயணன் பாராட்டினார். PS4 நிலையின் மேம்பட்ட வழிசெலுத்துதல் மற்றும் கட்டுப்பாட்டு அமைப்புகள் பல்வேறு செயற்கைக்கோள் திட்டங்களுக்கானத் துல்லியமான சுற்றுப்பாதை இடங்களைச் செயல்படுத்துகின்றன. கூட்டு உற்பத்திக்கான வடிவமைப்பு மற்றும் லேசர் பௌடர் பெட் ஃப்யூஷன் தொழில்நுட்பம், உற்பத்தியை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டமைப்பு ஒருமைப்பாட்டை மேம்படுத்துதல் ஆகியவற்றை இந்தக் கூட்டிணைவு பயன்படுத்தியுள்ளது.

**10. அண்மைய அரசாங்க தரவுகளின்படி, 2023-24 காலக்கட்டத்தில் இந்தியா எந்த நாட்டிலிருந்து அதிகப்படியான அந்நிய நேரடி முதலீட்டைப் பெற்றுள்ளது?**

அ. மொரீஷியஸ்



**ஆ. சிங்கப்பூர் ☑**

இ. வியட்நாம்

ஈ. சீனா

★ 2023-24ஆம் ஆண்டில், சிங்கப்பூரிலிருந்து இந்தியா அதிகப்படியான அந்நிய நேரடி முதலீட்டைப் (FDI) பெற்றுள்ளது. இந்திய அரசாங்க தரவுகளின்படி, இதன் சதவீதத்தில் 31.55% என்ற சரிவு காணப்பட்டபோதிலும் மொத்தமாக $11.77 பில்லியன் முதலீடு பெறப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, உலகப் பொருளாதாரத்தின் நிச்சயமற்ற தன்மை காரணமாக இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு சுமார் 3.5% குறைந்துள்ளது. இருப்பினும், இந்தக் காலக்கட்டத்தில் இந்தியாவிற்கான அந்நிய நேரடி முதலீட்டில் சிங்கப்பூர் முதலிடம் வகிக்கிறது.

**11. சமீபத்தில், ஆய்வகத்தில் தொற்றாத நிபா வைரஸ்போன்ற துகள்களை உருவாக்கும் முறையை உருவாக்கிய ஆராய்ச்சி நிறுவனம் எது?**

அ. மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனம்

ஆ. மரபியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் நிறுவனம்

**இ. மேம்பட்ட வைராலஜி நிறுவனம் ☑**

ஈ. இராமன் ஆராய்ச்சி நிறுவனம்

★ திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள மேம்பட்ட வைராலஜி நிறுவனத்தின் அறிவியலாளர்கள், தொற்றாத நிபா வைரஸ் போன்ற துகள்களை உருவாக்கியுள்ளனர். இந்தத் துகள்கள் வைரஸ்களை போலவே உள்ளன, ஆனால் மரபணு பொருட்கள் அவற்றில் இல்லாததால், அவை தொற்றா. அவை HPV, கல்லீரல் அழற்சி-B மற்றும் மலேரியா போன்ற நோய்களுக்கான தடுப்பூசிகளை திறம்பட உருவாக்கி, அறிகுறிகளை ஏற்படுத்தாமல் நோயெதிர்ப்பு சக்தியைத் தூண்டுகிறது. 20-200 nm அளவுள்ள இத்துகள், நோயெதிர்ப்பு மண்டலத்தை செயல்படுத்த நிணநீர் முனைகளில் நுழைந்து, உண்மையான வைரஸுக்கு எதிராக நோய் எதிர்ப்பு ஆற்றலை வழங்குகின்றன.

**12. அண்மையில் தனது ஓய்வை அறிவித்த தினேஷ் கார்த்திக் சார்ந்த விளையாட்டு எது?**

**அ. கிரிக்கெட் ☑**

ஆ. கால்பந்து

இ. கூடைப்பந்து

ஈ. ஹாக்கி



★ மூத்த விக்கெட் கீப்பர்-பேட்டரான தினேஷ் கார்த்திக், IPLஇல் இராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியிலிருந்து பிரியாவிடை பெற்றபிறகு தான் அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்தார். அவரது சர்வதேச கிரிக்கெட் வாழ்வு அனைத்து வடிவங்களிலும் சேர்த்து மொத்தம் 180 ஆட்டங்களில் அடங்கும். அவர் ஒரு டெஸ்ட் சதம் மற்றும் 17 அரை சதங்களுடன் 3463 ஓட்டங்களை இதுவரை குவித்துள்ளார். விக்கெட் கீப்பராக 172 விக்கெட்டுகளை அவர் கைப்பற்றியுள்ளார்.

**13. அண்மையில், எந்த நாட்டின் முதல் பெண் அதிபராக கிளாடியா ஷீன்பாம் தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

அ. மலேசியா

ஆ. தாய்லாந்து

இ. சிங்கப்பூர்

**ஈ. மெக்ஸிகோ ☑**



★ மெக்ஸிகோவின் முதல் பெண் அதிபராக கிளாடியா ஷீன்பாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தேர்தல் ஆணையத்தால் அவரது முன்னிலை உறுதிசெய்யப்பட்ட நிலையில், அவர் தனது வழிகாட்டியான அதிபர் ஆண்ட்ரேஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடரிடம் இருந்து வாழ்த்துகளைப் பெற்றார். 20,000-க்கும் மேற்பட்ட அரசியல் பதவிகளுக்காக 2024 ஜூன்.02 அன்று தேர்தல் நடந்தது. கிளாடியா ஷீன்பாம் 2024 அக்டோபர்.01 அன்று பதவியேற்பார்.


**14. 'JADES-GS-z14-0' என்றால் என்ன?**

**அ. விண்மீன் மண்டலம் ☑**

ஆ. நீர்மூழ்கிக்கப்பல்

இ. விமானம்

ஈ. ஆக்கிரமிப்பு தாவரம்



★ ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியானது பெருவெடிப்பு நிகழ்ந்து 290 மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு உருவான, 'JADES-GS-z14-0' என்ற விண்மீன் மண்டலத்தைக் கண்டறிந்து புதிய சாதனை படைத்துள்ளது. இது முந்தைய 325 மில்லியன் ஆண்டுகள் சாதனையை முறியடித்தது. விண்மீனின் எதிர்பாராத பிரகாசம் விரைவான விண்மீன் உருவாக்கத்தைக் குறிக்கிறது. ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியால் கணிசமான ஆக்சிஜன் இருப்பு கண்டறியப்பட்டது, அவ்விண்மீனின் மேம்பட்ட முதிர்ச்சியைக் குறிக்கிறது.

**15. அண்மையில், 2023-24 நிதியாண்டில் UKஇலிருந்து உள்நாட்டு பெட்டகங்களுக்கு RBI எவ்வளவு தங்கத்தை கொண்டு வந்தது?**

அ. 50 மெட்ரிக் டன்

**ஆ. 100 மெட்ரிக் டன் ☑**

இ. 150 மெட்ரிக் டன்

ஈ. 200 மெட்ரிக் டன்



★ 2023-24 நிதியாண்டில், இந்திய ரிசர்வ் வங்கி இங்கிலாந்திலிருந்து 100 மெட்ரிக் டன் தங்கத்தை மும்பை மற்றும் நாக்பூரில் உள்ள இந்திய பெட்டகங்களுக்கு கொண்டு வந்தது. இந்தியாவின் தங்க இருப்பு 822 மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது, கிட்டத்தட்ட 50% இப்போது உள்நாட்டில் சேமிக்கப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியின் ரூபாய் நோட்டுகள் தங்கம், அரசுப்பத்திரங்கள் மற்றும் அயல்நாட்டு நாணயச் சொத்துக்கள் போன்ற சொத்துக்களால் RBI சட்டம், 1934இன்கீழ் பாதுகாக்கப்படுகின்றன. அண்மைய புவிசார் அரசியல் பதட்டங்கள் வெளிநாடுகளில் தங்கத்தை சேமிப்பதில் உள்ள அபாயங்களை வலியுறுத்தியது.

**16. '*Tmesipteris oblanceolata*' என்றால் என்ன?**

**அ. முட்கரண்டி வடிவிலான பரணி ☑**

ஆ. மீன்

இ. சிறுகோள்

ஈ. சிலந்தி



★ ஒரு புதிய ஆராய்ச்சி, முட்கரண்டி வடிவிலான பரணி என்ற செடிவகையான, '*Tmesipteris oblanceolata*', இதுவரை அறியப்பட்ட மிகப்பெரிய மரபணுத் தொகுதியைக் கொண்டுள்ளது. ஒரு மரபணுத்தொகுதி என்பது ஓர் உயிரினத்தின் முழுமையான மரபணுத் தகவலை உள்ளடக்கியதாகும். இந்தப் பரணி 160 பில்லியன் அடிப்படை ஜோடிகளைக் கொண்டுள்ளது; இது மனித மரபணுத் தொகுதியைவிட ஐம்பது மடங்கு அதிகமாகும். தொன்மாக்களுக்கு முந்தைய பழங்கால தாவரக்குழுவைச் சேர்ந்த இது, நியூ கலிடோனியா மற்றும் அருகிலுள்ள பசிபிக் தீவுகளைப் பூர்வீகமாகக் கொண்டவை. மழைக்காடுகளில் இது செழித்து வளர்கிறது.

**17. மகாராஷ்டிராவின் எந்தப் புலிகள் காப்பகம் அண்மையில், 'பெரிய காட்டு ஆந்தை' பற்றிய முதல் நிழற்படப் பதிவைப் பதிவுசெய்தது?**

அ. தடோபா புலிகள் காப்பகம்

**ஆ. பெஞ்ச் புலிகள் காப்பகம் ☑**

இ. கொய்னா புலிகள் காப்பகம்

ஈ. உம்ரெட் கர்ஹண்ட்லா சரணாலயம்



★ மகாராஷ்டிராவில் உள்ள பெஞ்ச் புலிகள் காப்பகம் அண்மையில் ஒரு பெரிய காட்டு ஆந்தையின் முதல் நிழற்படத்தை ஆவணப்படுத்தியது. '*Ketupa nipalensis*' என்பது அப்பெரிய காட்டு ஆந்தையின் அறிவியல் பெயராகும். இந்தியா, இலங்கை மற்றும் தென்கிழக்காசியா முழுவதும் காடுகள் மற்றும் புல்வெளிகள்போன்ற பல்வேறு சூழல்களில் இந்தப் பெரிய காட்டு ஆந்தை இனம் வாழ்கிறது. அதன் செழுமையான பழுப்பு நிறம் மற்றும் வெண்ணிற புள்ளிகள்கொண்ட

வடிவத்தால் அது அடையாளம் காணப்படுகிறது. பல்வேறு இரைகளை உண்ணும் இப்பறவை பெரும்பாலும் இரவு நேரத்தில் வேட்டையைத் தொடங்கும். இப்பறவையினம் இந்திய வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972இன்கீழ் பாதுகாக்கப்படுகிறது.

**18. அண்மையில், பான் சர்வதேச போட்டியில் பட்டம் வென்ற இந்திய வீரர் / வீராங்கனை யார்?**

அ. ஆகர்ஷி காஷ்யப்

ஆ. அஷ்மிதா சாலிஹா

இ. P V சிந்து

**ஈ. தன்வி சர்மா ☑**




★ நம்பிக்கைக்குரிய இந்திய பாட்மிண்டன் வீராங்கனை தன்வி சர்மா, பான் சர்வதேச போட்டியில் சீன தைபேயின் வாங் பெய் யூவை நேர் செட்களில் தோற்கடித்து வெற்றியை உறுதிசெய்தார். அரைமணிநேரத்திற்கும் மேலாக நடந்த இந்தப் போட்டியில் தன்வி 21–19 22–20 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். உலக அளவில் 181ஆம் இடத்தில் உள்ள பஞ்சாபைச் சேர்ந்த தன்வி சர்மா (15) தனது திறமையை இதன்மூலம் வெளிப்படுத்தினார்.

**19. அண்மையில், நிலவுக்கான தரப்படுத்தப்பட்ட நேர அமைப்பை உருவாக்குவதற்காக NASA எந்த விண்வெளி நிறுவனத்துடன் கூட்டிணைந்துள்ளது?**

அ. ISRO

**ஆ. ESA ☑**

இ. JAXA

ஈ. CNSA

★ NASA மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) ஆகியவை ஆர்ட்டெமிஸ் திட்டத்திற்கான தரப்படுத்தப்பட்ட நிலவு நேர அமைப்பை உருவாக்குவதற்காக கூட்டிணைந்துள்ளன. இந்த முன்முயற்சியானது சர்வதேச மற்றும் தனியார் நிலவு திட்டங்களை ஒருங்கிணைக்க ஓர் ஒருங்கிணைந்த நேரக்கட்டுப்பாட்டின் அவசியத்தை பூர்த்தி செய்கிறது. சீனா, இந்தியா மற்றும் தனியார் நிறுவனங்களின் வரவிருக்கும் நிலவுத் திட்டங்களின் வெற்றிகரமான செயல்பாடு மற்றும் ஒருங்கிணைப்புக்கு ஒரு பொதுவான நிலவு நேர அமைப்பு அவசியமாகும்.

**20. அண்மையில், 'பிரவாஹா' என்ற கணிப்பிய பாய்ம இயக்கவியல் மென்பொருளை உருவாக்கிய விண்வெளி நிறுவனம் எது?**

**அ. ISRO ☑**

ஆ. JAXA

இ. ESA

ஈ. CNSA

★ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் கணிப்பிய பாய்ம இயக்கவியல் மென்பொருளான, 'பிரவாஹா'வை உருவாக்கியுள்ளது. Parallel RANS Solver for Aerospace Vehicle Aero–thermo–dynamic Analysis (PraVaHa) ஆனது ஏவுகலங்களுக்கான காற்றோட்டத்தை உருவகப்படுத்துகிறது; அவற்றின் வடிவம், கட்டமைப்பு மற்றும் வெப்ப பாதுகாப்பு அமைப்புகளை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றுகிறது. இது ககன்யான் திட்டத்தின் ஏவுகலங்களை பகுப்பாய்வு செய்ய பயன்படுத்தப்படுகிறது.

**21. உயர்கல்வித்துறையானது அண்மையில் எண்ம நூலக தளமான 'ராஷ்ட்ரிய இ–புஸ்தகலயா'வை உருவாக்கும் நோக்கத்திற்காக கீழ்க்காணும் எந்த நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ. மத்திய இடைநிலைக் கல்வி வாரியம்

**ஆ. தேசிய புத்தக அறக்கட்டளை ☑**

இ. தேசிய நூலக சங்கம்

ஈ. கலாச்சார அமைச்சகம்

★ 24/7 எண்ம நூலக தளமான 'ராஷ்ட்ரிய இ–புஸ்தகலயா'வை உருவாக்கும் நோக்கத்திற்காக பள்ளிக்கல்வித் துறையும் தேசிய புத்தக அறக்கட்டளையும் புது தில்லியில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. செயலாளர் K சஞ்சை மூர்த்தி, புத்தக அணுகலை மேம்படுத்துவதற்கும், பல மாநிலங்களில் உள்ள நூலக அணுகல் சிக்கலைத் தீர்ப்பதற்கும் இது உதவும் என எடுத்துரைத்தார். இன்னும் 2–3 ஆண்டுகளில் இந்தத் தளத்தில் 100–க்கும் மேற்பட்ட மொழிகளில் 10,000 புத்தகங்கள் இடம்பெறும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

**22. 'பினோம் இந்தியா' திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. இந்தியாவின் மரபணு பன்முகத்தன்மையை ஆய்வுசெய்தல்

**ஆ. கார்டியோ-மெட்டபாலிக் நோய்களுக்கு இந்திய அடிப்படையிலான இடர் முன்கணிப்பு மாதிரிகளை உருவாக்குதல் ☑**

இ. பாரம்பரிய இந்திய மருத்துவத்தை ஊக்குவித்தல்

ஈ. புதிய மருந்துகளுக்கான மருத்துவ பரிசோதனைகளை நடத்துதல்

★ அண்மையில், CSIR அதன் 'பினோம் இந்தியா' திட்டத்தின் முதல் கட்டத்தை முடித்து, பினோம் இந்தியா அன்பாக்சிங் 1.0 நிகழ்வை நடத்தியது. 2023 டிசம்பர்.07 அன்று தொடங்கப்பட்ட, 'பீனோம் இந்தியா' கார்டியோ–மெட்டபாலிக் நோய்களுக்கு இந்திய அடிப்படையிலான (india–specific) இடர் முன்கணிப்பு மாதிரிகளை உருவாக்குவதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பதினேழு மாநிலங்கள் மற்றும் 24 நகரங்களிலிருந்து கிட்டத்தட்ட 10,000 பங்கேற்பாளர்களை உள்ளடக்கி, மருத்துவம், வாழ்க்கை முறை மற்றும் உயிர்வேதியியல் தகவல்கள் உள்ளிட்ட விரிவான சுகாதாரத் தகவல்களைச் சேகரிக்கும் முதல் நீண்ட இந்திய சுகாதார ஆய்வு ஆகும்.

**23. அண்மையில், உலக தகவல் சங்கத்தின் (WSIS) உச்சிமாநாடு நடைபெற்ற இடம் எது?**

அ. லண்டன்

ஆ. பாரிஸ்

**இ. ஜெனிவா ☑**

ஈ. புது தில்லி

★ சுவிச்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் தகவல் சங்கத்தின் (WSIS) உயர்மட்ட நிகழ்வு 2024–க்கான உலக உச்சிமாநாட்டில் இந்தியா பங்கேற்றது. WSIS+20 கருத்துக்களமானது, 20 ஆண்டுகளுக்கு முன்பு ஜெனீவா (2003) மற்றும் டுனிஸ் (2005) ஆகிய இடங்களில் நடைபெற்ற WSISஇன் கருத்துக்களங்களை நினைவுகூர்ந்தது. ITU, UNESCO, UNDP மற்றும் UNCTAD ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுதாகும் இம்மாநாடு. மக்கள்சார்ந்த, உள்ளடக்கிய மற்றும் மேம்பாடுசார் தகவல் சமூகத்தை வளர்ப்பதன் மூலம் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்ப்பதே இதன் நோக்கமாகும்.

**24. அண்மையில் களைக்கொல்லி–சகிப்புத்தன்மை கொண்ட (Ht) பாசுமதி அரிசி வகைகளை வணிகமயமாக்கிய அமைப்பு எது?**

**அ. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR) ☑**

ஆ. அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில்

இ. விவசாய அமைச்சகம்

ஈ. மேற்குறிப்பிட்ட எதுவுமில்லை

★ களைகளைக் கட்டுப்படுத்துவதற்காக களைக்கொல்லி–சகிப்புத்தன்மை கொண்ட (Ht) பாசுமதி அரிசி வகைகளை ICAR வணிகமயமாக்கியுள்ளது. நேரடி நெல்விதைப்பு முறையானது பாரம்பரிய நடவுக்கு மாற்றாக திறமையான மற்றும் நிலையான சாகுபடியை வழங்குகிறது. ICARஇன் மரபணு மாற்றப்படாத Ht பாசுமதி அரிசி நேரடியாக களைக்கொல்லியைப் பயன்படுத்த அனுமதிக்கிறது. நேரடி நெல்விதைப்பு முறையில் கையால் களையெடுப்பது விளைச்சலை அதிகரிக்கிறது என ஆராய்ச்சி கூறுகிறது. அதிக நெல் விளைச்சலுக்கு சூழல்–நட்பு களையெடுப்பை ICAR பரிந்துரைக்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆந்திர பிரதேசத்துக்கு இனி தலைநகரம் இல்லை!**

ஆந்திர பிரதேசம் மற்றும் தெலங்கானாவின் பொதுத்தலைநகரமாக ஹைதராபாத் செயல்படுவதற்கு வழங்கப்பட்ட 10 ஆண்டுகள் அவகாசம் 02–06–2024ஆம் தேதியுடன் நிறைவடைந்தது. ஒருங்கிணைந்த ஆந்திர பிரதேசத்தில் இருந்து பிரிந்து நாட்டின் 29ஆவது மாநிலமாக தெலங்கானா கடந்த 2014 ஜூன்.02ஆம் தேதி உருவானது. அந்த ஆண்டு மார்ச்.01ஆம் தேதி இயற்றப்பட்ட ஆந்திர பிரதேச மறுசீரமைப்புச் சட்டத்தில் தெலங்கானா, ஆந்திர பிரதேசம் ஆகிய இருமாநிலங்களும் பத்து ஆண்டுகளுக்கு மிகாமல் ஹைதராபாதை பொதுத்தலைநகரமாகக்கொண்டு செயல்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

---

**2. நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியது சீன விண்கலம்.**

சீன தேசத்தின் சாங்கே–6 விண்கலம் நிலவின் தொலைதூரப்பகுதியில் வெற்றிகரமாக தரையிறங்கியது. இந்த விண்கலத்தில் ஆர்பிட்டர், லேண்டர், அசென்டர் மற்றும் புவிக்குத் திரும்பிவரும் ரிட்டர்னர் கலன் ஆகிய நான்கு பகுதிகள் இருக்கின்றன. பூமியின் பார்வையிலிருந்து மறைந்து காணப்படும் நிலவின் இருள்பகுதியில் விண்கலம் தரையிறங்கியதைத் தொடர்ந்து, நிலவின் தரைப்பகுதியில் அசெண்டர் நகர்ந்துசென்று பாறைகள், துகள்கள் உள்ளிட்டவற்றைச் சேகரித்து ஆர்பிட்டரில் கொண்டுசேர்க்கும். அவற்றை ரிட்டர்னர் கலன் வாயிலாக பூமிக்கு எடுத்துவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

---

**3. திருவள்ளூர் அருகே பல்முனை சரக்குப் போக்குவரத்துப் பூங்கா.**

திருவள்ளூர் அருகே மப்பேடு பகுதியில் ₹1,200 கோடியில் நடைபெற்று வரும் பல்முனை சரக்குப் போக்குவரத்துப் பூங்கா அமைக்கும் பணியை மத்திய குழு அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வுமேற்கொண்டனர். திருவள்ளூர் அருகே கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், மப்பேடு ஊராட்சியில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், நேஷனல் ஹைவே லாஜிஸ்டிக்ஸ் மேலாண்மை நிறுவனம், சென்னை துறைமுகம் ஆகியவை இணைந்து பொது மற்றும் தனியார் பங்களிப்போடு 141 ஏக்கர் பரப்பளவில் ₹1,200 கோடியில் பல்முனைய சரக்கு வாகனப் போக்குவரத்துப் பூங்கா அமைக்க கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானது.

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அகாட்சுகி திட்டத்துடன் தொடர்புடைய விண்வெளி நிறுவனம் எது?**



அ. NASA


ஆ. ISRO

**இ. JAXA ☑**

ஈ. ESA

★ ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் (JAXA) அகாட்சுகி உடனான தொடர்பை இழந்தது. இது 2010இல் ஜப்பானால் மற்றொரு கோளுக்குச் செல்வதற்கான முதல் வெற்றிகரமான திட்டமாகும். அகாட்சுகி, வெள்ளிக்கோளைச்சுற்றியுள்ள நிலநடுக்கோடு சுற்றுப்பாதையில் திரிந்து அக்கோளின் நச்சு வளிமண்டலம் மற்றும் எரிமலை மேற்பரப்பு, வானிலை முறைகள், மின்னல் மற்றும் வலுவான காற்றினால் ஏற்படும் மீ–சுழற்சி ஆகியவற்றை ஆய்வுசெய்தது. இது 2014 வரை செயல்பட்ட ESAஇன் வீனஸ் எக்ஸ்பிரஸுக்கு துணையாக இருந்தது. அது புற–ஊதா மற்றும் அகச்சிவப்பு கேமராக்களைப் பயன்படுத்தி உலகளவில் மேகங்கள் மற்றும் வளிமண்டல கட்டமைப்புகளை வரைபடமாக்கியது.

**2. '*Dictyostelium discoideum*' என்றால் என்ன?**



**அ. அமீபா ☑**

ஆ. பாசி

இ. களை

ஈ. மருந்து

★ பசுந்தாடி மரபணுக்கள் '*Dictyostelium discoideum*' அமீபாவில் இயற்கையான பொதுநலப்பண்புகளை இயக்குகிறன என்று அறிவியலாளர்கள் கண்டுபிடித்தனர். இந்த மரபணுக்கள் தனிநபர்கள் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு ஒத்துழைக்க உதவுகின்றன; இது வெவ்வேறு மரபணு பதிப்புகளைக் கொண்டடோர்க்கு தீங்கு விளைக்கும் நடத்தையை ஏற்படுத்துகிறது. இயற்கையில் பொதுநலப்பண்பு என்பது ஒரு விலங்கு தனக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் செயல்படும் நடத்தையை உள்ளடக்கியது; ஆனால் அதன் இனத்தின் மற்றவற்றுக்கு நன்மை பயக்கும்.

**3. 2025 ஜூன் 8–10 வரை இந்தியாவின் தில்லியில் 81ஆவது IATA வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் உலக வான் போக்குவரத்து உச்சிமாநாட்டை நடத்தவுள்ள நாடு எது?**

அ. நேபாளம்

ஆ. சீனா

**இ. இந்தியா ☑**

ஈ. ரஷ்யா

★ சர்வதேச வான் போக்குவரத்துக் கழகத்தின் (IATA) வருடாந்திர பொதுக்கூட்டத்தை (AGM) அடுத்த ஆண்டு இந்தியா நடத்தவுள்ளது. 1945இல் நிறுவப்பட்ட IATA, உலகளாவிய விமானத்தொழிற்துறையை பிரதிநிதித்துவப்படுத்துகிறது; அதன் நலன்களுக்காக வாதிடுகிறது மற்றும் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்தற்கு தொழில் தரங்களை நிறுவுகிறது. முன்னணி பயணிகள் மற்றும் சரக்கு விமானங்கள் உட்பட 330 உறுப்பினர் விமான நிறுவனங்களுடன், IATA விமானத்துறையை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தலைமையகம் கனடாவின் மாண்ட்ரீலில் அமைந்துள்ளது.

**4. அண்மையில், அஸ்ஸாமின் எந்த மாவட்டத்தில் இந்திய மேலாண்மை நிறுவனத்தை (IIM) நிறுவ மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது?**

அ. காமரூபம் ☑

ஆ. ஜோர்காட்

இ. கோலாகாட்

ஈ. சோனித்பூர்

★ காமரூபம் மாவட்டத்தில் புதிய இந்திய மேலாண்மை நிறுவனத்தை நிறுவுதற்கான (IIM) அஸ்ஸாமின் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. IIM ஆமதாபாத் இத்திட்டத்திற்கு வழிகாட்டுகிறது. இம்முடிவு வடகிழக்கில் கல்வி மற்றும் தொழிற்துறையை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது; அங்கு தற்போது ஒரே ஒரு IIM மட்டுமே உள்ளது. IIM ஆமதாபாத்துடனான அஸ்ஸாம் மாநிலத்தின் ஒத்துழைப்பு கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றுவதற்கான அதன் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்த முயற்சியால் அண்டை மாநிலங்களான நாகாலாந்து, அருணாச்சல பிரதேசம் ஆகியவை பயனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5. ஆண்டுதோறும், 'வன்தாக்குதலால் பாதிக்கப்பட்ட அப்பாவி குழந்தைகளுக்கான உலக நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. ஜூன்.03

**ஆ. ஜூன்.04 ☑**

இ. ஜூன்.05

ஈ. ஜூன்.06



★ ஆண்டுதோறும் ஜூன்.4ஆம் தேதி அன்று, வன்தாக்குதலுக்கு ஆளான அப்பாவி குழந்தைகளுக்கான உலக நாள், அனுசரிக்கப்படுகிறது. இந்நாள் உலகெங்கிலும் உள்ள குழந்தைகளின் துன்பங்களை எடுத்துக்காட்டுகிறது. ஆகஸ்ட் 19, 1982இல் நிறுவப்பட்ட இந்நாள், அப்பாவி குழந்தைகள் தாங்கும் வலியை மையமாகக்கொண்டுள்ளது. 1997இல் நிறுவப்பட்ட போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐநா அலுவலகம் (UNODC), குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


**6. ஹைட்ராக்ஸியூரியா மருந்துடன் தொடர்புடைய நோய் எது?**

அ. டெங்கு

ஆ. காசநோய்

இ. மலேரியா

**ஈ. அரிவாள் செல் இரத்த சோகை ☑**



★ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) இந்தியாவில் இருபது மில்லியனுக்கும் அதிகமான மக்களை பாதிக்கும் அரிவாள் செல் இரத்த சோகை நோயின் குறிப்பிடத்தக்க சவாலை எதிர்கொள்கிறது. சிறார் நோயாளிகளுக்கு ஏற்ற ஹைட்ராக்ஸியூரியா சூத்திரங்கள் இல்லாதது, சிறார்களுக்கு துல்லியமான அளவை மருந்தளவை வழங்குவதில் சிக்கலை உண்டாக்குகிறது. அரிவாள் செல் இரத்த சோகை நோய் மற்றும் தலசீமியாவுக்கு சிகிச்சையளிப்பதில் பயனுடைய ஹைட்ராக்ஸியூரியா, தற்போது குழந்தைகளுக்கு ஏற்ற மாதிரியில் இல்லை.

★ இதற்குத் தீர்வுகாண, இளம் நோயாளிகளுக்கு சிகிச்சை நெறிமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, குழந்தைகளுக்கான குறைந்த அளவிலான ஹைட்ராக்ஸியூரியா சூத்திரங்களை உருவாக்குவதற்கும் வணிகமயமாக்குவதற்கும் ICMR ஒத்துழைப்பை நாடுகிறது.

**7. 2024 – உலக சுற்றுச்சூழல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Land restoration, desertification and drought resilience ☑




ஆ. Beat Plastic Pollution

இ. Ecosystem Restoration

ஈ. Solution to plastic pollution

★ உலக சுற்றுச்சூழல் நாளானது கடந்த 1973 முதல் ஆண்டுதோறும் ஜூன்.05 அன்று கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் இலட்சக்கணக்கானோர் இதை கடைப்பிடிப்பதில் பங்கேற்கின்றனர். "Land restoration, desertification and drought resilience" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் உலக சுற்றுச்சூழல் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**8. 2024 – உலக சுற்றுச்சூழல் நாளுக்கானக் கொண்டாட்டங்களை நிகழ்த்திய நாடு எது?**

அ. இந்தியா



ஆ. சீனா

**இ. சவூதி அரேபியா ☑**

ஈ. ரஷ்யா

★ உலக சுற்றுச்சூழல் நாளானது ஆண்டுதோறும் ஜூன்.05ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது. இது சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பை ஊக்குவிக்கிறது. சவூதி அரேபியாவால் நடத்தப்படும் 2024ஆம் ஆண்டுக்கான உலக சுற்றுச்சூழல் நாளின் கொண்டாட்டங்கள், பாலைவனமாக்கலை எதிர்த்துப்போராடுவதற்கான ஐநா அமைப்பின் (UNCCD) 30ஆம் ஆண்டு நிறைவுடன் ஒத்துப்போகிறது. ஒவ்வோர் ஆண்டும் தற்போதைய சுற்றுச் சூழல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் தேர்வுசெய்யப்படுகிறது.

★ 2018ஆம் ஆண்டில் 45ஆவது உலக சுற்றுச்சூழல் நாளை, இந்தியா, "Beat Plastic Pollution" என்ற கருப்பொருளுடன் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

**9. 2024 – தைவான் தடகள ஓபனில், இந்தியா, எத்தனை பதக்கங்களை வென்றது?**

அ. 5



ஆ. 6

**இ. 7 ☑**

ஈ. 8

★ இந்திய விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் 2024–தைவான் தடகள ஓபனில் மொத்தம் ஏழு பதக்கங்களுடன் (மூன்று தங்கம், மூன்று வெள்ளி மற்றும் ஒரு வெண்கலம்) போட்டியை நிறைவு செய்தனர். ஈட்டி எறிதலில் DP மனு முதல் தங்கத்தையும், பெண்களுக்கான நீளம் தாண்டுதலில் நயனா ஜேம்ஸ் மற்றொரு தங்கத்தையும் வென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்களுக்கான 800 மீட்டர் ஓட்டத்தில் அங்கேஷ் சௌத்ரி தங்கம் வென்றார். சோம்நாத் சவுகான், நித்யா ராம்ராஜ் மற்றும் தேவ் மீனா ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களையும், பெண்களுக்கான 400 மீட்டர் ஓட்டத்தில் VK விஸ்மயா வெண்கலத்தையும் வென்றனர். உலக தடகள கான்டினென்டல் சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியான இந்த நிகழ்வு தைபேயில் நடந்தது.

**10. அண்மையில், 2023–24இல் இந்தியாவின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி இடமாக உருவான நாடு எது?**

அ. மொரீஷியஸ்

**ஆ. நெதர்லாந்து ☑**

இ. வியட்நாம்

ஈ. சீனா



★ இந்தியாவின் ஒட்டுமொத்த சரக்கு ஏற்றுமதியில் 3 சதவீத சரிவு இருந்தபோதிலும், அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தைத் தொடர்ந்து 2023–24இல் இந்தியாவின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி இடமாக நெதர்லாந்து ஆனது. நெதர்லாந்திற்கான முக்கிய ஏற்றுமதிகளில் பெட்ரோலிய பொருட்கள் ($14.29 பில்லியன்), மின்சார பொருட்கள், வேதிகள் மற்றும் மருந்துகள் ஆகியவை அடங்கும். இதன் விளைவாக, நெதர்லாந்துடனான இந்தியாவின் வர்த்தக உபரி $17.4 பில்லியனாக உயர்ந்துள்ளது; இது 2022–23 நிதியாண்டில் $13 பில்லியனாக இருந்தது என்று வர்த்தக அமைச்சகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

11. **அண்மையில், 2024 – ஹிந்தி சாகித்ய பாரதி விருது பெற்றவர் யார்?**

அ. ரமேஷ்சந்திர ஷா

ஆ. சீனி விஸ்வநாதன்

**இ. கிருஷ்ணா பிரகாஷ் ☑**

ஈ. சந்தீப் ஜோஷி



★ மும்பை காவல்துறையின் பயங்கரவாத எதிர்ப்புப்பிரிவான, 'ஃபோர்ஸ் ஒன்' பிரிவில் புகழ்பெற்ற கிருஷ்ண பிரகாஷ், மும்பையின் சப் மீ ராம் ஷஷ்வத் ஸ்ரீ ராம் நிகழ்ச்சியில் வருடாந்திர ஹிந்தி சாகித்ய பாரதி விருதைப் பெற்றுள்ளார். 'சூப்பர் போலீஸ்' என்று அழைக்கப்படும் கிருஷ்ண பிரகாஷ், எலைட் ஃபோர்ஸ் ஒன்றுக்குத் தலைமைதாங்கி, 2 முறை கின்னஸ் உலக சாதனை படைத்தவராவார்.

12. **சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. மத்திய பிரதேசம்

இ. மகாராஷ்டிரா

ஈ. ஒடிஸா



★ தமிழ்நாடு வனத்துறையினர் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் மூன்று நாட்கள் நடைபெறவுள்ள யானைகள் கணக்கெடுக்கும் பணியை தொடங்கியுள்ளனர். தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சந்திப்பில் அமைந்துள்ள இந்தக் காப்புக்காடு நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தின் ஒரு பகுதியாகும். இது முதுமலை, பந்திப்பூர் மற்றும் பிலிகிரி இரங்கசுவாமி திருக்கோவில் புலிகள் காப்பகங்களுடன் இணைந்துள்ளது; இம்மூன்றிலும் கூட்டாக 280–க்கும் மேற்பட்ட புலிகள் உள்ளன. 2013இல் புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்ட இது, கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளை இணைத்து பல்லுயிர்களின் வாழ்விடமாகத் திகழ்கிறது.

13. **அண்மையில், "நன் ஆஃப் தி அபோவ்" (NOTA) விருப்பம் மத்திய பிரதேசத்தின் எந்தத் தொகுதியில் இரண்டாம் இடத்தைப் பிடித்தது?**

அ. குவாலியர்

**ஆ. இந்தூர் ☑**

இ. கஜுராஹோ

ஈ. ஜபல்பூர்



★ மத்திய பிரதேசத்தின் இந்தூர் தொகுதியில், "நன் ஆஃப் தி அபோவ்" (NOTA) விருப்பம் 2,18,674 வாக்குகளைப் பெற்று 2ஆமிடத்தைப் பிடித்தது. எந்த ஒரு வேட்பாளர்களையும் தேர்வுசெய்யாமல், எதிர்மறையான கருத்துக்களை வெளிப்படுத்தாமல், இரகசியம் காத்து, வாக்காளர்கள் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்க NOTA விருப்பம் அனுமதிக்கிறது. 2013 சட்டமன்றத் தேர்தலில் முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட இது, PUCL vs Union of India வழக்கில், உச்சநீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்டது.

**14. அண்மையில், 'கார்பன் விலை நிர்ணயத்தின் நிலை மற்றும் போக்குகள் – 2024' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. UNEP


ஆ. UNDP

**இ. உலக வங்கி ☑**

ஈ. IMF

★ உலக வங்கியின், "State and Trends of Carbon Pricing–2024" அறிக்கையானது, 2023ஆம் ஆண்டில் CP வருவாய், 75 உலகளாவிய CP கருவிகள் உலகளாவிய பைங்குடில் வாயு உமிழ்வுகளில் 24%ஐ உள்ளடக்கி $100 பில்லியன் டாலர்களைத் தாண்டியது எனக்கூறுகிறது. பிரேசில், இந்தியா மற்றும் துருக்கி ஆகியவை CP செயல்படுத்தலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்துள்ளன; அதே நேரத்தில் சீனாவும் இந்தியாவும் கரிமத்தை வழங்குவதில் முன்னணியில் உள்ளன. கார்பன் விலை நிர்ணயமானது முதன்மையாக $CO_2$ விலை நிர்ணய வழிமுறைகள் மூலம் பைங்குடில் வாயு உமிழ்வுக்கான செலவுகளை இணைக்கிறது.

**15. '*Parengyodontium album*' என்றால் என்ன?**



அ. அமீபா

**ஆ. பூஞ்சை ☑**

இ. பாக்டீரியா

ஈ. புரதம்

★ இராயல் நெதர்லாந்து கடலாராய்ச்சி நிறுவனத்தைச்சேர்ந்த கடல் நுண்ணுயிரியலாளர்கள் கடலிலுள்ள பிளாஸ்டிக் பாலிஎதிலீனை (PE) உடைக்கக்கூடிய கடற்பூஞ்சையான, '*Parengyodontium album*'ஐ கண்டுபிடித்துள்ளனர். இந்தப் பூஞ்சை PE– பெறப்பட்ட கார்பனை பூஞ்சை உயிரியாக மாற்றுகிறது; UV சூரியவொளிக்கதிர் ஆரம்பக்கட்ட PE ஒளிச் சிதைவுக்கு உதவுகிறது. ஆண்டுதோறும், மனிதர்கள் 400 பில்லியன் கிகி பிளாஸ்டிக்கை உற்பத்தி செய்கிறார்கள்; அவற்றில் பெரும்பாலானவை கடலில் கலந்து கடலை மாசுபடுத்துகின்றன.

**16. அண்மையில், தேசிய அளவிலான ஒருங்கிணைப்புக் குழு உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்பு திட்டத்திற்கான முதல் கூட்டத்தை எந்த இடத்தில் நடத்தியது?**



**அ. புது தில்லி ☑**

ஆ. பெங்களூரு

இ. சென்னை

ஈ. ஹைதராபாத்

★ தேசிய அளவிலான ஒருங்கிணைப்புக்குழு (NLCC) புது தில்லியில் உள்ள கூட்டுறவு அமைச்சகத்தில், உலகின் மிகப் பெரிய தானிய சேமிப்புத் திட்டத்தைப் பற்றி விவாதிப்பதற்காக அதன் முதலாவது கூட்டத்தைக் கூட்டியது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் கிடங்குகள், செயலாக்க அலகுகள் மற்றும் நியாய விலைக் கடைகளை நிறுவுவதன்மூலம் அடிமட்ட அளவில் விவசாய உள்கட்டமைப்பை மேம்படுத்துவதை இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பல்வேறு அரசாங்க திட்டங்களை ஒருங்கிணைக்கிறது மற்றும் NCDC, NABARD, FCI மற்றும் CWCபோன்ற நிறுவனங்களால் சம்பந்தப்பட்ட மாநிலங்கள்/UT–களுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

**17. அண்மையில், 'உலகளாவிய மண் கூட்டாண்மையின் 12ஆவது முழுமையான மாநாட்டை' நடத்திய அமைப்பு எது?**

**அ. உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO) ☑**

ஆ. உலக வானிலை அமைப்பு (WMO)

இ. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் (UNDP)

ஈ. உலக வங்கி

★ 2024 ஜூன்.03–05 வரை ஐநாஇன் உணவு மற்றும் உழவு அமைப்பால் உலகளாவிய மண் கூட்டாண்மையின் 12ஆவது முழுமையான மாநாடு நடத்தப்பட்டது. இதில் 700 பங்காளர்கள் மற்றும் FAO உறுப்பினர்கள் இருந்தனர். உலகளாவிய மண் கூட்டாண்மை என்பது உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பொறிமுறையாகும்; இது நிலையான மண் மேலாண்மையை ஊக்குவிக்கிறது மற்றும் உலகம் முழுவதும் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

★ உலகளாவிய மண் கூட்டாண்மையின் பங்காளர்கள் மற்றும் FAO உறுப்பினர்களுக்கு அறிவு & நிபுணத்துவத்தை பரிமாறிக்கொள்வதற்கும், உலகளாவிய மண் நிகழ்ச்சி நிரல்பற்றிய முக்கிய முடிவுகளை எடுப்பதற்கும் இந்த மாநாடு ஒரு முக்கிய தளமாக விளங்குகிறது.

**18. ஆயுதப்படைகளுக்காக சிறப்பு டெலி மனாஸ் பிரிவை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் அண்மையில் எந்த அமைச்சகத்துடன் கையெழுத்திட்டது?**

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. உழவு அமைச்சகம்

**இ. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் ☑**

ஈ. தகவல் தொடர்பு அமைச்சகம்

★ சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகங்கள், ஆயுதப்படைகளுக்காக சிறப்பு மனநல ஆதரவை வழங்கும் பிரத்யேக 'டெலி மனாஸ்' பிரிவு ஒன்றை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த முன்முயற்சி ஆனது அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தற்போதுள்ள 51 'டெலி மனாஸ்' பிரிவுகளைச் சேர்த்து, நாடு முழுவதும் உள்ள இராணுவ வீரர்களுக்கு மனநலச்சேவைகளை வழங்கும்.

**19. மினிட்மேன் III என்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை உருவாக்கிய நாடு எது?**

**அ. அமெரிக்கா ☑**

ஆ. ரஷ்யா

இ. சீனா

ஈ. ஜப்பான்



★ வாண்டன்பெர்க் விண்வெளிப் படைத்தளத்தில் இருந்து நிராயுதபாணியான, 'மினிட்மேன்–III ICBM'ஐ அமெரிக்கா சோதித்தது. 1960களில் பயன்படுத்தப்பட்ட மினிட்மேன்–III என்பது போயிங் வடிவமைத்த அமெரிக்க அணுசக்தி மும்மையின் ஒரே நில அடிப்படையிலான கூறு ஆகும். 10 ஆண்டு சேவைக்கான தொடக்கநிலை திட்டங்கள் இருந்த போதிலும், 2029இல் GBSD கிடைக்கும் வரை இது பயன்படுத்தப்படும். 13,000 கிமீ தூரம் வரை செல்லும் முந்நிலை, திட எரிபொருள் ஏவுகணையான இது, ஒரேயொரு அணு ஆயுதத்தை சுமந்துகொண்டு விரைவாகச் செல்லும் திறன் படைத்தது.


**20. H5N2 வைரசுடன் தொடர்புடைய நோய் எது?**

அ. மலேரியா

ஆ. டெங்கு

**இ. பறவைக்காய்ச்சல் ☑**

ஈ. எய்ட்ஸ்



★ H5N2 பறவைக்காய்ச்சலின் முதல் மனித பாதிப்பு மெக்ஸிகோவில் பதிவாகியுள்ளது; இதில் 59 வயது நபர் ஒருவர் உயிரிழந்தார். இப்பறவைக்காய்ச்சல், ஏவியன் இன்ஃப்ளுயன்ஸா ஏ வைரஸால் ஏற்படுகிறது. முதன்மையாக கோழி மற்றும் காட்டுப்பறவைகளைப் பாதிக்கின்ற இது, அவற்றின் நேரடி தொடர்புமூலம் மனிதர்களுக்குப்பரவுகிறது. முதன் முதலில் மெக்ஸிக கோழிப்பண்ணையில் காணப்பட்ட ஒரு துணை வகை வைரஸான H5N2, புலம்பெயர் பறவை இனங்கள் மற்றும் உள்நாட்டுப்பறவைகளுடனான தொடர்புகள்மூலம் பரவுகிறது.

**21. 2024 – உலக உணவுப் பாதுகாப்பு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Prepare for the unexpected ☑**

ஆ. Food Standards Save Lives

இ. Safer food, better health

ஈ. Safe food today for a healthy tomorrow




★ ஜூன்.7ஆம் தேதி கொண்டாடப்படும் உலக உணவுப் பாதுகாப்பு நாள், உணவுப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, உணவினால் ஏற்படும் அபாயங்களைத் தடுக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறது. 2016ஆம் ஆண்டில் ஐநாஆல் தொடங்கப்பட்ட இது, FAO & WHOஆல் ஆதரிக்கப்படுகிறது. இது அனைவருக்கும் பாதுகாப்பான, சத்தான உணவின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. 2020 ஆகஸ்ட்.03 அன்று அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட இந்நாள், உலகளாவிய நலத்தில் உணவுப் பாதுகாப்பின் முக்கிய பங்கை வலியுறுத்துகிறது. இந்த ஆண்டுக்கான கருப்பொருள்: "Prepare for the unexpected".

**22. NPCI இன்டர்நேஷனல் பேமெண்ட்ஸ் லிட் (NIPL) அண்மையில் UPI பேமெண்ட்டுகளை இயக்குவதற்காக, எந்தத் தென்னமெரிக்க நாட்டுடன் கைகோர்த்தது?**

அ. பிரேசில்

ஆ. அர்ஜென்டினா

**இ. பெரு ☑**

ஈ. சிலி



★ இந்திய தேசிய கொடுப்பனவு கழகமும் (NPCI) பெருவின் மத்திய வங்கியும் (BCRP) பெருவில் UPIபோன்ற கட்டண முறையை உருவாக்குவதற்காக கூட்டு சேர்ந்துள்ளன. இது NPCIஇன் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொண்ட முதல் தென்னமெரிக்க நாடாக பெருவை மாற்றுகிறது. இது தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு இடையே உடனடியாக பணம் செலுத்த உதவுகிறது. இந்த முன்முயற்சியானது பெருவின் மக்களிடையே டிஜிட்டல்முறை கட்டணங்களை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**23. அண்மையில், 1000 நாட்கள் விண்வெளியில் கழித்த முதல் நபர் என்ற பெருமையைப்பெற்ற ரஷ்ய விண்வெளி வீரரின் பெயர் என்ன?**

அ. எலினா கொண்டகோவா

ஆ. நிகோலாய் சப்

இ. யூரி ககாரின்

**ஈ. ஒலெக் கொனோனென்கோ ☑**



★ ரோஸ்கோஸ்மோஸ் விண்வெளி வீரர் ஒலெக் கொனோனென்கோ 1000 நாட்கள் விண்வெளியில் கழித்து உலக சாதனை படைத்தார். ISS–க்கான அவரது அண்மைய பணி 2023 செப்டம்பர்.15 அன்று NASA விண்வெளி வீரர் லொரல் ஓ'ஹாரா மற்றும் நிகோலாய் சப் ஆகியோருடன் தொடங்கியது. 1996 முதல் விண்வெளி வீரராக இருந்து வரும், ஒலெக் கோனோனென்கோ, மொத்தம் நான்கு சோயுஸ் பயணங்களை வழிநடத்தியுள்ளார்.

**24. அண்மையில், இந்தியா, எந்தெந்த நாடுகளுடன் இணைந்து உயிரி மருந்தாக்கத் தொழிற்துறை கூட்டணியை அறிமுகப்படுத்தியது?**

அ. அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ☑

ஆ. சீனா, ரஷ்யா மற்றும் நேபாளம்

இ. இங்கிலாந்து, ரஷ்யா மற்றும் இஸ்ரேல்

ஈ. ஆஸ்திரேலியா, சீனா மற்றும் இங்கிலாந்து



★ இந்தியா, அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆகியவை இணைந்து உயிரி மருந்தாக்கத் தொழிற்துறை கூட்டணியை உருவாக்கியுள்ளன. இதன் முதல் கூட்டம் சான் டியாகோவில் உயிரி–சர்வதேச மாநாட்டு மையத்தில் நடைபெற்றது. உயிரிகளிலிருந்து பெறப்பட்ட உயிரிமருந்துகள் எதிர்கால மருந்துகள் உலகில் 50% உள்ளடக்கியதாக அமைக்கப்படும். COVID–19 தொற்றுநோய்களின்போது ஏற்பட்ட மருந்துப் பற்றாக்–குறையைப் போன்று எதிர்காலத்தில் ஏற்படாமலிருப்பதை உறுதிசெய்வதே இந்தக் கூட்டணியின் நோக்கமாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நிலவிலிருந்து மாதிரிகளுடன் புறப்பட்ட சீன ஆய்வுக்கலம்.**

நிலவின் இருள் பகுதியிலிருந்து மாதிரிகளைச் சேகரித்துக்கொண்டு சீனாவின், 'சாங்கே–6' விண்கலம் பூமியை நோக்கி புறப்பட்டது. 'சாங்கே–6' எனப் பெயரிடப்பட்ட இந்த நிலவு ஆய்வுத்திட்டத்தில் கிடைக்கும் வெற்றி, நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் முயற்சிக்கு உதவியாக இருக்கும் என சீன தேசிய விண்வெளி நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த விண்கலத்தில் ஆர்பிட்டர், லேண்டர், அசென்டர் மற்றும் புவிக்கு திரும்பிவரும் ரீ–என்ட்ரி கலம் ஆகிய நான்கு பகுதிகள் உள்ளன. அதில் பூமிக்குத் திரும்பிவரும், 'ரீ–என்ட்ரி' கலம்தான் நிலவின் மாதிரிகளுடன் தற்போது புறப்பட்டுள்ளது.

---

**2. மாநிலக் கட்சிகளாக அங்கீகாரம் பெறும் விசிக, நாம் தமிழர்.**

மாநிலக்கட்சியாக ஒரு கட்சி அங்கீகாரம் பெறுவதற்கு தேர்தல் ஆணையத்தின் விதியின்படி 2 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். அவ்வகையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி அதற்கான தகுதியைப் பெற்றுள்ளது. தேர்தல் ஆணையத்தின் மற்றொரு விதியின்படி மக்களவைத் தேர்தலில் 8% வாக்குகள் பெற்ற கட்சி மாநிலக்கட்சியாக அங்கீகரிக்கப்படும். அவ்வகையில் நாம் தமிழர் கட்சியும் மாநிலக் கட்சிக்கான அங்கீகார தகுதியைப் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட மாநிலக்கட்சிகளாக திமுக, அதிமுக, இந்திய கம்யூனிஸ்ட், தேமுதிக ஆகிய 4 கட்சிகள் உள்ளன. அதைப்போல தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தேசியக்கட்சிகளாக காங்கிரசு, பாஜக, மார்க்சிஸ்ட், பகுஜன் சமாஜ், தேசியவாத காங்கிரஸ், ஆம் ஆத்மி ஆகிய ஆறு கட்சிகள் உள்ளன.

---

**3. உலக சுற்றுச்சூழல் நாள்: மரக்கன்று நடும் பிரசாரத்தைத் தொடங்கினார் மோடி.**

உலக சுற்றுச்சூழல் நாளை முன்னிட்டு தில்லியில் வைத்து, 'ஏக் பேட் மா கீ நாம்' (தாயின் பெயரில் ஒரு மரம்) என்ற பெயரில் மரம் நடும் விழிப்புணர்வு பிரசாரத்தைப் பிரதமர் நரேந்திர மோதி தொடக்கிவைத்தார்.

**4. 17ஆவது மக்களவை கலைப்பு.**

மத்திய அமைச்சரவையின் பரிந்துரைப்படி, 17ஆம் மக்களவையை கலைக்க இந்தியக்குடியரசுத்தலைவர் ஆணை பிறப்பித்தார். இதுதொடர்பாக குடியரசுத்தலைவர் மாளிகை வெளியிட்ட அறிவிப்பில், 'மத்திய அமைச்சரவையின் பரிந்துரையை ஏற்று, அரசமைப்புச்சட்டத்தின் 85ஆவது பிரிவின் உட்கூறுகளின்கீழ், 17ஆவது மக்களவையை கலைக்கும் ஆணையில் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு கையொப்பமிட்டார்' என்று தெரிவிக்கப்பட்டது. 17ஆவது மக்களவையின் பதவிக்காலம் ஜூன் 16ஆம் தேதியுடன் நிறைவடையவிருப்பது குறிப்பிடத்தக்கது.

---


## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/


Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

## 1. எந்த அதிகாரத்தின் தலைமையின்கீழ், தேசிய நெருக்கடி மேலாண்மைக்குழு (NCMC) அமைக்கப்பட்டுள்ளது?



அ. இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர்

**ஆ. இந்திய அமைச்சரவைச் செயலாளர் ☑**

இ. மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்

ஈ. இந்தியாவின் குடியரசுத் தலைவர்

★ வெப்ப அலைகள் & காட்டுத்தீக்கான தயார்நிலையை மதிப்பாய்வு செய்வதற்கான தேசிய நெருக்கடி மேலாண்மைக் குழு கூட்டத்திற்கு மத்திய அமைச்சரவைச் செயலர் தலைமைதாங்கினார். பேரிடர் மேலாண்மைக்கான முக்கிய தேசிய அளவிலான முடிவெடுக்கும் அமைப்பான NCMC, நிவாரண முயற்சிகளை ஒருங்கிணைக்கிறது, பல்வேறு மாநில அரசுகளுக்கு ஆதரவை வழங்குகிறது மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை உறுதிசெய்கிறது. அமைச்சரவை செயலாளரின் தலைமையின்கீழ், சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்களின் செயலாளர்கள் இதில் அடங்குவர்.

## 2. அண்மையில், 'சிறார் ஊட்டச்சத்து அறிக்கை – 2024'ஐ வெளியிட்ட அமைப்பு எது?

**அ. UNICEF ☑**

ஆ. WHO


இ. UNDP

ஈ. உலக வங்கி

unicef

★ UNICEFஇன், 'சிறார் ஊட்டச்சத்து அறிக்கை, 2024' உலகளவில் 27% குழந்தைகள் கடுமையான உணவில்லா நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளது. இந்தியாவில், இதன் சதவீதம் 40%ஆக உள்ளது; இது தெற்காசியாவிலேயே இரண்டாவது மிக அதிகமாகும். முதன்மை சிக்கல்களில் நலமற்ற உணவுகளின் பரவல் அடங்கும். சமத்துவமின்மை, மோதல்கள், காலநிலை நெருக்கடிகள் மற்றும் உணவு சந்தைப்படுத்தல் ஆகியவை பங்களிக்கும் காரணிகள் ஆகும். தரவு அமைப்புகளை மேம்படுத்துதல், உணவு முறைகளை மாற்றுதல் மற்றும் குழந்தை ஊட்டச்சத்துக்கான சுகாதார சேவைகளை மேம்படுத்துதல் ஆகியவை UNICEFஇன் பரிந்துரைகளில் அடங்கும்.

## 3. 'TRISHNA' திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?



அ. விண்வெளியை ஆராய்தல்

**ஆ. மேற்பரப்பு வெப்பநிலை &**

**நீர் மேலாண்மையை பிராந்திய அளவிலிருந்து உலகளவில் கண்காணித்தல் ☑**

இ. கடல் நீரோட்டங்களைப் ஆய்வது

ஈ. நிலவின் மேற்பரப்பை வரைபடமாக்குதல்

★ ISRO & CNES இடையேயான கூட்டுப்பணியான, 'TRISHNA' பணியானது, உலகளவில் மேற்பரப்பு வெப்பநிலை மற்றும் நீர் மேலாண்மையை கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதன் நோக்கங்களில் ஆற்றல் மற்றும் நீர் வரவு செலவுகளை விரிவாகக் கண்காணித்தல், நகர்ப்புற வெப்பத்தீவுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் வெப்ப முரண்பாடுகளைக் கண்டறிதல் ஆகியவை அடங்கும். இந்தத்திட்டமானது இரு முதன்மை பேலோடுகளைக் கொண்டுள்ளது: CNESஇன் தெர்மல் இன்ஃப்ரா–ரெட் சென்சார் மற்றும் ISROஇன் VNIR–SWIR பேலோடு.

★ சூரியன் ஒத்திசைவான சுற்றுப்பாதையில் செயல்படும், 'TRISHNA', அதன் ஐந்தாண்டு செயல்பாட்டு வாழ்க்கையில் காலநிலை கண்காணிப்பு மற்றும் நகர்ப்புற திட்டமிடலை கணிசமாக மேம்படுத்தும்.

**4. சமீபத்தில், 2025–26 காலத்திற்கு UNSCஇன் நிரந்தர உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகள் எவை?**



அ. உக்ரைன், இஸ்ரேல், சோமாலியா மற்றும் மாலத்தீவுகள்

ஆ. உகாண்டா, கஜகஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான்

**இ. பாகிஸ்தான், சோமாலியா, டென்மார்க், கிரேக்கம் மற்றும் பனாமா ☑**

ஈ. பெரு மற்றும் சிலி

★ பாகிஸ்தான், சோமாலியா, டென்மார்க், கிரேக்கம் மற்றும் பனாமா ஆகிய நாடுகள் இரகசிய வாக்கெடுப்புமூலம் UNSC இன் நிரந்தரமற்ற உறுப்பினர்களாக இரண்டாண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டன; நிரந்தரமற்ற உறுப்பினர் ஆவதற்கு 193 உறுப்பினர்களைக் கொண்ட பொதுச்சபையின் 2/3 பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவை. பாகிஸ்தான் தனது எட்டாவது பதவிக்காலத்தில் உள்ளது. 1963ஆம் ஆண்டின் ஐநா சாசனத் திருத்தம் நிரந்தரமற்ற உறுப்பினர்களை ஆறிலிருந்து பத்தாக உயர்த்தியது.

**5. அண்மையில், நெகிழிக் கழிவு மேலாண்மை மற்றும் மறுசுழற்சி ஆலையை தொடக்கிய மாநில அரசு எது?**



அ. அஸ்ஸாம்

**ஆ. சிக்கிம் ☑**

இ. மணிப்பூர்

ஈ. மிசோரம்

★ இந்திய ராணுவத்தின் திரிசக்தி படைப்பிரிவு, கிழக்கு சிக்கிமில் நெகிழிக் கழிவு மேலாண்மை ஆலை தொடங்குவது உட்பட, வட வங்கம் மற்றும் சிக்கிமில், 'Go Green Initiatives'மூலம் உலக சுற்றுச்சூழல் நாளைக் கொண்டாடியது. 'சத்பவனா' முயற்சியின் ஒருபகுதியாக, நெகிழிக்கழிவுகளை சாலை கட்டமைப்புப்பொருட்கள் மற்றும் செங்கற்களாக மறுசுழற்சி செய்வதன்மூலம் நிலைத்தன்மை மற்றும் உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த முயற்சி கிராம மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது மற்றும் 2027ஆம் ஆண்டுக்குள் நிலநிரப்புகளை அகற்றுவதை இலக்காகக்கொண்டு சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான இராணுவத்தின் உறுதிப்பாட்டுடன் ஒத்துப்போகிறது.

**6. அண்மையில், இந்தியா மற்றும் கத்தாருக்கு இடையிலான முதலீட்டுக்கான கூட்டு பணிக்குழுவின் முதல் கூட்டம் நடைபெற்ற இடம் எது?**



**அ. புது தில்லி ☑**

ஆ. தோஹா

இ. சென்னை

ஈ. கன்னியாகுமரி

★ இந்தியா மற்றும் கத்தார் இடையேயான முதலீட்டுக்கான கூட்டுப் பணிக்குழுவின் முதல் கூட்டம் புது தில்லியில் நடைபெற்றது. முதலீட்டு ஒத்துழைப்பு மற்றும் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதை இந்தக்கூட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. உள்கட்டமைப்பு, ஆற்றல் மற்றும் தொழில்நுட்பம்போன்ற துறைகளில் இது கவனம் செலுத்துகிறது. இது உள்ளடக்கிய மேம்பாடு மற்றும் பரஸ்பர வளர்ச்சிக்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது; இது இந்தியாவிற்கும் கத்தாருக்கும் இடையேயான வலுவான பொருளாதார உறவுகளை பகிரப்பட்ட மதிப்புகள் மற்றும் பொதுவான நோக்கங்களின் அடிப்படையில் வலுப்படுத்துகிறது.

**7. அண்மையில் நடந்த மக்களவைத் தேர்தலில் எத்தனை பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர்?**

அ. 67

**ஆ. 74 ☑**

இ. 79

ஈ. 97




★ அண்மையில் நடந்த மக்களவைத் தேர்தலில், 74 பெண் வேட்பாளர்கள் வெற்றிபெற்றனர். 2019இல் வெற்றிபெற்ற 78இல் இருந்து இது சிறிதளவு குறைந்துள்ளது. இந்த 74 பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களவையில் 13.63% உள்ளனர்; இது 33% பிரதிநிதித்துவத்திற்கு வெகு தொலைவில் உள்ளது. பல ஆண்டுகளாக முன்னேற்றம் இருந்தாலும், மக்களவையில் பெண்களின் பிரதிநிதித்துவம் மெதுவாகவும், சீரற்றதாகவும் உள்ளது. இருப்பினும், இந்த எண்ணிக்கை 1952இல் நடந்த முதல் தேர்தல்களில் இருந்து குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் குறிக்கிறது; அப்போது 22 பெண்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

**8. 2024 – உலக பெருங்கடல்கள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Planet Ocean: Tides are Changing

**ஆ. Awaken New Depth ☑**

இ. Revitalization: Collective Action for the Ocean

ஈ. The Ocean: Life and Livelihoods

WORLD OCEANS DAY 2024
UNWORLDOCEANSDAY.ORG

★ உலக பெருங்கடல் நாளானது ஜூன்.08 அன்று கொண்டாடப்படுகிறது. இந்நாள் கடல்களின் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் பாதுகாப்புபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. "Awaken New Depth" என்ற கருப்பொருள், கடல்சார் சூழல்களில் மனித நடவடிக்கைகளின் தாக்கத்தை மையமாகக் கொண்டது மற்றும் நிலையான கடல்சார் மேலாண்மையை ஊக்குவிக்கிறது. ஐநா சபை அதன் நியூயார்க் தலைமையகத்தில் இந்த நாளின் கொண்டாட்டங்களை நடத்துகிறது.

**9. அண்மையில் காலஞ்சென்ற A J T ஜான்சிங் என்பவர் சார்ந்த துறை எது?**

**அ. வனவிலங்கு பாதுகாவலர் ☑**

ஆ. கேளிக்கைக் கலைஞர்

இ. கவிஞர்

ஈ. அரசியல்வாதி



★ புகழ்பெற்ற இந்திய வனவிலங்கு பாதுகாப்பாளரும் உயிரியலாளருமான A J T ஜான்சிங், 2024 ஜூன்.07ஆம் தேதி அன்று பெங்களூருவில் 78 வயதில் காலமானார். தமிழ்நாட்டின் மேற்குத்தொடர்ச்சி மலைகளில் பிறந்த அவர், ஜிம் கார்பெட்டின் கதைகளால் ஈர்க்கப்பட்டார். ஜான்சிங், இந்திய வனவிலங்கு நிறுவனத்தில் சேர்ந்து புலிகள் பாதுகாப்பு மற்றும் பல்வேறு அமைப்புகளில் முக்கிய பங்கு வகித்தார். அவரது ஆராய்ச்சி பல்வேறு உயிரினங்களில் கவனம் செலுத்தியது. மேலும் அவர் 70-க்கும் மேற்பட்ட அறிவியல் கட்டுரைகள் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு குறித்த 80 பிரபலமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.


**10. அண்மையில், ஜெர்மனியின் முனிச்சில் நடந்த ISSF உலகக்கோப்பை–2024இல் ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர் யார்?**

அ. சௌரப் சவுத்ரி

ஆ. திவ்யான்ஷ் சிங்

**இ. சரப்ஜோத் சிங் ☑**

ஈ. அபிஷேக் வர்மா



★ மே.31 முதல் ஜூன்.08, 2024 வரை ஜெர்மனியின் முனிச்சில் நடைபெற்ற ISSF உலகக்கோப்பையில் சரப்ஜோத் சிங் இந்தியாவின் முதல் பதக்கத்தை வென்றார். ஆண்களுக்கான 10 மீ ஏர் பிஸ்டல் போட்டியில் 242.7 புள்ளிகளைப் பெற்று தங்கம் வென்றார். சீனாவின் ஷுவாய்ஹாங் பு வெள்ளியும், ஜெர்மனியின் ராபின் வால்டர் வெண்கலமும் வென்றனர். பெண்களுக்கான 50 மீட்டர் ரைபிள் போட்டியில் சிஃப்ட் கவுர் சாம்ரா வெண்கலம் வென்றார். இந்தியா இரண்டு பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

**11. மோங்லா துறைமுகம் அமைந்துள்ள நாடு எது?**

**அ. வங்காளதேசம் ☑**



ஆ. மியான்மர்

இ. இலங்கை

ஈ. இந்தியா

★ சீனாவின் பிராந்திய செல்வாக்கை எதிர்கொள்ள வங்காளதேசத்தின் மோங்லா துறைமுகத்தை இயக்கவும், புதிய முனையத்தை உருவாக்கவும் இந்தியா இலக்கு வைத்துள்ளது. வங்காளதேசத்தின் இரண்டாவது மிகப்பெரிய துறைமுகமான மோங்லா, வங்காள விரிகுடாவில் இருந்து 62 கிலோ மீட்டர் தொலைவில் சுந்தரவனக்காடுகளால் பாதுகாக்கப்படுகிறது. மோங்லா மீதான இந்தியாவின் ஆர்வம், அஸ்ஸாம் மற்றும் திரிபுரா போன்ற வடகிழக்கு மாநிலங்களுக்கான அணுகலை மேம்படுத்துவதோடு போக்குவரத்துச் செலவையும் குறைக்கும்.

**12. வகுப்பறைகளில், 'பசுமைப்படுத்தல் கல்வி'க்கான புதிய முயற்சிகளை தொடங்கியுள்ள அமைப்பு எது?**

அ. உலக வங்கி

ஆ. UNICEF

**இ. UNESCO ☑**

ஈ. UNEP

★ UNESCO ஆனது பசுமைப்படுத்தல் கல்விக்கூட்டாண்மையின்கீழ், பசுமைப்படுத்தல் பாடத்திட்ட வழிகாட்டுதல் மற்றும் பசுமைப்பள்ளி தரத் தரநிலைகள் ஆகிய புதிய கருவிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. பசுமைப்படுத்தல் பாடத்திட்ட வழிகாட்டுதல் ஆனது பாடத்திட்டத்தில் சுற்றுச்சூழல் தலைப்புகளை முதன்மையாகக் கொண்டு வருவதற்கான நடைமுறை கையேட்டை வழங்குகிறது. பசுமைப்பள்ளி தரத் தரநிலைகள் – ஒரு செயல்சார்ந்த அணுகுமுறையுடன் பசுமைப்பள்ளிகளை உருவாக்குவதற்கான குறைந்தபட்ச தேவைகளை அமைக்கிறது. எண்பது உறுப்புநாடுகளை உள்ளடக்கிய இந்த முன்முயற்சி, பருவநிலை மாற்றத்தைச் சமாளிக்கும் திறன் மற்றும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்தும் திறன்களை கற்பவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வெப்பத்தின் தாக்கம் குறைக்க கட்டடங்களில், 'சிலிக்கான் பெயின்ட்' அடிக்கும் திட்டம்.**

வெப்பத்தின்தாக்கத்தைக் குறைக்கும் பொருட்டு கட்டடங்களின் மேற்பகுதியில் 'சிலிக்கான் வண்ணப்பூச்சு' அடிக்கும் திட்டம் கொண்டு வரப்படவுள்ளது என தமிழ்நாடு சுற்றுச்சூழல் பருவநிலை மாற்றத்துறை தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டில் 68% மக்கள் வெப்பத்தின் தாக்கத்தால் பாதிக்கப்படுகின்றனர் என அத்துறை கூறியுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. MTU 1271, BPT 2846 மற்றும் NLR-3238 ஆகியவற்றுடன் தொடர்புடைய பயிர் எது?**

**அ. அரிசி ☑**

ஆ. பருத்தி

இ. கரும்பு

ஈ. கடுகு




★ ஆச்சார்யா NG ரங்கா வேளாண்மைப் பல்கலைக்கழகம் (ANGRAU) ஆந்திரப் பிரதேசத்தில் காரீப் பருவத்திற்கான புதிய நெல் வகைகளாக MTU 1271, BPT 2846, மற்றும் NLR-3238 ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இவை மூன்றும் BPT 5204 என்ற நெல் இரகத்திற்கு மாற்றாக அறிமுகப்பட்டுள்ளன. MTU 1271 எண்பது 140 நாள் பயிர் காலத்துடன் ஒரு ஏக்கருக்கு 2.8-3 டன்கள் மகசூல் தருகிற குட்டை இரக நெற்பயிராகும். BPT 2846 எண்பது 130-135 நாட்களில் ஏக்கருக்கு 2.4 டன் மகசூல் தருகிறது. NLR-3238, 22.5% அதிக துத்தநாக கலவையுடன், அனைத்து பருவங்களிலும் வளரும் தன்மை கொண்டதாக உள்ளது.

**2. அண்மையில், உணவில் திரவ நைட்ரஜனை அனுமதியின்றி பயன்படுத்துவது குறித்து ஆலோசனை வழங்கிய அமைப்பு எது?**

அ. FCI

**ஆ. FSSAI ☑**

இ. வேளாண்மை அமைச்சகம்

ஈ. ICAR



★ இந்திய உணவுப் பாதுகாப்பு & தரநிர்ணய ஆணையம் (FSSAI) நிறுவனங்களால் உணவில் திரவ நைட்ரஜனை அனுமதியின்றி பயன்படுத்துவது தொடர்பான ஆலோசனையை வெளியிட்டுள்ளது. திரவ நைட்ரஜன், ஒரு நிறமற்ற, மணமற்ற வாயு அல்லது திரவமாகும். இது உறைதல், பேக்கேஜிங் மற்றும் நுரைக்குப் பயன்படுத்தப்படுகிறது. 2011இன் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஒழுங்குமுறையின்படி, இது விதிமுறைகளின்கீழ் ஒரு நல்ல உற்பத்தி நடைமுறை சேர்க்கையாகக் கருதப்படுகிறது. இது பால்சார்ந்த பனிக்கூழ்களில் அவற்றின் உறைதலுக்கா -கவும் குளிர்ச்சிக்காகவும் மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது.

**3. கீழ் சுபன்ஸ்ரீ புனல் மின்னுற்பத்தித் திட்டம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. சிக்கிம்

**ஆ. அஸ்ஸாம் ☑**

இ. மணிப்பூர்

ஈ. மிசோரம்



★ அஸ்ஸாமில் உள்ள 2000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட கீழ் சுபன்ஸ்ரீ நீர்மின்னுற்பத்தித் திட்டத்தில் (SLHEP) மீன்வள மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. சுபன்ஸ்ரீ ஆற்றின் மீது நிறுவப்பட்டுள்ள ஈர்ப்புவிசை அணையான SLHEP, கட்டிமுடிந்ததும் இந்தியாவின் மிகப்பெரிய நீர்மின்னுற்பத்தி நிலையமாக இருக்கும். NHPCஆல் இது உருவாக்கப்பட்டு வருகிறது. பொன்மணலுக்காக அறியப்படுகிற இந்த ஆறு, அஸ்ஸாம், அருணாச்சல பிரதேசம் மற்றும் சீனாவின் திபெத் தன்னாட்சி பிராந்தியத்தில் பரவி, குறிப்பிடத்தக்க நீர்மின் உற்பத்தித் திறனை வழங்குகிறது.

**4. அண்மையில், 'இழப்பு மற்றும் சேதம் குறித்த 3ஆவது கிளாஸ்கோ உரையாடல்' நடைபெற்ற இடம் எது?**

**அ. பான், ஜெர்மனி ☑** ஆ. லண்டன், UK

இ. பாரிஸ், பிரான்ஸ் ஈ. புது தில்லி, இந்தியா



★ இழப்பு மற்றும் சேதம் பற்றிய மூன்றாவது கிளாஸ்கோ உரையாடல் ஜெர்மனியின் பான் நகரத்தில் UNFCCC–க்கான துணை அமைப்புகளின் 60ஆவது அமர்வின் போது நிகழ்ந்தது. 2019இல் நிறுவப்பட்ட சாண்டியாகோ நெட்வொர்க் ஃபார் லாஸ் அண்ட் டேமேஜ், வளரும் நாடுகளுக்கு காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இழப்பு மற்றும் சேதத்தைத் தணிக்க உதவுகிறது. தட்பவெப்பநிலை தொடர்பான தாக்கங்களை நிர்வகிப்பதில் பாதிக்கப்படக்கூடிய நாடுகளின் திறனை மேம்படுத்த பல்வேறு நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆதரவை இது திரட்டுகிறது.

**5. சுகாதார அமைச்சகம் கீழ்காணும் எந்த அமைப்புடன் இணைந்து சமீபத்தில் டிஜிட்டல் தளமான நேஷனல் ஹெல்த் க்ளைம் எக்ஸ்சேஞ்சை (NHCX) அறிமுகப்படுத்தியது?**

அ. அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில்

**ஆ. இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ☑**

இ. பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI)

ஈ. NITI ஆயோக்

★ சுகாதார அமைச்சகமும் IRDAIஉம் இணைந்து National Health Claim Exchange (NHCX) தொடங்குகின்றன. டிஜிட்டல் தளமான இது காப்பீட்டு நிறுவனங்கள், சுகாதார சேவை வழங்குநர்கள் மற்றும் அரசாங்க காப்பீட்டு நிர்வாகிகளை ஒன்றிணைக்கிறது. பங்குதாரர்களிடையே தரவு பரிமாற்றத்தை எளிதாக்குவதன்மூலம் காப்பீடு உரிமைகோரல் செயலாக்கத்தில் செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியத்தை மேம்படுத்துவதை NHCX நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தின் குறிக்கோள்களான சுகாதார காப்பீடு கோரல்களை எளிதாக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த டிஜிட்டல் ஹெல்த்கேர் தளத்தை உருவாக்குதல், காப்பீடுதாரர்கள் மற்றும் நோயாளிகளுக்குப் பயனளிக்கிறது.

**6. அண்மையில், 2024ஆம் ஆண்டுக்கான EY உலக தொழில்முனைவோராக அறிவிக்கப்பட்டவர் யார்?**




**அ. வெள்ளையன் சுப்பையா ☑**

ஆ. வைபவ் ஆனந்த்

இ. ரீதேஷ் திங்ரா

ஈ. பிரதாப் ராஜு

★ இந்திய தொழிலதிபரான வெள்ளையன் சுப்பையா மொனாக்கோவில் நடைபெற்ற விழாவில் 2024ஆம் ஆண்டின் EY தொழில்முனைவோர் விருதை வென்றார். இதன்மூலம் இந்த மரியாதையைப் பெறும் நான்காவது இந்தியர் ஆனார். அவர் டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆஃப் இந்தியாவின் நிர்வாக துணைத்தலைவராகவும், சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்ட் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் தலைவராகவும் உள்ளார். 47 நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 51 வெற்றியாளர்களுள் ஒருவரான வெள்ளையன் சுப்பையா, 2023 இந்தியா விருதை வென்ற பிறகு இவ்விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டார்.

**7. சுஹெல்வா வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**



**அ. உத்தர பிரதேசம் ☑**

ஆ. மத்திய பிரதேசம்

இ. இராஜஸ்தான்

ஈ. குஜராத்

★ சுஹெல்வா வனவிலங்கு சரணாலயத்தில் புலிகள் வாழ்வதற்கான சான்றுகள் காரணமாக உத்தர பிரதேசத்தில் புதிய புலிகள் காப்பகம் நிறுவப்படும். ஷ்ரவஸ்தி, பல்ராம்பூர் மற்றும் கோண்டா மாவட்டங்களில் அமைந்துள்ள இந்த சுஹெல்வா வனவிலங்கு சரணாலயம், இந்திய–நேபாள எல்லையில் 452 சதுர கிமீ பரப்பளவில் கடந்த 1988ஆம்

ஆண்டில் நிறுவப்பட்டது. இது இலையுதிர் காடுகள் மற்றும் பாதி வறண்டதுமான வனப்பகுதிகளின் கலவையைக் கொண்டுள்ளது. சுஹெல்வா வனவிலங்கு சரணாலயம் சிறுத்தைகள் மற்றும் பல்வேறு பறவை இனங்கள் உட்பட பல்வேறு தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு வாழ்விடமாக விளங்குகிறது. இது பாபர்–தாராய் சுற்றுச்சூழல் அமைப்பின் ஒருபகுதியாக உள்ளது.

**8. அண்மையில், கிழக்காசிய உச்சிமாநாடு மற்றும் ASEAN பிராந்திய மன்றத்தின் மூத்த அதிகாரிகள் கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ. பெய்ஜிங், சீனா

ஆ. புது தில்லி, இந்தியா

இ. பாங்காக், தாய்லாந்து

**ஈ. வியன்டியான், லாவோ ☑**

★ 2024 ஜூன் 7–8 அன்று, லாவோ PDR, வியன்டியானில் நடந்த கிழக்காசிய உச்சிமாநாடு மற்றும் ASEAN பிராந்திய மன்றம் ஆகியவற்றில் இந்தியா சார்பில் செயலாளர் (கிழக்கு) ஜெய்தீப் மசூம்தார் கலந்துகொண்டார். இந்தோ–பசிபிக் அமைதி, கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய மோதல்கள் உள்ளிட்ட முக்கியப் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. நிலைத்தன்மையை ஊக்குவிப்பதில் EASஇன் பங்கை ஜெய்தீப் மஜும்தார் வலியுறுத்தினார் மற்றும் இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பு முன்முயற்சிகளை முன்னிலைப்படுத்தினார்.

**9. 'ஒட்டும் பணவீக்கம்' என்றால் என்ன?**

அ. விலையில் தற்காலிக வீழ்ச்சி

ஆ. வழங்கல் & தேவையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப விலைகள் விரைவாகச் சரிசெய்யப்படும் ஒரு நிகழ்வு

**இ. வழங்கல் & தேவையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப விலைகள் விரைவாகச் சரிசெய்யப்படாத ஒரு நிகழ்வு ☑**

ஈ. நுகர்வோர் பொருட்களின் விலையில் குறிப்பிடத்தக்க சரிவு

★ இந்திய ரிசர்வ் வங்கி தனது சமீபத்திய மதிப்பாய்வில், ஒட்டும் பணவீக்கம் குறித்த கவலைகளை மேற்கோள்காட்டி, தொடர்ந்து எட்டாவது முறையாக ரெப்போ விகிதத்தை மாற்றாமல் வைத்துள்ளது. ஒட்டும் பணவீக்கம் (sticky inflation) என்பது வழங்கல் மற்றும் தேவை மாற்றங்களுக்கு ஏற்ப விலைகள் விரைவாகச் சரி செய்யப்படாத ஒரு நிகழ்வாகும்; இதன் விளைவாக நிலையான பணவீக்கம் ஏற்படுகிறது. ஊதிய உயர்வு மற்றும் நுகர்வோர் விலைகள்போன்ற காரணிகள் இந்நிகழ்வைத் தூண்டுகின்றன. பணவியல் அதிகாரிகள் கொள்கையை இறுக்குவது மற்றும் வட்டி விகிதங்களை அதிகரிப்பதை கருத்தில்கொள்ள இது தூண்டுகிறது.

**10. அண்மையில், இந்தியாவில் டிரோன் புத்தொழில்களை ஊக்குவித்தற்காக UDAAN திட்டத்தை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**

அ. ஐஐடி தில்லி

**ஆ. ஐஐடி கான்பூர் ☑**

இ. ஐஐடி பம்பாய்

ஈ. ஐஐடி ரூர்க்கி

★ IIT கான்பூரின் புத்தொழில் அடைவு மற்றும் புத்தாக்க மையம் இந்தியாவில் டிரோன் புத்தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கில் UDAAN திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது. UDAAN, SIIC, Drone CoE கான்பூர் மற்றும் டிரோன் பெடரேசன் ஆப் இந்தியா ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், ஆண்டுதோறும் 20 புத்தொழில்களை (start–up) அது தேர்ந்தெடுக்கும். பங்கேற்பாளர்களுக்கு R&D வசதிகள், வழிகாட்டுதல், நிதியுதவி மற்றும் தொழில் தொடர்புகளுக்கான அணுகல் என அனைத்து வழங்கப்படும். இது தயாரிப்பு மேம்பாடு, சந்தை பகுப்பாய்வு மற்றும் வளர்ச்சி திட்டமிடல் ஆகியவற்றில் புத்தொழில்களை ஆதரிக்கிறது.

**11. இந்தியாவின் எந்த அதிகாரத்தின் தலைமையின் கீழ் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு உள்ளது?**



**அ. இந்தியப்பிரதமர் ☑**

ஆ. இந்திய உள்துறை அமைச்சர்

இ. மக்களவையின் அவைத்தலைவர்

ஈ. இந்தியக்குடியரசுத்தலைவர்

★ பிரதமர் நரேந்திர மோதி மற்றும் முப்பது கேபினட் அமைச்சர்கள், ஐந்து சுயேச்சை அமைச்சர்கள் மற்றும் 36 இணை அமைச்சர்கள் அடங்கிய 71 அமைச்சர்கள் இன்று பதவியேற்றனர். பிரதமர் தலைமையிலான பாதுகாப்புக்கான அமைச்சரவைக்குழு என்பது தேசிய பாதுகாப்பு நியமனங்கள், பாதுகாப்புக்கொள்கைகள் மற்றும் செலவுத்தீர்மானங்–களுக்கான உச்சபட்ச அமைப்பாகும். இதன் உறுப்பினர்களில் பாதுகாப்பு, உள்துறை, நிதி மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் உள்ளனர். இந்திய தேசத்தின் பாதுகாப்பைப் பாதிக்கும் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் வெளியுறவுக்கொள்கை விஷயங்களுக்கு இக்குழு தீர்வுகாண்கிறது.

**12. இந்தியாவில், 'குடும்ப நுகர்வு செலவு கணக்கெடுப்பை' நடத்திய அமைச்சகம் எது?**

**அ. புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ☑**

GOVERNMENT OF INDIA
MINISTRY OF STATISTICS AND PROGRAMME IMPLEMENTATION

ஆ. உழவு அமைச்சகம்

இ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்

★ தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் , புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், 1950இல் நிறுவப்பட்டதிலிருந்து குடும்ப நுகர்வு செலவின கணக்கெடுப்புகளை நடத்தி வருகிறது. இந்த ஆய்வு குடும்ப மாதாந்திர தனிநபர் நுகர்வு செலவு, கிராமப்புற மற்றும் நகர்ப்புற துறைகள், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மற்றும் பல்வேறு சமூக–பொருளாதார குழுக்களில் அதன் விநியோகம் குறித்த மதிப்பீடுகளை உருவாக்குகிறது.

★ பானங்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளுக்காக செய்யப்பட்டும் செலவுகள் கிராமப்புறங்களில் 46%ஆகவும் நகர்ப்புறங்களில் அது 39%ஆகவும் உள்ளது. நகர்ப்புற மற்றும் கிராமப்புற "பானங்கள், பதப்படுத்தப்பட்ட உணவு" செலவுகளில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. 2022–23இல் முதன்முறையாக உணவல்லா செலவுகள், குறிப்பாக போக்குவரத்து மற்றும் நீடித்த பொருட்களுக்கான செலவினம் உயர்ந்துள்ளது. 2011–12 முதல் 2022–23 வரை, கிராமப்புறச்செலவுகள் 164% அதிகரித்து ₹3,773 ஆகவும், நகர்ப்புறங்களில் 146% அதிகரித்து ₹6,459 ஆகவும் உள்ளது; இது குறிப்பிடத்தக்க நுகர்வு வளர்ச்சிப் போக்கைக் குறிக்கிறது.

**13. 40ஆம் ஆண்டு நிறைவையொட்டி அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற 'ஆபரேஷன் புளூஸ்டாரி'ன் முதன்மை நோக்கம் என்ன?**



அ. காஷ்மீரில் தீவிரவாதிகளைப் பிடித்தல்

**ஆ. சீக்கிய பிரிவினைவாதிகளை பொற்கோவிலிலிருந்து வெளியேற்றுதல் ☑**

இ. இந்திய நாடாளுமன்றத்தைத் தாக்குதலிலிருந்து பாதுகாத்தல்

ஈ. மேற்கு வங்கத்தில் பொதுவுடமைவாத எழுச்சியை ஒடுக்குதல்

★ ஆபரேஷன் புளூஸ்டாரின் நாற்பதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது பொற்கோவிலில் காலிஸ்தானை ஆதரிக்கும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. 1984 ஜூனில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியால் ஆணையிடப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை, ஜர்னைல் சிங் பிந்தரன்வாலே தலைமையிலான சீக்கிய பிரிவினைவாதிகளை கோவிலில் இருந்து அகற்றுவதை நோக்கமாகக்கொண்டது.

★ கடுமையான சண்டைக்குப் பெயர்போன இந்நடவடிக்கை, கோவில் வளாகத்திற்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியது; மேலும் பொதுமக்களின் உயிர்களையும் பலிவாங்கியது. இந்நடவடிக்கை இறுதியில் பிரதமர் இந்திரா காந்தியின் படுகொலைக்கு வழிவகுத்து, சீக்கிய வரலாற்றில் ஒரு சர்ச்சைக்குரிய நிகழ்வாக ஆனது.

**14. அண்மையில், 'உலக மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பின் நிலை – 2024' அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக வங்கி

ஆ. ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP)

**இ. உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO) ☑**

ஈ. ஐநா வளர்ச்சித் திட்டம் (UNDP)

★ FAOஇன், 'உலக மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பின் நிலை–2024' அறிக்கையானது உலகளாவிய போக்குகளை பகுப்பாய்வு செய்கிறது. கடந்த 2022ஆம் ஆண்டில், மொத்த நீர்வாழ் உற்பத்தி 223.2 மில்லியன் டன்களை எட்டியது; மீன்வளர்ப்பு முதன்முறையாக பிடிக்கப்பட்ட மீன்வளத்தை மிஞ்சியது. சீனா உற்பத்தியில் (36%) முதலிடம் பிடித்தது; அதைத்தொடர்ந்து இந்தியா, இந்தோனேசியா, வியட்நாம் மற்றும் பெரு ஆகிய நாடுகள் உள்ளன. உள்நாட்டு மீன்பிடி, 11.3 மில்லியன் டன்கள் உற்பத்தியுடன் முதன்மையாக ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவிலும் காணப்பட்டது.

**15. அண்மையில், இந்தியாவின் முதல் தனியார் உயிர்க்கோளமாக அறிவிக்கப்பட்ட ராஜாஜி ராகவ உயிர்க்கோளக் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. உத்தரகாண்ட் ☑**

ஆ. இமாச்சல பிரதேசம்

இ. மகாராஷ்டிரா

ஈ. கர்நாடகா



★ உத்தரகாண்டின் இராஜாஜி தேசியப்பூங்காவிற்குள் 35 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உள்ள இராஜாஜி ராகவ உயிர்க்கோளம், அரிய மற்றும் அழிந்துவரும் பூர்வீக இன மரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஜெய் தர் குப்தா மற்றும் விஜய் தஸ்மனா ஆகியோரால் நிறுவப்பட்ட இது, புலிகள் காப்பகத்திற்குள் அமையவுள்ள இந்தியாவின் முதல் உயிர்க்கோளமாகும். பூர்வீகமற்ற யூகலிப்டஸ் மரங்களை அகற்றுவதன்மூலம் தரிசுநிலத்தை மீட்டெடுத்து, நீரைத்தக்கவைக்கும் நுட்பங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

**16. சமீப செய்திகளில் இடம்பெற்ற சுகாதார மற்றும் தாவரநல நடவடிக்கைகள் (SPS ஒப்பந்தம்) ஆகியவற்றுடன் தொடர்புடைய நிறுவனம் எது?**

அ. உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO)

ஆ. பன்னாட்டு செலாவணி நிதியம் (IMF)

**இ. உலக வர்த்தக அமைப்பு (WTO) ☑**

ஈ. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO)

★ இந்தியாவும் அமெரிக்காவும் தங்கள் கோழி இறக்குமதி சர்ச்சை உள்ளிட்ட ஏழு சர்ச்சைகளைக்கு உலக வர்த்தக அமைப்பின்மூலம் தீர்வுகண்டன. 1995 ஜன.01 முதல் அமல்படுத்தப்பட்ட சுகாதார & தாவரநல நடவடிக்கைகளின் பயன்பாடு குறித்த ஒப்பந்தம் (SPS ஒப்பந்தம்), உணவுப்பாதுகாப்பு, விலங்குகள் மற்றும் தாவரநலத் தரங்களை நிர்வகிக்கிறது. சுகாதாரம் மற்றும் தாவரநல நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தம் என்பது உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தமாகும். இது மனிதர்கள், விலங்குகள் மற்றும் தாவரங்களின் வாழ்க்கை மற்றும் நலத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்துதல், ஏற்றுக்கொள்வது மற்றும் செயல்படுத்துவதற்கான விதிகளை நிறுவுகிறது.

**17. பெருநாரை சார்ந்த இனம் எது?**

அ. மீன்

ஆ. சிலந்தி

**இ. நாரை ☑**

ஈ. எறும்பு



★ நகரமயமாக்கல் அஸ்ஸாமின் ஈரநிலங்களில் வாழ்ந்து வரும் பெருநாரைகளை அச்சுறுத்தி வருகிறது. தெற்கு மற்றும் தென்கிழக்காசியாவில் காணப்படும் பெருநாரைகள், ஈரநிலங்களுக்கு அருகிலுள்ள உயரமான மரங்களில் கூடு கட்டுகின்றன; அவற்றின் முதன்மை இரையாக மீன் மற்றும் தவளைகள் உள்ளன. அச்சுறுத்தல்களில் வாழ்விட இழப்பு, அதிகப்படியான மீன்பிடித்தல் மற்றும் மாசுபாடு ஆகியவை அடங்கும். IUCNஆல் அச்சுறுத்தலுக்கு உள்ளான இனமாக இது வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**18. ஜெர்மனியில் நடந்த 2024 – ஹெய்ல்பிரான் நெக்கர்கப் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?**

அ. அலெக்சாண்டர் ரிட்சார்ட்

ஆ. நிகோலோஸ் பாசிலாஷ்விலி

**இ. சுமித் நாகல் ☑**

ஈ. ரமேஷ் கிருஷ்ணன்



★ சுமித் நாகல் தனது ஆறாவது ATP சேலஞ்சர் பட்டத்தை ஜெர்மனியில் நடந்த 2024 – ஹெய்ல்பிரான் நெக்கர்கப் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் மூன்று செட்களில் அலெக்சாண்டர் ரிட்சார்ட்டை வீழ்த்தியதன்மூலம் பெற்றார். இவ்வெற்றி சுமித் நாகலின் ATP தரவரிசையை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது; மேலும் 2024 கோடைகால பாரிஸ் ஒலிம்பிக்கில் அவரது இடத்தை தக்கவைக்க உதவும். இது அவரது நான்காவது களிமண் கள பட்டத்தையும், 2024இல் அவரது இரண்டாவது வெற்றியையும் குறிக்கிறது.

**19. எந்த நாட்டின் முன்னாள் பிரதமர், ஐநா பொதுச்சபையின் வரவிருக்கும் 79ஆவது கூட்டத்தொடரின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்?**

**அ. கேமரூன் ☑**

ஆ. ரஷ்யா

இ. சீனா

ஈ. ஜப்பான்



★ ஐநா பொதுச்சபையின் 79ஆவது கூட்டத்தொடரின் தலைவராக கேமரூனின் முன்னாள் பிரதமர் பிளமோன் யாங் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த அமர்வு செப்.10, 2024 செவ்வாய் அன்று தொடங்கி செப்டம்பர் 24, 2024 செவ்வாய் அன்று நியூயார்க் நகரில் முடிவடையும். பிளமோன் யாங் ஓராண்டு காலத்திற்கு இதன் தலைமைப் பொறுப்பை வகித்திருப்பார். ஐநா பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரெஸ், பிளமோன் யாங்கை, "தன்னுடைய கண்டத்தின் எதிர்காலத்திற்காக தன்னையே அர்ப்பணித்த பெருமைக்குரிய ஆப்பிரிக்கர்" என்று விவரித்தார்.

**20. அண்மையில், 2024 – நார்வே செஸ் போட்டியை 17.5 புள்ளிகளுடன் வென்றவர் யார்?**

அ. R பிரக்ஞானந்தா

**ஆ. மேக்னஸ் கார்ல்சன் ☑**

இ. ஃபேபியானோ கருவானா

ஈ. குகேஷ் டி



★ மேக்னஸ் கார்ல்சன் நார்வே செஸ் போட்டியில் ஆறாவது முறையாக வென்றார். ஃபேபியானோ கருவானாவுக்கு எதிரான ஆர்மகெடான் டை–பிரேக்கரில் அவர் இவ்வெற்றியைப்பெற்றார்.

★ இந்திய கிராண்ட்மாஸ்டர் R பிரக்ஞானந்தா இறுதிச்சுற்றில் ஹிகாரு நகமுராவை வீழ்த்தி மேக்னஸ் கார்ல்சனை விட 3 புள்ளிகள் பின்தங்கி 3ஆவது இடத்தைப்பிடித்தார். பெண்கள் பிரிவில் இந்தியாவின் R வைஷாலி நான்காவது இடத்தையும், GM கோனேரு ஹம்பி ஐந்தாமிடத்தையும் பிடித்தனர். ஸ்டாவஞ்சரில் நடைபெற்ற இந்தப்போட்டியில், இறுதிச்சுற்றில் பல பரபரப்பான ஆட்டங்கள் இடம்பெற்றன.

**21. இந்தியக்கடற்படையின் முதல் பெண் ஹெலிகாப்டர் ஓட்டுநர் யார்?**



அ. மோகனா சிங்

**ஆ. அனாமிகா B ராஜீவ் ☑**

இ. பிரியா பால்

ஈ. அர்ச்சனா கபூர்

★ துணை Lt. அனாமிகா B ராஜீவ், அரக்கோணம் INS ராஜாளியில், இந்தியக்கடற்படையில் ஹெலிகாப்டரில் பறந்த முதல் பெண்மணி என்ற சாதனையைப் படைத்தார். இந்தச் சாதனை 102ஆவது ஹெலிகாப்டர் கன்வெர்ஷன் கோர்ஸின் பாஸ்சிங் அவுட் அணிவகுப்பின்போது எட்டப்பட்டது. ஜூன்.7 அன்று 4ஆவது அடிப்படை ஹெலிகாப்டர் கன்வெர்ஷன் பயிற்சியின் முதல்கட்டப்பயிற்சியின் முடிவைக்குறிக்கும் நிகழ்வில் துணை அட்மிரல் ராஜேஷ் பெந்தகர் இருபத்தோரு அதிகாரிகளுக்கு, "பொன்னிறக்கைகள் – Golden Wings" விருதை வழங்கினார்.

**22. அண்மையில், பிரேம் சிங் தமாங் என்பவர் கீழ்க்காணும் எந்த இமயமலை மாநிலத்தின் முதலமைச்சரானார்?**



அ. உத்தரகாண்ட்

**ஆ. சிக்கிம் ☑**

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. மேகாலயா

★ சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சா கட்சியின் பிரேம் சிங் தமாங் சிக்கிமின் முதலமைச்சராக ஜூன்.10 அன்று இரண்டாவது முறையாக பதவியேற்றார். 56 வயதான அவர் நேபாளி மொழகயில் உறுதிமொழி கூறி பதவியேற்றார். ஆளுநர் லக்ஷ்மண் பிரசாத் ஆச்சார்யா அவருக்கு வால் கேங்க்டாக்கில் உள்ள பால்ஜோர் அரங்கத்தில் வைத்து பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். சோனம் லாமா, அருண் குமார் உப்ரேட்டி உட்பட 11 அமைச்சர்களும் பதவியேற்றனர்.

**23. அண்மையில், மத்திய பிரதேசத்தின் எந்தப் புலிகள் காப்பகத்தில், முதன்முறையாக ஓர் அரிய 4 கொம்புகள் கொண்ட மறிமான் காணப்பட்டது?**



**அ. வீராங்கனை துர்காவதி புலிகள் காப்பகம் ☑**

ஆ. கன்ஹா புலிகள் காப்பகம்

இ. பென்ச் புலிகள் காப்பகம்

ஈ. பன்னா புலிகள் காப்பகம்

★ 'சௌசிங்கா' என்றழைக்கப்படும் ஓர் அரிய 4 கொம்புகள்கொண்ட மறிமான் முதன்முறையாக முன்னர் நௌரதேகி சரணாலயம் என்றழைக்கப்பட்ட வீராங்கனை துர்காவதி புலிகள் காப்பகத்தில் தென்பட்டது. *Tetracerus quadricornis* என்ற அறிவியல் பெயருடைய மிகச்சிறிய ஆசிய மான் வகையான இது, இந்தியா மற்றும் நேபாளத்தில் மட்டுமே உள்ளது. இம்மான்கள் வறண்ட, இலையுதிர் காடுகள் மற்றும் மலைப்பாங்கான நிலப்பரப்புகளில் வாழ்கின்றன. ஆண் மான்களுக்கு மட்டுமே 4 கொம்புகள் உள்ளன. IUCNஇன் சிவப்புப்பட்டியலில் இம்மான்கள் பாதிக்கப்படக் கூடியவை எனப் பட்டியலிடப்பட்டுள்ளன.

24. 'AIM – ICDK நீர் சவால் 4.0' என்பது கீழ்க்காணும் எந்த அமைப்பின் முன்முயற்சியாகும்?

அ. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம்

**ஆ. NITI ஆயோக் ☑**

இ. வேளாண்மை அமைச்சகம்

ஈ. மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்

★ NITI ஆயோக்கின்கீழ் உள்ள அடல் புத்தாக்க இயக்கம் (AIM) இரண்டு முன்முயற்சிகளை அறிமுகப்படுத்தியது: 'AIM – ICDK நீர் சவால் 4.0' மற்றும் 'உங்களுக்கான கண்டுபிடிப்புகள்' கையேட்டின் ஐந்தாவது பதிப்பு.

★ இந்தியாவில் உள்ள இராயல் டேனியர் தூதரகத்தில் அமைந்துள்ள டென்மார்க் புதுமை கண்டுபிடிப்பு மையத்துடன் இணைந்து அடல் புத்தாக்க இயக்கம், நீர் சவாலில் வெளிப்படையான புதுமைக் கண்டுபிடிப்புகளின் நான்காவது பதிப்பை வெளியிட்டுள்ளது. இந்த முன்முயற்சி கண்டுபிடிப்புத் தீர்வுகள்மூலம் சிக்கலான தண்ணீர் தொடர்பான சவால்களை எதிர்கொள்ள இந்தியா – டேனிய இருதரப்பு பசுமை உத்திசார்ந்த கூட்டாண்மையின் முக்கியத்துவம் வாய்ந்ததாக திகழ்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் இந்திய கூட்டாண்மையை உலகளாவிய அடுத்த தலை முறை டிஜிட்டல் செயல் திட்டத்தில் பங்கேற்கும் மற்றும் ஒன்பது நாடுகளின் (இந்தியா, டென்மார்க், கானா, கென்யா, கொரியா, தான்சானியா, தென்னாப்பிரிக்கா, கானா, கொலம்பியா & மெக்ஸிகோ) முன்னணி பல்கலைக்கழகங்கள் மற்றும் கண்டுபிடிப்பு மையங்களிலிருந்து இளம் திறமையாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நாட்டில் முதல்முறையாக... சென்னையில் அரசு இலவச செயற்கை கருத்தரிப்பு மையம் தொடக்கம்!**

நாட்டிலேயே முதல்முறையாக சென்னை, எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனையில் இலவச செயற்கை கருத்தரிப்பு மையம் மற்றும் பிரசவ வளாகம் ஜூன்.07 அன்று தொடங்கப்பட்டது. எழும்பூர் அரசு மருத்துவமனையிலும், மதுரையில் இராஜாஜி மருத்துவமனையிலும் செயற்கை கருத்தரித்தல் மையம் தொடங்கப்படும் என்று 2022–23ஆம் ஆண்டு மானியக்கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு ஒரு லட்சம் மகப்பேறுகளில் தாய்மார்களின் இறப்பு 70க்கும் மேல் இருந்தது. அது தொடர்ச்சியாக படிப்படியாக குறைந்து கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னாள் 54ஆகவும், கடந்த ஆண்டு 52ஆகவும், இந்த ஆண்டு 45ஆகவும் குறைந்துள்ளது. . உலக சுகாதார மையம் இன்றைக்கு இந்தியாவில் கருத்தரிப்பின்மை பாதிப்பு என்பது 25–45 வயதுக்குட்பட்ட மகளிருக்கு 3.9 சதவீதமாக இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

---

**2. 'ரெப்போ' வட்டி விகிதம்: 8ஆவது முறையாக மாற்றமில்லை.**

வங்கிகளுக்கான குறுகிய காலக்கடன்கள் மீதான வட்டி விகிதத்தில் (ரெப்போ ரேட்) எவ்வித மாற்றத்தையும் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மேற்கொள்ளவில்லை. தொடர்ந்து எட்டாவது முறையாக வட்டி விகிதம் மாற்றமில்லாமல் 6.50 சதவீதமாக தொடர்கிறது.

RBI ஆளுநர் சக்திகாந்த தாஸ் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: நாட்டின் பொருளாதாரம், நிதிசார் முன்னேற்றங்களைக் கருத்தில்கொண்டு 6.5% வட்டி விகிதத்தை மாற்றமின்றி தொடர்வது என்று நிதிக்கொள்கைக் குழு கூட்டத்தில் பெரும்பான்மையாக முடிவெடுக்கப்பட்டது.

**பொருளாதார வளர்ச்சி 7.2%:**

கடந்த நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.2 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டின் கடைசி காலாண்டில் வேகமெடுத்த பொருளாதார வளர்ச்சியால் (7.8 சதவீதம்) இது சாத்தியமானது.

**பணவீக்கம் 4.5%:** கடந்த நிதியாண்டில், பணவீக்கம் 4.8%ஆக இருந்தது. இந்நிதியாண்டில் அது 4.5 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உள்நாட்டு தங்க இருப்பு அதிகரிப்பு:** வெளிநாட்டு இருப்பின் ஒருபகுதியாக பிரிட்டனில் இருந்து 100 மெட்ரின் டன் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த தங்க இருப்பு 822 டன்னாக உள்ளது. அதில் 408 டன் உள்நாட்டிலும் 413 டன் வெளிநாட்டிலும் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

**அந்நியச் செலாவணி உச்சம்:** இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு இதுவரை இல்லாத அளவுக்குக் கடந்த மே.31ஆம் தேதி $65,151 கோடி டாலராக உச்சம் பெற்றது.

---

**3. பனை மரங்கள் பாதுகாப்பு:**

உடன்குடி, அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் பனைத்தொழிலை நம்பி ஏராளமான தொழிலாளர்கள் உள்ளனர். இந்த மாவட்டத்தில் பனங்கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்ற உணவுப்பொருள்கள் பிரபலமானவை. இங்கு உற்பத்தி செய்யப்படும் பனைப்பொருள்கள் தமிழ்நாடு மட்டுமன்றி, இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதோடு, அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன. மேலும், உடன்குடி பனங்கருப்பட்டிக்கு புவிசார் குறியீடும் உள்ளது. தமிழ்நாடு முழுவதும் பனை மரங்களை வெட்டுவதைத் தடுக்க கடந்த 2021ஆம் ஆண்டு அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

**4. 'நடந்தாய் வாழி காவேரி' திட்டத்துக்கு மத்திய நீர்வள ஆணையம் ஒப்புதல்.**

காவேரியாறு மற்றும் அதன் துணையாறுகளுடன் இணைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான நீர்நிலைகளுக்கு புத்துயிரளிக்கும் வகையில் ₹11,250 கோடி மதிப்பில், 'நடந்தாய் வாழி காவேரி' திட்டத்துக்கு மத்திய அரசின் மத்திய நீர்வள ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

முதல் கட்டமாக ₹1,958 கோடியில் புனரமைப்புத் திட்டம் மேட்டூர் முதல் திருச்சிராப்பள்ளி வரையிலும், 2ஆவது கட்ட புனரமைப்பு பணி திருச்சிராப்பள்ளி முதல் காவேரி கடலில் இணையும் இடம் வரையிலான ஆற்றின் போக்கில் ₹8,753 கோடி செலவில் காவேரி புத்துயிர் திட்டம் செயல்படுத்தப்படும்.

'நமாமி கங்கை' திட்டத்தைத் தொடர்ந்து, காவேரி, கிருஷ்ணா, கோதாவரி, மகாநதி உள்ளிட்ட தென்மாநிலங்களில் வற்றாத ஆறுகளுக்குப் புத்துயிரளிக்க மத்திய அரசு முடிவுசெய்துள்ளது. இந்தத் திட்டத்துக்கான பூர்வாங்க அறிக்கை 2019 அக்.21ஆம் தேதி ஜல் சக்தி அமைச்சகத்திடம் கொள்கை ரீதியான ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

---

**5. பிரதமராக நரேந்திர மோதி இன்று பதவியேற்பு:**

பிரதமராக தொடர்ந்து 3ஆம் முறையாக நரேந்திர மோதி ஜூன்.09 அன்று பதவியேற்கவுள்ளார். அவருக்கு குடியரசுத் தலைவர் பதவிப்பிரமாணமும் ரகசியக்காப்பு பிரமாணமும் செய்துவைப்பார். நாட்டில் தொடர்ந்து 3 முறை பிரதமரான முன்னாள் பிரதமா ஜவஹர்லால் நேருவின் சாதனையை நரேந்திர மோதி தற்போது சமன் செய்யவுள்ளார். அண்மையில் நடந்த 18ஆவது மக்களவைத் தேர்தலில், மொத்தமுள்ள 543 தொகுதிகளில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 293 இடங்களைக் கைப்பற்றி ஆட்சியைத் தக்கவைத்தது.

---

**6. 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் வெளிநாடு செல்லும் மாணவர்கள்:**

'நான் முதல்வன்' திட்டத்தின் பல்வேறு பாடப்பிரிவுகளில் தேர்வுசெய்யப்பட்ட தமிழ்நாட்டுக்கல்லூரிகளைச்சேர்ந்த 25 மாணவ, மாணவிகள் சிறப்புப்பயிற்சி பெறுவதற்காக இலண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பின் (ILO) பன்னாட்டு தொழிலாளர் மாநாட்டின் (ILC) 112ஆவது அமர்வு நடைபெற்ற இடம் எது?**

**அ. ஜெனீவா, சுவிட்சர்லாந்து ☑**

ஆ. லண்டன், இங்கிலாந்து

இ. புது தில்லி, இந்தியா

ஈ. பாரிஸ், பிரான்ஸ்

★ ஜெனீவாவில் நடைபெற்ற பன்னாட்டு தொழிலாளர் மாநாட்டின் 112ஆவது அமர்வில் செயலாளர் சுமிதா தௌரா தலைமையிலான இந்திய பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். சுமிதா தௌரா இந்தியத் திருநாட்டின் தொழிலாளர் சீர்திருத்தங்கள், முறைசாரா தொழிலாளர்களுக்கான சமூகப்பாதுகாப்பு மற்றும் பெண் தொழிலாளர் பங்கேற்புபற்றி விவாதித்தார். ILO தலைவர்களுடனான அவரது சந்திப்புகள் உலகளாவிய திறன் கட்டமைப்பு, சமூகப்பாதுகாப்பு, புதிய பணிவாய்ப்புகள் மற்றும் திறமையான தொழிலாளர்கள் இடம்பெயர்வு ஆகியவற்றில் கவனம் செலுத்தியது. பிரதமர் உஜ்வாலா யோஜனா மற்றும் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தாக்கம்போன்ற முன்முயற்சிகளை எடுத்துரைத்து, பாதுகாப்புத்துறையின் முக்கியத்துவத்தை இந்தியத் தூதுக்குழு வலியுறுத்தியது.

**2. அண்மையில், 'வித்யுத் ரக்ஷக்' என்ற ஒருங்கிணைந்த மின்னியற்றி கண்காணிப்பு, பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ள ஆயுதப்படை எது?**



அ. இந்திய விமானப்படை

ஆ. இந்திய கடற்படை

**இ. இந்திய ராணுவம் ☑**

ஈ. தேசிய பாதுகாப்புப் படை

★ ராணுவ வடிவமைப்பு பணியகத்தால் உருவாக்கப்பட்ட மின்னியற்றி கண்காணிப்பு, பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பான, 'வித்யுத் ரக்ஷக்'ஐ இந்திய ராணுவம் அறிமுகப்படுத்தியுள்ளது. IoT தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இது செயல்பாடுகளை தானியங்குபடுத்துகிறது, தவறுகளை முன்னறிவிக்கிறது, மேலும் அனைத்து மின்னியற்றி வகைகளுடனும் பணிசெய்கிறது; இதன்மூலம் மானுட ஆற்றல் சேமிப்பதை அது தனது நோக்கமாகக்கொண்டுள்ளது. 'தொழில்நுட்பத்தை உள்வாங்கிக்கொள்ளுதல் ஆண்டின்' ஒருபகுதியாக, இது இந்திய ராணுவத்தின் தொழில்நுட்ப உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. 2023 – ஏரோ இந்தியா நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்ட, 'வித்யுத் ரக்ஷக்', இப்போது இராணுவத்தால் பயன்பாட்டில் உள்ளது.

**3. கட்டபிரபா ஆறானது கீழ்க்காணும் எந்த ஆற்றின் துணையாறாகும்?**



**அ. கிருஷ்ணா ☑**

ஆ. கோதாவரி

இ. காவேரி

ஈ. நர்மதா

★ கர்நாடகத்தில் பாயும் கிருஷ்ணா ஆற்றின் துணையாறான கட்டபிரபா ஆற்றில் டிராக்டர் கவிழ்ந்ததில் 9 பேர் அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டனர். மேற்குத்தொடர்ச்சி மலைகளில் உருவாகும் இந்த ஆறு, கிழக்கே 283 கிமீட்டர்கள் பாய்ந்து கிருஷ்ணா ஆற்றில் கலக்கிறது. பெல்காம் மாவட்டத்தில் 53 மீ கீழேவீழ்ந்து கோகாக் அருவியை உருவாக்குகிறது. ஹிரண்யகேஷி மற்றும் மார்கண்டேய ஆறுகள் உள்ளிட்ட துணையாறுகளுடன், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா முழுவதும் 8,829 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் இந்த ஆற்றுப்படுகை பரவியுள்ளது.

**4. பிரதமர் கிசான் நிதி திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**



அ. உழவர்களின் குழந்தைகளுக்கு கல்வி வழங்குதல்

**ஆ. நிலம் வைத்துள்ள உழவர் குடும்பங்களின் நிதித்தேவைகளை பூர்த்தி செய்தல் ☑**

இ. உழவர்களுக்கு மருத்துவக் காப்பீடு வழங்குதல்

ஈ. உழவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல்

★ பிரதமர் கிசான் நிதி திட்டத்தின் 17ஆவது தவணையை பிரதமர் விடுவித்தார். வேளாண்மை மற்றும் உழவர்கள்நல அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படும் இந்த மத்தியத் துறைத் திட்டம், நிலம் வைத்திருக்கும் உழவர்களின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஆண்டுக்கு ₹6,000 வருமான ஆதரவை வழங்குகிறது; ஒவ்வொரு நான்கு மாதங்களுக்கும் ஒரு முறை ₹2,000 என மூன்று தவணைகளில் இந்த வருமான ஆதரவு வழங்கப்படுகிறது. பயனாளிகளில் உயர்–பொருளாதார நிலையில் உள்ளவர்களைத்தவிர்த்து, தகுதியுள்ள நிலம் வைத்துள்ள அனைத்து உழவர் குடும்பங்களும் இதன் கீழ் பயனடைவர்.

**5. 'சைலிட்டால் – Xylitol' என்றால் என்ன?**



அ. சிறுகோள்

**ஆ. செயற்கை இனிப்பூட்டி ☑**

இ. மலேரியாவுக்கானத் தடுப்பூசி

ஈ. ஆக்கிரமிப்புக்களை

★ செயற்கை இனிப்பூட்டியான, 'சைலிட்டால்' உடல்நலக்கேடுகளை ஏற்படுத்தக்கூடும் என்று ஓர் அண்மைய ஆய்வு சுட்டிக்காட்டுகிறது; இது மாரடைப்பு மற்றும் பக்கவாதம்போன்ற இருதய பாதிப்புகளின் வாய்ப்பை அதிகரிக்கிறது. ஒரு சர்க்கரை ஆல்கஹாலான சைலிட்டால், சர்க்கரை இல்லாத சூயிங்கம், நீரிழிவு நோய்க்கு ஏற்ற உணவுகள் மற்றும் வாய்வழி பராமரிப்புப்பொருட்களில் இனிப்புப்பொருளாக பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இது சர்க்கரை மற்றும் ஆல்கஹால் மூலக்கூறுகளின் பண்புகளை ஒருங்கிணைத்து, தாவரப் பொருட்களிலிருந்து இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பெறப்படுகிறது.

**6. அண்மையில், 2024 – பிரெஞ்ச் ஓபன் மகளிர் பட்டத்தை வென்ற இகா ஸ்வியாடெக் சார்ந்த நாடு எது?**



அ. அயர்லாந்து

**ஆ. போலந்து ☑**

இ. சீனா

ஈ. இந்தியா

★ 23 வயதான இகா ஸ்வியாடெக், ஜாஸ்மின் பௌலினியை தோற்கடித்து தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரெஞ்ச் ஓபன் மகளிர் பட்டத்தை வென்றார். ஜஸ்டின் ஹெனினுக்குப் பிறகு (2005–2007) இந்தச் சாதனையை நிகழ்த்திய முதல் பெண்மணி என்ற பெருமையை அவர் படைத்துள்ளார். போலந்து நாட்டைச்சேர்ந்த இகா ஸ்வியாடெக், மகளிர் டென்னிஸ் சங்கத்தின்படி பெண்கள் ஒற்றையர் பிரிவில் தற்போது உலகதத்தரவரிசையில் நெ:01இல் உள்ளார்.

**7. 2024 – பன்னாட்டு யோகா நாளுக்கானத் தயாரிப்புகளைத் தொடங்கியுள்ள அமைச்சகங்கள் எவை?**

அ. உழவு அமைச்சகம் & ஆயுஷ் அமைச்சகம்

**ஆ. தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் & ஆயுஷ் அமைச்சகம் ☑**



இ. தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் & பாதுகாப்பு அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம் மற்றும் ஆயுஷ் அமைச்சகம்

★ 2024 ஜூன்.21 அன்று நடக்கவுள்ள வருடாந்திர பன்னாட்டு யோகா நாளுக்கானத் தயாரிப்புகள்குறித்து தில்லியில் தகவல் ஒலிபரப்பு அமைச்சக செயலாளர் சஞ்சை ஜாஜூ, ஆயுஷ் அமைச்சக செயலாளர் வைத்திய இராஜேஷ் கோட்டேச்சா ஆகியோர் ஆய்வுசெய்தனர். யோகா பயிற்சியின் பயன்கள்பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் ஊடகப்பிரிவுகள் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

★ பத்திரிகை தகவல் அலுவலகம், பிரசார் பாரதி, புதிய ஊடகப் பிரிவு உள்ளிட்ட பிரிவுகள் முக்கிய நிகழ்வுகளுக்கு திட்டமிட்டு வருகின்றன. பன்னாட்டு யோகா நாளன்று காலைநேர செயல்பாடுகளை நேரலையில் ஒலிபரப்பவுள்ள தூர்தர்ஷன் யோகா குறித்த பல்வேறு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும். அனைத்து ஊடகத்தளங்களிலும் பகிர்வதற்காக 'யோகா கீத'த்தை ஆயுஷ் அமைச்சகம் தயார்செய்துள்ளது.

**8. பன்னாட்டு விண்வெளி நிலையத்தில் பன்மருந்து எதிர்ப்பாற்றல்கொண்ட நோய்க்கிருமிகளை ஆய்வுசெய்ய NASAஉடன் கூட்டிணைந்துள்ள IIT எது?**



அ. ஐஐடி பம்பாய்

ஆ. ஐஐடி கான்பூர்

இ. ஐஐடி ஆமதாபாத்

**ஈ. ஐஐடி மெட்ராஸ்☑**

★ ஐஐடி மெட்ராஸ் மற்றும் NASAஇன் JPL ஆராய்ச்சியாளர்கள் பன்னாட்டு விண்வெளி நிலையத்தில் (ISS) பன்மருந்து எதிர்ப்பாற்றல்கொண்ட நோய்க்கிருமிகளை ஆராய்ந்து வருகின்றனர். இது விண்வெளி வீரர்களின் நலத்திற்கும் புவிக்கும் சாத்தியமான நன்மைகளைக் கொண்டுள்ளது. ISS பரப்புகளில் உள்ள பொதுவான நோய்க்கிருமியான '*Enterobacter bugandensis*'ஐ மையமாகக் கொண்ட இந்த ஆய்வு, நோய்க்கிருமிகளின் மரபணு, செயல்பாடு மற்றும் வளர்சிதை மாற்ற மேம்பாடுகளை ஆராய்கிறது. இந்தக் கண்டுபிடிப்புகள் விண்வெளியிலும் புவியிலும் மருந்து–எதிர்ப்பாற்றல்கொண்ட நோய்த்தொற்றுகளை எதிர்த்துப்போராடுவதற்கான உத்திகளை வகுக்க உதவும்.

**9. அண்மையில், UFCஇல் வெற்றிபெற்ற முதல் இந்திய கலப்பு தற்காப்புக்கலை வீராங்கனை என வரலாற்றுச் சாதனை படைத்தவர் யார்?**



**அ. பூஜா தோமர் ☑**


ஆ. ரஜனி தியோரி

இ. ரோஷிபினா தேவி

ஈ. நெய்மன் வாங்சு

★ உத்தர பிரதேச மாநிலம் புதானாவை சேர்ந்த பூஜா தோமர், UFCஇல் வெற்றிபெற்ற முதல் இந்திய கலப்பு தற்காப்புக் கலை வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார். UFC–க்கு முன், அவர் 5 தேசிய வுஷூ பட்டங்களைப்பெற்றார். ரயன்னே தாஸ் சாண்டோசுக்கு எதிரான அவரது இவ்வெற்றி, 30–27, 27–30, மற்றும் 29–28 என்ற புள்ளிகளுடன் கிடைக்கப் பெற்றது.

**10. அண்மையில், எந்த மாநிலத்தின் முதலமைச்சராக சந்திரபாபு நாயுடு பதவியேற்றார்?**



அ. தமிழ்நாடு

ஆ. தெலுங்கானா

**இ. ஆந்திர பிரதேசம் ☑**

ஈ. கர்நாடகா

★ **தெலுங்கு தேசம் கட்சியின் (TDP)** தேசியத்தலைவர் N சந்திரபாபு நாயுடு, எஞ்சியிருக்கும் ஆந்திர பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராக இரண்டாவது முறையாக ஜூன்.12 அன்று பதவியேற்றார். அம்மாநில ஆளுநர் S அப்துல் நசீர் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். 40 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் நான்காவது முறையாக அவர் முதலமைச்சராக பதவியேற்றுள்ளார்; ஒருங்கிணைந்த ஆந்திர பிரதேச மாநிலத்தில் இரண்டு முறையும், தற்போது, பிரிக்கப்பட்ட ஆந்திர பிரதேசத்தில் இரண்டு முறையும் முதலமைச்சராக பணியாற்றியுள்ளார்.

**11. அண்மையில் விமான விபத்தில் காலமான சௌலோஸ் கிளாஸ் சிலிமா, கீழ்க்காணும் எந்த நாட்டின் துணை அதிபராக இருந்தார்?**

அ. ருவாண்டா

ஆ. மொரிஷியஸ்

**இ. மலாவி ☑**

ஈ. தான்சானியா



★ மலாவியின் துணை அதிபராக இருந்த சௌலோஸ் கிளாஸ் சிலிமா மற்றும் 9 பேர் விமான விபத்தில் உயிரிழந்தனர். லிலாங்வேயிலிருந்து புறப்பட்ட அவ்விமானம் போய்ச்சேரவேண்டிய இடமான சூசுவை மோசமான கட்புலனாகு தன்மை மற்றும் தொடர்பிழப்பு ஆகியவற்றின் காரணமாக சென்றடைய முடியாமல் விபத்துக்குள்ளானது. சிகங்காவா வனப்பகுதியில் நிகழ்ந்த அக்கோரவிபத்தில் எவரும் உயிர்பிழைக்கவில்லை என்பதை அந்நாட்டு அதிபர் லாசரஸ் சக்வேரா உறுதிப்படுத்தினார்.

**12. காந்தி சாகர் வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. மத்திய பிரதேசம் ☑**

ஆ. உத்தர பிரதேசம்

இ. மகாராஷ்டிரா

ஈ. கர்நாடகா



★ காந்தி சாகர் வனவிலங்கு சரணாலயத்தை புதிய சிறுத்தைகளின் வாழ்விடமாக மாற்ற மத்திய பிரதேச அரசு முடிவு செய்துள்ளது. கென்யா மற்றும் தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த குழுக்கள் அத்தளத்தை மதிப்பீடு செய்தன; மேலும் வேட்டையாடும் விலங்குகள் மற்ற புலிகலள் காப்பகங்களில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டன. 2022இல் குனோ தேசியப்பூங்காவில் 8 நமீபிய சிறுத்தைகள் விடப்பட்டன; அதைத்தொடர்ந்து 2023இல் தென்னாப்பிரிக்காவிலிருந்து மேலும் 12 சிறுத்தைகள் விடப்பட்டன.

**13. அண்மையில், '2024 – ஜப்பான் இந்தியா கடல்சார் பயிற்சி (JIMEX–24)' தொடங்கப்பட்ட இடம் எது?**

அ. குஜராத், இந்தியா

**ஆ. யோகோசுகா, ஜப்பான் ☑**

இ. டோக்கியோ, ஜப்பான்

ஈ. சென்னை, இந்தியா



★ 8ஆவது ஜப்பான்–இந்தியா கடல்சார் பயிற்சியான, 'JIMEX–24' ஜப்பானின் யோகோசுகாவில் தொடங்கியது. ஜப்பான் கடல்சார் தற்காப்புப்படையால் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சியில், இந்திய கடற்படையின் INS ஷிவாலிக் மற்றும் ஜப்பான் கடல்சார் தற்காப்புப்படையின் JS யுகிரி ஆகியவை பங்கேற்றன. இப்பயிற்சியில் துறைமுகம் மற்றும் கடல் கட்டங்கள் அடங்கும். கடற்படை தொடர்பு மற்றும் போர் திறன்களை மையமாகக்கொண்ட இது, ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தும் மற்றும் இயங்குதன்மையை மேம்படுத்தும்.

**14. அண்மையில், ஐநா பொதுச்சபையால், 'சர்வதேச குவாண்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆண்டு' என அறிவிக்கப்பட்ட ஆண்டு எது?**



அ. 2024

**ஆ. 2025 ☑**

இ. 2026

ஈ. 2027

★ ஐநா பொதுச்சபையானது 2025ஆம் ஆண்டை, 'சர்வதேச குவாண்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆண்டாக' அறிவித்துள்ளது. 2024 ஜூன்.07 அன்று எடுக்கப்பட்ட இம்முடிவு, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது, இளையோரின் ஈடுபாட்டை ஊக்குவிப்பது & குவாண்டம் அறிவியல் பயன்பாடுகளை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஆண்டு (2025) வெர்னர் ஹைசன்பெர்க்கின் அடிப்படை குவாண்டம் மெக்கானிக்ஸ் தாளின் நூற்றாண்டைக்குறிக்கிறது. கூடுதலாக, 2025ஆம் ஆண்டு கூட்டுறவு, அமைதி மற்றும் நம்பிக்கை மற்றும் பனிப் பாறை பாதுகாப்புக்காகவும் அறிவிக்கப்பட்டது; அதே நேரத்தில் 2024ஆம் ஆண்டு ஒட்டகங்களைக்கொண்டாடுகிறது.

**15. அண்மையில், எந்த மாநிலத்தின் முதலமைச்சராக மோகன் சரண் மாஜி பதவியேற்றார்?**



**அ. ஒடிசா ☑**

ஆ. இமாச்சல பிரதேசம்

இ. மகாராஷ்டிரா

ஈ. கர்நாடகா

★ பாரதிய ஜனதா கட்சியின் (BJP) மோகன் சரண் மாஜி ஒடிசாவின் முதலமைச்சராக 2024 ஜூன்.12 அன்று ஆளுநர் ரகுபர் தாஸ் பதவிப்பிரமாணம் செய்து வைக்க பதவியேற்றுக் கொண்டார். இந்தப் பதவியை வகிக்கும் முதல் பாஜக தலைவரும் மூன்றாவது பழங்குடியினரும் இவராவார். இரண்டு துணை முதலமைச்சர்களாக, கனக் வர்தன் சிங் தியோ மற்றும் பிரவதி பரிதா ஆகியோரும் பதவியேற்றனர். பிரதமர் நரேந்திர மோதி, அமித் ஷா, ஜே பி நட்டா மற்றும் ஒன்பது பாஜக மாநில முதலமைச்சர்கள் அவ்விழாவில் பங்கேற்றனர்.

**16. 'குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான உலக நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ. ஜூன்.11

**ஆ. ஜூன்.12 ☑**

இ. ஜூன்.13

ஈ. ஜூன்.14

★ குழந்தைத்தொழிலாளர் முறையை ஒழிப்பதில் கவனம் செலுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஜூன்.12ஆம் தேதி உலக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பால் 2002 இல் நிறுவப்பட்ட இந்த நாள், குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது. "Let's act on our commitments: End Child Labour" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். பன்னாட்டு தொழிலாளரமைப்பின், "மோசமான குழந்தைத்தொழிலாளர் முறைகள்" மாநாட்டின் 25ஆவது ஆண்டு நிறைவை இது குறிக்கிறது. பன்னாட்டு தொழிலாளரமைப்பின் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது.

**17. அண்மையில், BRICS நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ. புனித பீட்டர்ஸ்பர்க், ரஷ்யா

ஆ. குவாங்சோ, சீனா

**இ. நிஸ்னி நோவ்கோரோட், ரஷ்யா ☑**

ஈ. பெங்களூரு, இந்தியா

★ புதிய உறுப்பினர்களான எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுடனான முதல் BRICS அமைச்சர்கள் அளவிலான கூட்டம், 2024 ஜூன்.10-11 அன்று ரஷ்யாவின் நிஸ்னி நோவ்கோரோடில் நடந்தது. BRICSஇன் தற்போதைய தலைமைப்பொறுப்பிலுள்ள ரஷ்யா, 2024 அக்டோபரில் 16ஆவது BRICS உச்சிமாநாட்டை நடத்துவதற்கு முன்னோட்டமாக இந்தக் கூட்டத்தை நடத்தியது. 2023 ஆகஸ்டில் தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்ற 15ஆவது BRICS உச்சிமாநாட்டின்போது, புதிய உறுப்பு நாடுகளுக்கு கூட்டமைப்பில் சேர அழைப்பு விடுக்கப்பட்டது.

**18. உலக புலம்பெயர்வு அறிக்கை மற்றும் புலம்பெயர்வு நல ஆண்டறிக்கையை வெளியிடுகிற அமைப்பு எது?**

**அ. புலம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு (IOM) ☑**

ஆ. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO)

இ. உலக வங்கி

ஈ. UNICEF

★ யேமன் கடற்கரையில் படகு கவிழ்ந்ததில் குறைந்தது 49 புலம்பெயர்ந்தோர் இறந்தனர் என்றும் 140 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் ஐநா புலம்பெயர் நிறுவனம் ஜூன்.11 அன்று தெரிவித்துள்ளது. 1951ஆம் ஆண்டு நிறுவப்பட்டது மற்றும் ஜெனிவாவை தலைமையிடமாகக் கொண்டதுமான புலம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு, உலகின் பல்வேறு அரசாங்கங்களுக்கும் புலம்பெயர்ந்தோருக்கும் உதவுகிறது. 175 உறுப்புநாடுகளுடன், இது புலம்பெயர்வு நலம், அவசரகால நடவடிக்கைகள், புலம்பெயர்வு மேம்பாடு ஆகியவற்றில் கவனஞ்செலுத்துகிறது.

**19. அண்மையில், "Raising Ambition, Accelerating Action: Towards Enhanced NDCs for Forests" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. ஐநா வளர்ச்சித் திட்டம் (UNDP)

**ஆ. ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) ☑**

இ. சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)

ஈ. உலக வானிலை அமைப்பு (WMO)

★ ஐநா சுற்றுச் சூழல் திட்டத்தின், "Raising Ambition, Accelerating Action: Towards Enhanced NDCs for Forests" UNEP என்ற அறிக்கை தற்போதைய, தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளில் வனப்பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க இடைவெளிகளை எடுத்துக்காட்டுகிறது. 2019-2023 வரை, வெப்பமண்டல காடழிப்புச் செயல்பாடானது முதல் 20 நாடுகளில் ஆண்டுதோறும் 5.6 பில்லியன் டன்கள் $CO_2$ வெளியாகக் காரணமானது. உழவு மற்றும் பலவீனமான நிலப்பயன்பாட்டுக் கொள்கைகள் காடழிப்புக்கான முதன்மை தூண்டுகோல்களாக உள்ளன.

**20. 2024 – உலகளாவிய பாலின இடைவெளிக்குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ. 123

ஆ. 132

இ. 111

**ஈ. 129 ☑**




★ உலகப் பொருளாதார மன்றத்தின் உலகளாவிய பாலின இடைவெளிக்குறியீட்டில் இந்தியா 129ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டது; ஐஸ்லாந்து முதலிடத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது. தெற்காசியாவில், வங்கதேசம், நேபாளம், இலங்கை மற்றும் பூட்டானைப் பின்தள்ளி இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது. உலக அளவில் பாகிஸ்தான் கடைசி இடத்தில் உள்ளது.

★ பொருளாதார ரீதியாக, இந்தியா, வங்காளதேசம், சூடான், ஈரான், பாகிஸ்தான் மற்றும் மொராக்கோ ஆகியவற்றுடன் குறைந்த பாலின சமத்துவத்தை வெளிப்படுத்துகிறது. உலகளவில் 68.5 சதவீத இடைவெளியுடன், தற்போதைய வேகத்தில் முழு பாலின சமத்துவத்தை அடைய 134 ஆண்டுகள் ஆகும் என்று WEF மதிப்பிடுகிறது.

**21. அண்மையில், எந்த வடகிழக்கு மாநிலத்தின் முதலமைச்சராக பேமா கந்து பதவியேற்றார்?**



**அ. அருணாச்சல பிரதேசம் ☑**

ஆ. அஸ்ஸாம்

இ. மணிப்பூர்

ஈ. மிசோரம்

★ இட்டாநகரில் உள்ள DK மாநில மாநாட்டு மையத்தில் 2024 ஜூன்.13 அன்று பேமா கந்து தொடர்ந்து மூன்றாவது முறையாக அருணாச்சல பிரதேச மாநில முதலமைச்சராகப் பதவியேற்றார். பா. ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கை அடுத்த 5 ஆண்டுகளுக்கு அருணாச்சல பிரதேசத்தின் புதிய அரசாங்கத்திற்கு வழிகாட்டும் என்று அவர் அறிவித்தார்.

**22. 2025இல் ஆடவர் ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பையை நடத்தவுள்ள நாடு எது?**



அ. ஜெர்மனி

ஆ. பிரான்ஸ்

**இ. இந்தியா ☑**

ஈ. மலேசியா

★ பன்னாட்டு ஹாக்கி சம்மேளனம் (FIH) 2025 டிசம்பரில் 24 அணிகள் பங்கேற்கும் முதல் FIH ஹாக்கி ஆடவர் ஜூனியர் உலகக்கோப்பையை நடத்த இந்தியாவைத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த முடிவு ஹாக்கியில் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் பன்முகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் FIHஇன் உத்தியுடன் ஒத்துப்போகிறது.

★ FIH தலைவர் தயப் இக்ரம் மற்றும் ஹாக்கி இந்தியாவின் தலைவர் Dr திலிப் டிர்கி ஆகியோர் நிகழ்வின் முக்கியத்துவத்தையும், உலகளாவிய ஹாக்கி திறமைகளை வளர்ப்பதில் இந்தியாவின் அர்ப்பணிப்பையும் வலியுறுத்தினர். இதற்கு முன்பு மூன்று முறை போட்டிகளை நடத்தியுள்ள இந்தியா, இரண்டு முறை வென்றுள்ளது.

**23. அண்மையில், 'உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள்' என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. உலக வங்கி ☑**

ஆ. UNEP


இ. UNDP

ஈ. ILO

THE WORLD BANK

★ உலக வங்கியின் 2024 ஜூன் – உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை, 2024–25க்கான இந்தியாவின் GDP வளர்ச்சிக்கணிப்பை ஜனவரியிலிருந்த 6.4%இல் இருந்து 6.6%ஆகத் திருத்தியுள்ளது. 2024–25இல் இந்தியா விரைவாக வளரும் மிகப்பெரிய பொருளாதாரமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. 2025–26ஆம் ஆண்டின் முன்கணிப்பு 6.5%இல் இருந்து 6.7%ஆக அதிகரித்துள்ளது. இந்தியப் பொருளாதாரம் 2023–24இல் NSOஇன்படி 8.2% வளர்ந்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி அதன் 2024–25 கணிப்பை 7.2%ஆக உயர்த்தியது.

**24. அண்மையில், இராணுவத்தின் அடுத்த தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டவர் யார்?**



அ. முகேஷ் சாதா

**ஆ. உபேந்திர திவேதி ☑**

இ. தீரேந்திர சிங்

ஈ. மஞ்சித் குமார்

★ Lt.Gen உபேந்திர திவேதி, ஜெனரல் மனோஜ் சி பாண்டேவுக்குப்பிறகு, ராணுவத்தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். 1964 ஜூலை.01இல் பிறந்த அவர், 1984இல் காலாட்படையில் (ஜம்மு & காஷ்மீர் ரைபிள்ஸ்) சேர்ந்தார். ஏறக்குறைய 40 ஆண்டுகால சேவையுடன், காலாட்படையின் தலைமை இயக்குநர் மற்றும் GOC–in–C வட கட்டளைபோன்ற பதவிகளை வகித்துள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. லோக் ஆயுக்தா தலைவராக மு இராஜாராம் நியமனம்.**

தமிழ்நாடு லோக் ஆயுக்தா அமைப்பின் தலைவராக மு. இராஜாராம் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான ஆணையை மனிதவள மேலாண்மைத்துறை வெளியிட்டுள்ளது. லோக் ஆயுக்தா அமைப்பின் தலைவர் மற்றும் நீதித்துறைசாரா இரு உறுப்பினர்களை நியமனஞ்செய்வதற்கான தேர்வுக்குழு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது.

---

**2. 2030ஆம் ஆண்டுக்குள் காற்றாலைமூலம் 500 கிகாவாட் (GW) மின்னுற்பத்தி செய்ய இலக்கு.**

இந்தியாவில் 2030–க்குள் காற்றாலைமூலம் 500 GW மின்னுற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்படுள்ளதாக தேசிய காற்றாலைகள் நிறுவன முன்னாள் பொது இயக்குநர் தெரிவித்தார்.

---

**3. பழங்கள், காய்களின் தரம் அதிகரிக்க மெத்தைலோ பாக்டீரியாவை பயன்படுத்தலாம்: வேளாண்துறை தகவல்.**

மெத்தைலோ பாக்டீரியாவை பயன்படுத்துவதன்மூலம் பழங்கள், காய்கள் மற்றும் விதைகளின் தரம் அதிகரிக்கும் என தமிழ்நாடு வேளாண் துறை தெரிவித்துள்ளது. மெத்தைலோ பாக்டீரியாவை பயண்படுத்துவதன்மூலம் விதை முளைப்புத்திறன் மற்றும் நாற்றுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும். பூக்கும் காலம் மற்றும் காய்களின் அறுவடைக்காலம் குறையும். பழங்கள், காய்கள், விதைகளின் நிறம், தரம் அதிரிக்கும். அதேபோல், பயிர்களின் விளைச்சல் 10 சதவீதம் அதிகரிப்பதுடன், வறட்சியைத் தாங்கும் திறனைப் பயிர்களுக்கு அளிக்கிறது.

---

**4. 40 வயதுக்கு மேற்பட்டோர் ஓட்டுநர் உரிமம் பெற / புதுப்பிக்க புது நிபந்தனை!**

மத்திய மோட்டார் வாகன விதி எண்: 5இன்படி 40 வயதுக்கும் மேற்பட்டோர் பதிவுபெற்ற மருத்துவரிடம் மருத்துவச் சான்று பெற்ற பின்னரே புதிய ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கோ அல்லது பழைய ஓட்டுநர் உரிமத்தை புதுப்பிக்கவோ இயலும்.

---

**5. மாரியப்பன் தங்கவேலுவுக்கு ₹75 லட்சம் ஊக்கத்தொகை!!**

பாரா தடகள வீரர் மாரியப்பன் தங்கவேலுவை முதலமைச்சர் மு க ஸ்டாலின் பாராட்டி, ₹75 லட்சம் ஊக்கத்தொகை வழங்கினார். மாற்றுத்திறனாளிகளுக்கான பாரா தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டிகள் ஜப்பானில் கடந்த மாதம் நடைபெற்றது. இதில், ஆண்களுக்கான உயரந்தாண்டல் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு 1.88 மீட்டர் உயரம் தாண்டி தங்கப்பதக்கம் வென்றார்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. மாநிலத்தில் பெண்கல்வியை மேம்படுத்துதற்காக, 'முதலமைச்சர் நிஜுத் மொய்னா' என்ற திட்டத்தைத் தொடக்கிய மாநிலம் எது?**



அ. மணிப்பூர்

ஆ. நாகாலாந்து

இ. சிக்கிம்

**ஈ. அஸ்ஸாம் ☑**

★ அஸ்ஸாம் மாநில அரசாங்கம் பெண் கல்வியை ஊக்குவிக்கவும் சிறார் திருமணத்தை ஒழிக்கவுமாக முதலமைச்சர் நிஜுத் மொய்னா திட்டத்தை 2024 ஜூனில் அறிமுகப்படுத்தியது. மாநில அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டம் சுமார் 10 லட்சம் மாணவிகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. உயர்நிலைக்கல்வி பயிலும் பெண்களுக்கு மாதம் ₹1000, பட்டப்படிப்பு படிப்பவர்களுக்கு ₹1200, முதுகலை அல்லது பி.எட் படிப்பவர்களுக்கு ₹2500 வழங்கப்படும்.

**2. 'PRANA' மாநாட்டை ஏற்பாடு செய்வதற்காக இந்திய மருத்துவ அமைப்புகளுக்கான தேசிய ஆணையத்துடன் கூட்டிணைந்துள்ள அமைப்பு எது?**

**அ. அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் ☑**

ஆ. மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு

இ. NITI ஆயோக்

ஈ. கல்வி அமைச்சகம்

★ இந்திய மருத்துவ முறைகளுக்கான தேசிய ஆணையம் அதன் நான்காவது நிறுவன நாளைக் குறிக்கும் வகையில் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் கல்வி அமைச்சகத்தின் புத்தாக்கப் பிரிவு ஆகியவற்றுடன் இணைந்து 'PRANA' (Protecting Rights and Novelties in ASUS) என்ற இரண்டு நாள் தேசிய மாநாட்டை நடத்தியது. இந்திய மருத்துவ முறைமையில் வணிகமயமாக்கல் மற்றும் புத்தொழில்களுக்கு ஏற்ற காப்புரிமைபெற்ற கண்டுபிடி–ப்புகளை இம்மாநாடு எடுத்துரைத்தது.

**3. 2024 – உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. உலக பொருளாதார மன்றம் ☑**


ஆ. உலக வானிலை அமைப்பு

இ. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு

ஈ. உலக வங்கி

★ இந்தியாவின் புதிய அமைச்சரவையில், முப்பது அமைச்சர்களில் இருவர் மட்டுமே பெண்கள்; இந்த எண்ணிக்கை முன்பிருந்த பத்திலிருந்து குறைந்துள்ளது. உலக பொருளாதார மன்றத்தின் 2024 – உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை உலகளாவிய பாலின வேறுபாடுகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. ஐஸ்லாந்து 14வது ஆண்டாக பாலின சமத்துவ நாடாக முன்னணியில் உள்ளது; இந்தியா 129ஆவது இடத்தில் உள்ளது. பொருளாதாரப் பங்கேற்பு மற்றும் வாய்ப்புகளில் ஓரளவு முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், குறியீட்டில் இந்தியாவின் சிறிதளவு சரிவு கல்வி அடைதல் மற்றும் அரசியல் அதிகாரம் ஆகியவற்றில் பின்னடைவை பிரதிபலிக்கிறது.

**4. '*Chlorella sorokiniana*' என்றால் என்ன?**




**அ. நுண்பாசி ☑** ஆ. பாக்டீரியா

இ. அமீபா ஈ. பூஞ்சை

★ CSIR–இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் கெமிக்கல் டெக்னாலஜியின் அறிவியலாளர்கள், '*Chlorella sorokiniana*' என்ற நுண்பாசியிலிருந்து பெறப்பட்ட குளோரெல்லா வளர்ச்சி காரணி (CGF), உணவு மற்றும் தீவனப்பயன்பாடுகளுக்குப் பயன்தருவதாக குறிப்பிட்டுள்ளனர். பெரும்பாலும் ஒற்றைசெல்லுடைய இந்நுண்பாசி, பல்வேறு நீர்வாழ் சூழல்களில் செழித்து வளரும் தன்மையுடையது. இவற்றுக்கு வேர்களோ தண்டுகளோ கிடையாது. சுற்றுச்சூழல் அமைப்புகளில் முதன்மை உற்பத்தியாளர்களாக விளங்கும் இவை, கொழுப்புகள், புரதங்கள் மற்றும் நிறமிகள் ஆகியவற்றின் செழுமையின் காரணமாக ஊட்டச்சத்து நன்மைகளை வழங்குகின்றன.

★ எடுத்துக்காட்டுகளில் ஸ்பைருலினா மற்றும் குளோரெல்லா ஆகியவை அடங்கும்; அவை பொதுவாக அவற்றின் உடல்நல நலன்களுக்காக உணவுப்பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**5. இந்தியாவின், 'மக்கள் மருந்தகம்' திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல் நாடு எது?**

அ. மாலத்தீவுகள்

**ஆ. மொரிஷியஸ் ☑**

இ. பூட்டான்

ஈ. நேபாளம்




★ இந்தியாவின், 'மக்கள் மருந்தகம்' திட்டம் பிரதம மந்திரி பாரதிய மக்கள் மருந்தக மையங்கள் (PMBJK)மூலம் மலிவு விலையில் பொதுவான மருந்துகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மொரீஷியஸ் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளது; இதன்மூலம் இந்தியாவுக்கு வெளியே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய முதல் நாடு என்ற பெருமையை அது பெற்றது. நேபாளமும் இதேபோன்ற மையங்களை நிறுவ இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இந்தியா முழுவதும் 10,000 PMBJKகளுடன், இந்தத் திட்டம் மருத்துவச் செலவுகளைக் குறைப்பது மற்றும் மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் பணியகத்தால் நிர்வகிக்கப்படும் பொதுவான மருந்துப் பயன்பாட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**6. கொள்கலன் துறைமுக செயல்திறன் குறியீட்டில் விசாகப்பட்டினம் துறைமுகம் பிடித்துள்ள இடம் எது?**

அ. 18ஆவது

ஆ. 17ஆவது

இ. 15ஆவது

**ஈ. 19ஆவது ☑**




★ உலக வங்கி, S&P குளோபல் மார்க்கெட் இன்டலிஜென்ஸ் உடன் இணைந்து, கொள்கலன் துறைமுக செயல்திறன் குறியீட்டை வெளியிட்டது. இது 405 உலகளாவிய துறைமுகங்களின் தரவைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டதாகும். இந்தக் குறியீட்டில் விசாகப்பட்டினம் துறைமுகம் 19ஆம் இடத்தைப் பெற்றுள்ளது; இது கொள்கலன் போக்குவரத்தை கையாள்வதில் அதன் செயல்திறன் மற்றும் உள்கட்டமைப்பு தரத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த மதிப்பீடு உலகளாவிய துறைமுக செயல்பாடுகள்பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது, மேம்பட்ட வர்த்தக வசதி மற்றும் தளவாட மேலாண்மைக்கான உத்திசார் மேம்பாடுகளுக்கு உதவுகிறது.

**7. நைட்ரஸ் ஆக்சைடு ($N_2O$) உமிழ்வுகளின் உலகளாவிய மதிப்பீட்டின்படி, உலகின் இரண்டாவது பெரிய நைட்ரஸ் ஆக்சைடு ($N_2O$) உமிழும் நாடு எது?**

அ. சீனா

**ஆ. இந்தியா ☑**

இ. பிரேசில்

ஈ. ரஷ்யா



★ வலிமிகு பைங்குடில் வாயுவான நைட்ரஸ் ஆக்சைடை ($N_2O$) உமிழும் உலகின் இரண்டாவது மிகப்பெரிய நாடாக இந்தியா உள்ளது. 2020ஆம் ஆண்டில், சீனாவின் 16%ஐத் தொடர்ந்து, உலகளாவிய மனிதனால் உருவாக்கப்பட்ட $N_2O$ உமிழ்வில் இந்தியா சுமார் 11% பங்களித்தது. இந்த உமிழ்வுகள் முதன்மையாக நைட்ரஜன் அடிப்படையிலான உரங்கள் மற்றும் உழவில் பயன்படுத்தப்படும் விலங்கு உரங்களிலிருந்து உருவாகின்றன. இருப்பினும், சீனா, அமெரிக்கா, பிரேசில் மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளின் உமிழ்வுகளை ஒப்பிடும்போது, இந்தியாவின் தனிநபர் உமிழ்வு ஒரு நபருக்கு 0.8 கிலோ என்ற அளவில் குறைவாகவே உள்ளது.

8. **அண்மையில், இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தின் அறிவியலாளர்கள் கீழ்க்காணும் எந்தக்கோளில் மூன்று புதிய பள்ளங்களைக் கண்டுபிடித்துள்ளனர்?**



அ. வெள்ளி

ஆ. பூமி

**இ. செவ்வாய் ☑**

ஈ. சனி

★ ஆமதாபாத்தில் உள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தின் (PRL) அறிவியலாளர்கள் தர்சிஸ் எரிமலைப்பகுதியில் செவ்வாய் கோளில் மூன்று பள்ளங்களைக் கண்டுபிடித்துள்ளனர்; இது விரிவான எரிமலை ஓட்டங்களுக்குப் பெயர் பெற்றதாகும். லால், முர்சன் மற்றும் ஹில்சா என்று பெயரிடப்பட்ட இந்தப் பள்ளங்கள் செவ்வாய் கோளின் மேற்பரப்பு புவியியல் மற்றும் வயதுபற்றிய நுண்ணறிவை வழங்குகின்றன. இந்தக் கண்டுபிடிப்புகள் செவ்வாய் கோளின் நிலையான மேலோடு மற்றும் புவியியல் செயல்முறைகள் பற்றிய நமது புரிதலுக்குப் பங்களிக்கின்றன.

9. **2024 – பன்னாட்டு கொழுப்புக் கல்லீரல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**



**அ. Act Now, Screen Today ☑**

ஆ. Be Vigilant, Do Regular Liver Check-ups

இ. Keep your liver healthy and disease-free

ஈ. Do Regular Liver Check-up

★ "Act Now, Screen Today" என்ற கருப்பொருளுடன் 2024 ஜூன்.13 அன்று பன்னாட்டு கொழுப்புக் கல்லீரல் நாள் அனுசரிக்கப்பட்டது. கொழுப்புக் கல்லீரல் நோய் (அ) ஸ்டீடோசிஸ் ஆனது கல்லீரல் உயிரணுக்களில் அதிகப்படியான கொழுப்புக் குவிவதை உள்ளடக்கிய ஒரு நோயாகும்; இது சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் வீக்கம் மற்றும் தீவிர சிக்கல்களுக்கு வழிவகுக்கும். இது அதிகப்படியான ஆல்கஹால் நுகர்வு (ஆல்கஹாலிக் ஸ்டீட்டோஹெபடைடிஸ்) அல்லது பிற காரணிகளால் (ஆல்கஹால் அல்லாத ஸ்டீட்டோஹெபடைடிஸ், NASH) ஏற்படலாம். கல்லீரல் பாதிப்பைத் தடுக்கவும் இந்தப் பொதுவான உலகளாவிய சுகாதாரப்பிரச்சினையை நிர்வகிக்கவும் விழிப்புணர்வு மற்றும் ஆரம்ப நிலை நோயறிதல் முக்கியமானதாகும்.

10. **அபுவா ஆவாஸ் திட்டத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?**




அ. ஒடிசா

ஆ. ஹரியானா

**இ. ஜார்கண்ட் ☑**

ஈ. பீகார்

★ பிரதமர் ஆவாஸ் திட்டத்திலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக 2023 நவம்பரில் தொடக்கப்பட்ட, 'அபுவா ஆவாஸ்' திட்டத்தின் முதல் கட்டத்தின்கீழ், 2 இலட்சம் வீடுகள் கட்டும் பணியை விரைவுபடுத்துமாறு ஜார்கண்ட் முதலமைச்சர் அதிகாரிகளுக்கு ஆணையிட்டுள்ளார்.

★ தொழிலாளர்கள், விவசாயிகள், பழங்குடியினர் மற்றும் ஒடுக்கப்பட்டோர் உள்ளிட்ட ஏழைகளுக்கு மூன்று அறைகள் கொண்ட வீடுகளை வழங்க, ஈராண்டுகளில் ₹15,000 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.

**11. புதிய குற்றவியல் சட்டங்கள்பற்றிய தகவல்களை வழங்குவதற்காக அண்மையில் NCRB அறிமுகப்படுத்திய திறன்பேசி செயலியின் பெயர் என்ன?**

அ. NCRB சமர்த்

ஆ. NCRB சஹாயக்

இ. NCRB சங்கரா

**ஈ. குற்றவியல் சட்டங்களின் NCRB சங்கலன் ☑**

★ NCRB ஆனது புதிய குற்றவியல் சட்டங்கள்பற்றிய விரிவான தகவல்களை வழங்குவதற்காக, "NCRB சங்கலன் ஆஃப் கிரிமினல் லாஸ்" என்ற திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது; இது அடுத்த மாதம் முதல் அமலுக்கு வருகிறது. இந்தச் செயலி பாரதிய நயயா சன்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா மற்றும் பாரதிய சாக்ஷ்ய ஆதினியம் ஆகியவற்றைத் தொகுத்து, புதிய சட்ட ஒப்பீட்டு விளக்கப்படங்களுடன் அவற்றிய விளக்குகிறது. கூகுள் பிளே மற்றும் ஆப்பிள் ஆப் ஸ்டோரில் கிடைக்கும் இது, பொதுமக்கள், நீதிமன்ற அதிகாரிகள், வழக்கறிஞர்கள், சட்ட மாணவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்குப் பயனளிக்கிறது.

**12. 'நாகாஸ்திரம்–1' என்றால் என்ன?**

அ. புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்

**ஆ. எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய தற்கொல்லி டிரோன்கள் ☑**

இ. அணுவாற்றல் திறன்கொண்ட நீர்மூழ்கிக்கப்பல்

ஈ. புறக்கோள்




★ ஏவுதளங்கள், எதிரிகளின் முகாம்கள் மற்றும் ஊடுருவல்காரர்களை குறிவைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட நாகாஸ்திரம்–1 என்ற தனித்துவமான எளிதில் எடுத்துச்செல்லக்கூடிய தற்கொல்லி ஆளில்லா விமானத்தை இந்திய இராணுவம் பெற்றுள்ளது. அவசரகால கொள்முதல் அதிகாரங்களின்கீழ், சோலார் இண்டஸ்ட்ரீஸ் எகனாமிக்ஸ் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் லிட் (EEL) நிறுவனத்திடம் இருந்து இராணுவம் 480 லோய்டர் வெடிமருந்துகளை ஆர்டர் செய்தது.

**13. மண்ணலத்தை மேம்படுத்துவதற்காக, "மண்ணுயிர் காத்து மன்னுயிர்க்காப்போம்" திட்டத்தைத் தொடக்கியுள்ள மாநில அரசு எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கர்நாடகா

ஈ. கேரளா



★ தமிழ்நாடு முதலமைச்சர் முக ஸ்டாலின் ₹206 கோடி திட்ட மதிப்பீட்டில் மாநிலத்தில் நிலையான விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கோடு, "மண்ணுயிர் காத்து மன்னுயிர்க் காப்போம்" திட்டத்தைத் தொடக்கி வைத்தார். பசுந்தாள் உர முறைகளைப் பயன்படுத்தி மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும். ₹20 கோடி தொடக்க நிதியானது 2024–25 முதல் 200,000 ஏக்கரில் பசுந்தாள் உர விதைகளை விநியோகிக்க உதவும்; இதன்மூலம் 200,000 விவசாயிகள் நேரடியாகப் பயனடைவார்கள்.

**14. அண்மையில், 2024 – FIDE 20 வயதுக்குட்பட்ட மகளிருக்கான உலக செஸ் சாம்பியன்ஷிப்பை வென்றது யார்?**

அ. மரியம் மக்ர்ட்சியன்

ஆ. சலோனிகா சாய்னா

**இ. திவ்யா தேஷ்முக் ☑**

ஈ. சுபி குப்தா



★ 18 வயது நாக்பூர் சிறுமியும், சர்வதேச மாஸ்டருமான திவ்யா தேஷ்முக், FIDE U–20 பெண்களுக்கான உலக செஸ் சாம்பியன்ஷிப்பை வென்ற 4ஆவது இந்தியப் பெண்மணி ஆனார். 2024 ஜூன்.02–13 வரை குஜராத் மாநிலத்தின் காந்திநகரில் நடைபெற்ற இந்தப் போட்டியில், 44 நாடுகளைச் சேர்ந்த 230 வீரர்கள் கலந்துகொண்டனர். திவ்யா தேஷ்முக், 11–க்கு 10 புள்ளிகளுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். கஜகஸ்தானை சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் காசிபெக் நோகர்பெக் ஆடவர் பட்டத்தை வென்றார். திவ்யா தேஷ்முக், 2024ஆம் ஆண்டு புடாபெஸ்டில் நடைபெறும் செஸ் ஒலிம்பியாட் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

**15. ஆண்டுதோறும், 'உலக குருதிக்கொடையாளர்கள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. ஜூன்.14 ☑**

ஆ. ஜூன்.15

இ. ஜூன்.16

ஈ. ஜூன்.17




★ பாதுகாப்பான குருதிக்கொடை செய்வதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.14ஆம் தேதி உலக குருதிக்கொடையாளர்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது. 2004ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தால் நிறுவப்பட்ட இந்த நாள், 1886 ஜூன்.14ஆம் தேதியன்று பிறந்த ஆஸ்திரிய உயிரியலாளர் கார்ல் லேண்ட்ஸ்டெய்னரைக் கௌரவிக்கும் விதமாக உள்ளது. 2005ஆம் ஆண்டில், உலக சுகாதார சபை இந்த நாளை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது. 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கான, "20 years of celebrating giving: thank you, blood donors" கருப்பொருள், அனுசரிப்பின் 20ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

**16. அண்மையில், 'AYUSH' பற்றிய முதல் அகில இந்திய ஆய்வை வெளியிட்ட அமைச்சகம் எது?**

**அ. புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ☑**

ஆ. ஆயுஷ் அமைச்சகம்

இ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

★ 2022 ஜூலை முதல் 2023 ஜூன் வரை தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் நடத்திய 'ஆயுஷ்' பற்றிய முதல் அகில இந்திய ஆய்வை மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டது. இதன்மூலம் கிராமப்புற மக்களில் 95%த்தினரும் நகர்ப்புற மக்களில் 15 மற்றும் அதற்கு மேற்பட்ட சதவீதத்தினரும் ஆயுஷ் பற்றி அறிந்து உள்ளனர் தெரியவந்துள்ளது. முக்கியமாகப் புத்துணர்ச்சிக்கான ஆயுஷின் பயன்பாடும் செலவும் நகர்ப்புறங்களில் அதிகமாகும். ஆயுஷில் ஆயுர்வேதம், யோகம், இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத்துவம், சோவா ரிக்பா மற்றும் ஹோமியோபதி ஆகியவை அடங்கும்.

**17. அண்மையில், ஒட்டகங்களின் பயன்படுத்தப்படாத திறன்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐநா சபை எந்த ஆண்டை, 'சர்வதேச ஒட்டகங்கள் ஆண்டு' என அறிவித்தது?**


**அ. 2024 ☑** ஆ. 2025

இ. 2026 ஈ. 2027



★ ஐநா அவையானது 2024ஆம் ஆண்டை சர்வதேச ஒட்டகங்கள் ஆண்டாக அறிவித்தது. இதன்மூலம் கடுமையான சுற்றுப்புறச்சூழலில் வசித்துவரும் ஒட்டகங்களின் இன்றியமையா பங்குபற்றி விழிப்புணர்வு ஏற்படும். சர்வதேச ஒட்டகங்கள் ஆண்டானது ஒட்டகங்களின் பயன்படுத்தப்படாத திறனை முன்னிலைப்படுத்துவதையும், ஒட்டகஞ்சார் தொழிற்துறையில் அதிகரித்த முதலீட்டை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக்கொண்டுள்ளது.

**18. GREAT திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**



அ. ஐக்கிய அரபு அமீரகத்தில் பாரம்பரிய ஜவுளித்தொழில்களை ஆதரிப்பது


**ஆ. தொழில்நுட்ப ஜவுளியில் ஒரு புத்தொழில் சூழலை உருவாக்குதல் ☑**

இ. நகர்ப்புற இந்தியா முழுவதும் வேளாண் பொருட்களை ஊக்குவித்தல்

ஈ. இந்திய மருந்துகளை உலகளவில் ஏற்றுமதி செய்தல்

★ தேசிய தொழில்நுட்ப ஜவுளிகள் திட்டத்தின் (NTTM) அதிகாரமளிக்கப்பட்ட திட்டக்குழு, 'GREAT' திட்டத்தின்கீழ் ஏழு புத்தொழில் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. GREAT (Grant for Research & Entrepreneurship across Aspiring Innovators in Technical Textiles) என்பது ஜவுளி அமைச்சகத்தின் தலைமையிலான NTTMஇன் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் கண்டுபிடிப்பு கூறுகளின் ஒருபகுதியாகும். புதுமையான தயாரிப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக இந்தியாவின் தொழில்நுட்ப ஜவுளித்துறை நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதற்கு 18 மாதங்களுக்கு ₹50 லட்சம் வரை மானியங்களை வழங்குகிறது.

**19. அண்மையில், NASAஇன் எந்தத் தொலைநோக்கி, பால்வீதி மண்டலத்தில் HM Sagittae (HM Sge) என்ற இணை வாழ்வு அமைப்பைக் கூர்நோக்கியது?**



**அ. ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி ☑**

ஆ. பிராட் பேண்ட் X-கதிர் தொலைநோக்கி

இ. ஸ்பிட்சர் விண்வெளி தொலைநோக்கி

ஈ. காம்ப்டன் காமா கதிர் ஆய்வகம்

★ NASAஇன் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி, பால்வீதியிலுள்ள இணைவாழ்வு இருமய விண்மீன் அமைப்பான HM சாகிடே (HM Sge)பற்றி ஆய்வுசெய்தது. இது ஒரு வெண்குள்ள விண்மீனையும் ஒரு சிவப்புப் பெருமீனையும் கொண்டுள்ளது. வெண்குள்ள விண்மீன்கள் என்பது எரிந்த விண்மீன்களின் எச்சங்களாகும்; அதே சமயம் சிவப்புப் பெருமீன்கள் அவற்றின் இறுதி நிலையில் உள்ள விண்மீன்களாகும். HM Sgeஇல், சிவப்புப் பெருமீனிலிருந்து வரும் பொருள் அதன் ஈர்ப்புவிசையால் ஈர்க்கப்பட்டபிறகு வெண்குள்ள விண்மீனைச்சுற்றி ஒரு வட்டை உருவாக்குகிறது.

**20. அண்மையில், நிலவு ஆய்வுக்கான NASAஇன் ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கையில் 43ஆவதாகக் கையெழுத்திட்ட நாடு எது?**




அ. சீனா

ஆ. ரஷ்யா

**இ. ஆர்மீனியா ☑**

ஈ. ஆஸ்திரியா

★ நிலவு ஆய்வுக்கான NASAஇன் ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கையில் ஆர்மீனியா 43ஆவது நாடாகக் கையெழுத்திட்டது. ஏழு நிறுவன நாடுகளுடன் கடந்த 2020இல் ஏற்படுத்தப்பட்ட இந்த ஒப்பந்தங்கள், 1967 விண்வெளி ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும். அவை உள்நாட்டு விண்வெளி ஆய்வுக்கான கட்டுப்பாடற்ற கொள்கைகள், விண்வெளியில் அமைதியான, நிலையான மற்றும் வெளிப்படையான ஒத்துழைப்பை மேம்படுத்துகின்றன. கையொப்பமிட்ட குறிப்பிடத்தக்க நாடுகளில் இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் & இங்கிலாந்து ஆகியவை அடங்கும்.

**21. சமீபத்தில், WHOஆல் "பாரம்பரிய மருத்துவத்தில் அடிப்படை மற்றும் இலக்கிய ஆராய்ச்சி" மேற்கொள்வதற்காக WHO ஒத்துழைப்பு மையமாக அறிவிக்கப்பட்ட மருத்துவ நிறுவனம் எது?**

**அ. இந்திய தேசிய மருத்துவ பாரம்பரிய கழகம் (NIIMH), ஹைதராபாத் ☑**

ஆ. தேசிய ஆயுர்வேத நிறுவனம், ஜெய்ப்பூர்

இ. AIIMS, தில்லி

ஈ. KGMU, லக்னோ

★ உலக சுகாதார நிறுவனம், ஹைதராபாத்தில் உள்ள இந்திய தேசிய மருத்துவ பாரம்பரிய கழகத்தை (NIIMH) 2024 ஜூன்.03 முதல் 4 ஆண்டுகளுக்கு, "பாரம்பரிய மருத்துவத்தில் அடிப்படை மற்றும் இலக்கிய ஆராய்ச்சிக்கான" WHO ஒத்துழைப்பு மையமாக நியமித்துள்ளது. 1956இல் நிறுவப்பட்ட NIIMH, பல்வேறு பாரம்பரிய இந்திய சுகாதார அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ–வரலாற்று ஆராய்ச்சிகளை ஆவணப்படுத்துகிறது.

**22. அண்மையில், சிரில் ரமபோசா, கீழ்க்காணும் எந்த நாட்டின் அதிபராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

அ. கென்யா



ஆ. ருவாண்டா

**இ. தென்னாப்பிரிக்கா ☑**

ஈ. நைஜீரியா

★ ANC, மக்களாட்சிக் கூட்டணி (DA) மற்றும் பிற சிறிய கட்சிகளுக்கு இடையிலான கூட்டணி ஒப்பந்தத்திற்குப்பிறகு, 2024 ஜூன்.14 அன்று தென்னாப்பிரிக்காவின் அதிபராக சிரில் ரமபோசா இரண்டாவது முறையாக பதவியேற்றார். ANC, 1996ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல்முறையாக, 2024 மே.29 அன்று நடந்த தேர்தலில் 40% வாக்குகளை மட்டுமே பெற்று, நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பெறத்தவறியது. சிரில் ரமபோசா முதன்முதலில் 2018 பிப்.15 அன்று அதிபரானார்.

**23. கீழ்க்காணும் எந்த அமைப்பும் சன்சாத் அலைவரிசையும் இணைந்து இந்திய கலை மற்றும் கலாச்சாரத்தை மக்களுக்கு அணுகக்கூடிய வகையில் மாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன?**

அ. லலித் கலா கலைக்கழகம்

ஆ. கலை மற்றும் கலாச்சார பாரம்பரியத்திற்கான இந்திய தேசிய அறக்கட்டளை (INTACH)

இ. சங்கீத நாடக கலைக்கழகம்

**ஈ. இந்திராகாந்தி தேசிய கலை மையம் (IGNCA) ☑**

★ இந்திராகாந்தி தேசிய கலை மையம் (IGNCA) மற்றும் சன்சாத் அலைவரிசை (TV) ஆகியவை இந்திய கலை மற்றும் கலாச்சாரத்தை மேலும் அணுகக்கூடியதாக மாற்றுவதற்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. IGNCA தயாரித்த நிகழ்ச்சிகள் சன்சாத் அலைவரிசையில் ஒளிபரப்பப்படும். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் டாக்டர் சச்சிதானந்த ஜோஷி (IGNCA) மற்றும் இரஜத் புன்ஹானி (சன்சாத் அலைவரிசை) ஆகியோர் கையெழுத்திட்டனர். பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளை தயாரித்து ஒளிபரப்புவதையும், IGNCAஇன் காப்பகத்தைப் பயன்படுத்துவதையும் நோக்கம் எனக்கொண்ட இந்த ஒப்பந்தம் குறித்து இருவரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

**24. 50ஆவது G7 தலைவர்கள் உச்சிமாநாட்டை நடத்திய நாடு எது?**

**அ. இத்தாலி ☑** ஆ. பிரான்ஸ்

இ. இந்தியா ஈ. கனடா

★ ஜூன்.14 அன்று இத்தாலியின் போர்கோ எக்னாசியாவில் நடைபெற்ற G7 ஔட்ரீச் அமர்வில் பிரதமர் நரேந்திர மோதி கலந்துகொண்டார். இந்த உச்சிமாநாட்டின்போது செயற்கை நுண்ணறிவு (AI), ஆற்றல், ஆப்பிரிக்கா மற்றும் மத்திய தரைக்கடல்குறித்து விவாதம் செய்யப்பட்டது. இத்தாலிய பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியின் அழைப்பின்பேரில், உச்சிமாநாட்டில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோதி இம்மானுவேல் மேக்ரான், வோலோடிமிர் ஜெலென்ஸ்கி மற்றும் ரிஷி சுனக் உள்ளிட்ட தலைவர்களைச் சந்தித்தார். 50ஆவது G7 உச்சிமாநாடு இத்தாலியின் அபுலியாவில் ஜூன் 13–15 வரை நடைபெற்றது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உலகளாவிய பாலின ஏற்றத்தாழ்வு குறியீடு: இந்தியா 129ஆவது இடம்.**

உலகளாவிய பாலின ஏற்றத்தாழ்வு குறியீட்டில் இரண்டு இடங்கள் சரிந்து இந்தியா 129ஆவது இடம்பிடித்துள்ளது. இதுதொடர்பாக உலக பொருளாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகளாவிய பாலின ஏற்றத்தாழ்வு குறியீட்டில் ஐஸ்லாந்து, பின்லாந்து, நார்வே, நியூசிலாந்து, சுவீடன் ஆகிய நாடுகள் முதல் ஐந்து (5) இடங்களைப் பிடித்துள்ளன. இதன்மூலம், அந்நாடுகளில் பாலின ஏற்றத்தாழ்வு மிகக்குறைவாக உள்ளது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தற்போதைய வேகத்தில், பாலின சமத்துவத்தை முழுமையாக எட்ட நூற்று முப்பத்து நான்கு ஆண்டுகள், அதாவது ஐந்து தலைமுறைகளாகும் என்று உலக பொருளாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

**2. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க பெற்றோர், சமூக அமைப்புகளின் ஒத்துழைப்பு தேவை.**

2025ஆம் ஆண்டுக்குள் குழந்தைத்தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழிக்க பெற்றோர், சமுக அமைப்புகளின் ஒத்துழைப்பு தேவை என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை தெரிவித்துள்ளது.

**3. தேசிய பாதுகாப்பு ஆலோசகராக மீண்டும் அஜித் தோவல் நியமனம்!**

தேசிய பாதுகாப்பு ஆலோசகராக (NSA) முன்னாள் இ கா ப அதிகாரி அஜித் தோவலை நடுவண் அரசு மூன்றாவது முறையாக மீண்டும் நியமித்துள்ளது. அதேபோல, பிரதமரின் முதன்மைச் செயலராக பி.கே. மிஸ்ரா (75) மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

**4. இத்தாலியில் தொடங்கியது G7 மாநாடு**

தொழில் வளஎச்சியடைந்த உலகின் ஏழு முக்கிய முதலாளித்துவ நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், கனடா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பு G7. அதன் உறுப்புநாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் 50ஆவது மாநாடு இத்தாலியின் அபுலியா மாகாணம், பசானோ நகரத்தில் தொடங்கி நடைபெற்றது.

**5. பண்டைய சமண மரபு நூல்: முதலமைச்சர் மு க ஸ்டாலின் வெளியிட்டார்.**

தமிழ்நாட்டின் பண்டைய சமண மரபு குறித்து எழுத்தாளர் ருச்சி பிரீதம் எழுதிய நூலை முதலமைச்சர் முக ஸ்டாலின் வெளியிட்டார்.

**6. CNG, LNG எரிவாயுமூலம் இயங்கும் அரசுப்பேருந்துகள்.**

அரசுப்போக்குவரத்துக்கழகங்களில் சோதனை அடிப்படையில் CNG, LNG எரிவாயுமூலம் இயங்கும் பேருந்துகளை போக்குவரத்துத்துறை அறிமுகம் செய்துள்ளது. சுற்றுச்சூழலுக்குகந்த வகையில் டீசலுக்கு மாற்றாக CNG, LNG எனப்படும் இயற்கை எரிவாயுமூலம் பேருந்துகளை இயக்க தமிழ்நாடு அரசு முடிவுசெய்தது. இதன் தொடர்ச்சியாக சோதனை அடிப்படையில் முதல்கட்டமாக சென்னை மாநகரம், விழுப்புரம் போக்குவரத்துக்கழகங்களின் 4 LNG பேருந்துகள், கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்தில் 2 CNG பேருந்துகள் என மொத்தம் 6 பேருந்துகள் இயக்கும் வகையில் தயார்செய்யப்பட்டுள்ளன.

## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், குதிரையேற்றத்தில் மூன்று நட்சத்திர கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வென்ற முதல் இந்தியர் யார்?**

அ. ரோஷ்னி சர்மா

**ஆ. ஸ்ருதி வோரா ☑**

இ. அலிஷா அப்துல்லா

ஈ. கல்யாணி பொடேகர்



★ கொல்கத்தாவைச் சேர்ந்த ஸ்ருதி வோரா (53), குதிரையேற்றத்தில் மூன்று நட்சத்திர கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வென்ற முதல் இந்தியர் ஆனார். 2024 ஜூன்.07 அன்று ஸ்லோவேனியாவின் லிபிகாவில் நடந்த FEI டிரஸ்ஸேஜ் உலகக்கோப்பையில், CDI–3 நிகழ்வில் அவர் தனது குதிரையான மேக்னானிமஸில் 67.761 புள்ளிகளைப்பெற்று வெற்றிபெற்றார். ஸ்ருதி வோரா இதற்கு முன்பு 2022–டிரெஸ்சேஜ் உலக சாம்பியன்ஷிப் மற்றும் 2010 மற்றும் 2014 ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

**2. லிபுலேக் கணவாய் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. இமாச்சல பிரதேசம்

**ஆ. உத்தரகாண்ட் ☑**

இ. சிக்கிம்

ஈ. அஸ்ஸாம்



★ லிபுலேக் கணவாய் வழியாக சீனாவுடனான எல்லைப்புற வணிகத்தை மீண்டும் தொடங்க இந்திய வர்த்தகர்கள் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளனர். 5,334 மீ உயரத்தில் உத்தரகாண்டில் அமைந்துள்ள லிபுலேக், இந்தியாவை திபெத்துடன் இணைக்கிறது. வணிகம் மற்றும் கைலாய மானசரோவர் யாத்திரைக்கு முக்கியமானது. ஒரு வர்த்தகப் பாதையாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இது, சீனாவுடனான வர்த்தகத்திற்கான முதல் இந்திய எல்லைப்புறச் சாவடியாகும். ஷிப்கிலா மற்றும் நாதுலா கணவாய்களைத் தொடர்ந்து 1992இல் இது திறக்கப்பட்டது.

**3. 'ஒலிம்பஸ் மோன்ஸ்' என்றால் என்ன?**

அ. செவ்வாய் கோளில் உள்ள ஒரு முகடிட்ட எரிமலை ☑

ஆ. ஆக்கிரமிப்பு களை

இ. அணுவாற்றல் திறனுடைய நீர்மூழ்கிக்கப்பல்

ஈ. குறுகிய தொலைவு செல்லும் எறிகணை



★ அறிவியலாளர்கள் செவ்வாய் கோளின் மிகவுயரமான எரிமலையான ஒலிம்பஸ் மோன்ஸில் (Olympus Mons) உறைபனியைக் கண்டுபிடித்துள்ளனர்; இது செயலில் உள்ள நீர்ச்சுழற்சியைக் குறிக்கிறது. செவ்வாய் கோளின் மேற்கு அரைக்கோளத்தில் உள்ள ஒலிம்பஸ் மோன்ஸ், 3.5 பில்லியன் ஆண்டுகள் பழமையான முகடிட்ட எரிமலையாகும். இது செவ்வாய் கோளின் மிகவுயரமான இடமும் சூரியமண்டலத்தின் மிகப்பெரிய எரிமலையும் ஆகும். 16 மைல்கள் (24 கிமீ) உயரங்கொண்ட இது, எவரெஸ்ட் சிகரத்தைவிட சுமார் மும்மடங்கு உயரம் கொண்டதாகும்.

**4. எந்தெந்தத் துறைகளுக்கு 'கௌலி பரிசுகள்' வழங்கப்படுகின்றன?**

அ. இலக்கியம், அமைதி மற்றும் இசை

ஆ. பொருளாதாரம். சுற்றுச்சூழல் மற்றும் வேதியியல்

**இ. வானியற்பியல், நானோ அறிவியல் மற்றும் நரம்பியல் ☑**

ஈ. வேளாண்மை, இயற்பியல் மற்றும் கணிதம்



★ வானியற்பியல், நரம்பியல் மற்றும் நானோ அறிவியலில் பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையில், 2024 கௌலி பரிசு வென்றவர்கள் அறிவிக்கப்பட்டனர். டேவிட் சார்போனோ மற்றும் சாரா சீகர் ஆகியோர் புறக்கோள் கண்டுபிடிப்பு மேற்கொண்டாதற்காக வானியற்பியல் துறைக்கானப் பரிசைப்பெற்றனர். நானோ அறிவியலில், உயிரியல் மருத்துவ முன்னேற்றங்களுக்காக ராபர்ட் லாங்கர், அர்மண்ட் பால் அலிவிசாடோஸ் மற்றும் சாட் மிர்கின் ஆகியோர் விருது பெற்றனர். நரம்பியல் அறிவியலில், நான்சி கன்விஷர், வின்ரிச் ஃப்ரீவால்ட் மற்றும் டோரிஸ் சாவோ ஆகியோர் முக அங்கீகாரம் மற்றும் மூளை வரைபடமாக்கலில் அவர்களின் முன்னோடி பணிக்காக அங்கீகரிக்கப்பட்டனர். 2008இல் நிறுவப்பட்ட இந்தப் பரிசுகள், பிரெட் கௌலியின் நினைவாக வழங்கப்படுகின்றன.

**5. ஆற்றின் தரத்தை நிகழ்நேரத்தில் கண்காணிப்பதற்காக மின்–ஓட்டம் சுற்றுச்சூழல் கண்காணிப்பு அமைப்பை அறிமுகப்படுத்திய அமைச்சகம் எது?**

அ. ஜல் சக்தி அமைச்சகம் ☑

ஆ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

இ. வேளாண் அமைச்சகம்

ஈ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

★ மத்திய ஜல் சக்தி அமைச்சகம் நிகழ்நேர திட்டமிடல் மற்றும் ஆற்றுத் திட்டங்கள் மற்றும் நீரின் தரம் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்காக மின்–ஓட்டம் சுற்றுச்சூழல் கண்காணிப்பு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. NMCGஆல் உருவாக்கப்பட்ட இது, கங்கை மற்றும் யமுனை நீரின் தரத்தை பகுப்பாய்வு செய்கிறது; 'நமாமி கங்கை' திட்டத்தின் செயல்பாடுகளை கண்காணிக்கிறது மற்றும் STPகள் திறமையாக செயல்படுவதை உறுதிசெய்கிறது. இந்த அமைப்பு 11 திட்டங்களில் முக்கியமான அளவுருக்களை கண்காணிப்பதன்மூலம் நிலையான கங்கையாற்றின் பாய்விற்கு உதவுகிறது.

**6. மேற்கு வங்கத்தில் வெள்ளம் காரணமாக அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற டீஸ்டா ஆறானது, கீழ்க்காணும் எந்த ஆற்றின் துணையாறாகும்?**

அ. பிரம்மபுத்திரா ஆறு ☑

ஆ. யமுனை ஆறு

இ. நர்மதை ஆறு

ஈ. காவேரி ஆறு



★ மேற்கு வங்கத்தில் உள்ள காலிம்போங், கனமழையால் பெரும் சேதத்தை எதிர்கொண்டுள்ளது. இதன் காரணமாக டீஸ்டா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பிரம்மபுத்திராவின் துணையாறான டீஸ்டா, சிக்கிம் மாநிலத்தில் உள்ள பனிப்பாறை ஏரிகளில் உருவாகி, 309 கிமீட்டர் நீளத்திற்கு சிவாலிக் மலைகளில் உள்ள ஆழமான பள்ளத்தாக்குகள் வழியாக தெற்கே பாய்ந்துபின் கிழக்கு நோக்கி வங்கதேசத்துக்குள் திரும்புகிறது. இதன் முக்கிய துணையாறுகளில் லாச்சுங் சூ மற்றும் ரங்கிட் ஆறு ஆகியவை அடங்கும்.

**7. அண்மையில், "UNTAPPED: Collective Intelligence for Climate Action" என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. UNEP

ஆ. UNDP ☑

இ. UNESCO

ஈ. உலக வங்கி

★ UNDPஇன் "UNTAPPED: Collective Intelligence for Climate Action" என்ற அறிக்கை, காலநிலை ஏற்பு மற்றும் தணிப்பு ஆகியவற்றில் கூட்டு நுண்ணறிவின் திறனை எடுத்துக்காட்டுகிறது. ஒத்துழைப்பு & தொழில்நுட்பம்மூலம் பல்வேறு பங்களிப்புகளை இணைப்பதன்மூலம் கூட்டு நுண்ணறிவுத் திறன்களை இது மேம்படுத்துகிறது. நிகழ்நேரத் தகவலுக்காக குடிமக்களை அணிதிரட்டுவதன்மூலமும், அதிக நபர்களை ஈடுபடுத்துவதன்மூலமும், காலநிலை செயல்முறைகள் மற்றும் தரவு சேகரிப்பில் உள்நாட்டு சமூகங்கள்போன்ற பல்வேறு கண்ணோட்டங்களைச் சேர்ப்பதன்மூலம் பன்முகத்தன்மையிலும் இது தரவு இடைவெளிகளைக் குறைக்கிறது.

**8. எந்த அமைப்பின் தொழில்நுட்ப வழிகாட்டுதலின்கீழ், 'திவ்ய திருஷ்டி AI கருவி' உருவாக்கப்பட்டுள்ளது?**



**அ. செயற்கை நுண்ணறிவு & ரோபாட்டிக்ஸ் மையம் (CAIR) ☑**

ஆ. மேம்பட்ட தொழில்நுட்ப மையம்

இ. தேசிய தகவலியல் மையம் (NIC)

ஈ. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO)

★ DRDOஇன் ஆய்வகமான செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபாட்டிக்ஸ் மையத்தின் (CAIR) வழிகாட்டுதலின்கீழ், புத்தொழில் நிறுவனத்தின்மூலம் உருவாக்கப்பட்ட செயற்கை நுணனைறிவு (AI) கருவியான, 'திவ்ய திருஷ்டி', ஒரு வலுவான அங்கீகார அமைப்பை உருவாக்க, நடை பகுப்பாய்வோடு முக அங்கீகாரத்தை ஒருங்கிணைக்கிறது. இது அடையாளத் துல்லியத்தை மேம்படுத்துகிறது மற்றும் தவறான நேர்மறை மற்றும் அடையாள மோசடி அபாயத்தைக் குறைக்கிறது. அதன் பயன்பாடுகளில் பாதுகாப்பு, சட்ட அமலாக்கம், பெருநிறுவனம் மற்றும் பொது உள்கட்டமைப்பு ஆகிய துறைகள் அடங்கும்.

**9. கீர் பவானி திருக்கோவில் அமைந்துள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**



அ. சிக்கிம்

ஆ. அஸ்ஸாம்

**இ. ஜம்மு காஷ்மீர் ☑**

ஈ. லட்சத்தீவுகள்

★ கந்தர்பால், துல்முல்லாவில் அமைந்துள்ள கீர் பவானி திருக்கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் ஜேஷ்டாஷ்டமி திருவிழாவிற்காக ஆயிரக்கணக்கான காஷ்மீரி பண்டிட்டுகள் கூடினர். 1912ஆம் ஆண்டு மகாராஜா பிரதாப் சிங்கால் கட்டப்பட்டு, மகாராஜா ஹரி சிங்கால் புதுப்பிக்கப்பட்ட இந்தக் கோவில், துர்கையின் அம்சமான ரக்ஞ தேவிக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. கீர் பவானி திருவிழாவானது குப்வாரா, அனந்த்நாக் மற்றும் குல்காம் ஆகிய இடங்களிலும் கொண்டாடப்படுகிறது.

**10. ராஜா பர்ப் என்பது கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் கொண்டாடப்படும் ஓர் உழவுசார்ந்த திருவிழாவாகும்?**



**அ. ஒடிசா ☑**

ஆ. அஸ்ஸாம்

இ. பஞ்சாப்

ஈ. உத்தர பிரதேசம்

★ குடியரசுத்தலைவர் மாளிகையில் நடந்த ராஜா பர்ப் கொண்டாட்டத்தில் இந்தியக்குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு முதல்முறையாக கலந்துகொண்டார். ஒடிசாவின் விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட திருவிழாவான ராஜா பர்ப், பங்கேற்பாளர்களுக்கு ஒடிய கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை முறையின் தனித்துவமான பார்வையை வழங்கியது. 'ராஜா பர்ப்' ஒடிசாவின் அதிகம் கொண்டாடப்படும் திருவிழாக்களில் ஒன்றாகும். மூன்று நாள் நீடிக்கும் இவ்வேளாண் திருவிழா பருவமழையின் தொடக்கத்தில் கொண்டாடப்படுகிறது. பெண்களும் குழந்தைகளும் இப் பண்டிகையை மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடுகிறார்கள்.

**11. அண்மையில், கீழ்க்காணும் எந்த நாட்டுடன், இந்தியா, உள்ளூர் நாணய தீர்வு முறையைத் தொடக்கியது?**



அ. ஐக்கிய அரபு அமீரகம் ☑

ஆ. ரஷ்யா

இ. கனடா

ஈ. மாலத்தீவுகள்

★ இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் இந்திய ரூபாய் (₹) மற்றும் UAE திர்காம்களில் இருதரப்பு வர்த்தகத்தினை மேற்கொள்வதற்காக உள்ளூர் நாணய தீர்வு முறையைத் தொடங்கியுள்ளன; இது அமெரிக்க டாலரை ($) நம்பி இருப்பதைக் குறைக்கும் நோக்கமுடையது. இந்த முன்முயற்சியானது வர்த்தக செயல்முறைகளை எளிதாக்குவது, பரிவர்த்தனை செலவுகளைக் குறைப்பது மற்றும் நேரடி நாணய தீர்வுகள்மூலம் நாடுகளுக்கிடையே பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

**12. அண்மையில், MD 2 வகை அன்னாசிப்பழங்களின் முதல் தொகுப்பை, கீழ்க்காணும் எந்த நாட்டிற்கு APEDA வெற்றிகரமாக ஏற்றுமதி செய்தது?**



அ. இலங்கை

**ஆ. ஐக்கிய அரபு அமீரகம் ☑**

இ. மியான்மர்

ஈ. பிரான்ஸ்

★ வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஐக்கிய அரபு அமீரகத்திற்கு, "கோல்டன் ரைப்" அல்லது "சூப்பர் ஸ்வீட்" என்று அழைக்கப்படும் 'MD 2' இரக அன்னாசிப்பழங்களின் முதல் தொகுப்பை வெற்றிகரமாக ஏற்றுமதி செய்துள்ளது. இந்த ஏற்றுமதியில் 8.7 மெட்ரிக் டன் (650 பெட்டிகள்) அன்னாசிப்பழங்கள் இருந்தன. 1980–களில் டெல் மான்டேவால் உருவாக்கப்பட்ட, 'MD 2' இரக அன்னாசிப்பழங்கள் முதன்மையாக கோஸ்டாரிகா, பிலிப்பைன்ஸ் & தாய்லாந்தில் சாகுபடி செய்யப்படுகின்றன. இந்திய உற்பத்தியைப் பொருத்தவரை மகாராஷ்டிராவின் சிந்துதுர்க் மாவட்டத்தில் இது மேற்கொள்ளப்படுகிறது.

**13. வரும் ஆகஸ்டில், பன்னாட்டு விமானப்பயிற்சியான, '2024 – தரங் சக்தி'ஐ நடத்தவுள்ள நாடு எது?**



அ. ஜெர்மனி

ஆ. ஸ்பெயின்

இ. பிரான்ஸ்

**ஈ. இந்தியா ☑**

★ இந்திய வான்படை அதன் முதல் பன்னாட்டுப் பயிற்சியான, 'தரங் சக்தி–2024'ஐ 2024 ஆகஸ்டில் நடத்தவுள்ளது. ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், ஸ்பெயின், UAE, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா உட்பட சுமார் பத்து நாடுகள் இதில் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிற நாடுகள் பார்வையாளர்களாக இடம்பெறும். ஆரம்பத்தில் 2023இன் பிற்பகுதியில் நடத்த திட்டமிடப்பட்ட இந்தப் பயிற்சி, பின்னர் ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிகழ்வு நட்பு மிகுந்த அண்டை நாட்டு வான்படைகளுடன் இயங்குதிறனை மேம்படுத்த உதவுகிறது.

**14. சமீபத்தில், நகரத்தில் நிலையான கழிவுமேலாண்மையை அடைவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஆதரவளித்த அமைப்பு எது?**

அ. UNEP ஆ. உலக வங்கி ☑

இ. UNDP ஈ. IMF

THE WORLD BANK

★ பெருநகர சென்னை மாநகராட்சியானது உலக வங்கி உதவியுடன், 2026–2027க்குள் குப்பை மேலாண்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது;. கொடுங்கையூர் குப்பைக்கிடங்கில் கழிவுகளைப் போடுவதை நிறுத்துவதில் அது கவனம் செலுத்துகிறது. மாநில அதிகாரிகளுடனான சமீபத்திய கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைக்கான உத்திகளை உருவாக்குவது, சுழிய–கழிவு இலக்கை நிர்ணயிப்பது மற்றும் இறுதியில் கொடுங்கையூரைத் தூய்மைப்படுத்துவதில் வெற்றியடைவதைத் தொடர்ந்து பெருங்குடி குப்பைக் கிடங்கையும் மூடுவது குறித்து விவாதிக்கப்பட்டது.

**15. 'மத்ஸ்யா 6000'ஐ உருவாக்கிய நிறுவனம் எது?**



அ. ஐஐடி, ரூர்க்கி

**ஆ. தேசிய பெருங்கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT), சென்னை ☑**

இ. ஐஐடி, கான்பூர்

ஈ. தேசிய பெருங்கடலியல் நிறுவனம்

★ 2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் 40–50 மீட்டர் ஆழத்தில் முதல் சோதனையை நடத்தவுள்ள ஆழ்கடல் பயணத்தின்மூலம் இவ்வாறு மேற்கொள்ளும் ஆறாவது நாடாக இந்தியா மாறும். சென்னையின் உள்ள தேசிய பெருங்கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT) உருவாக்கிய 3 நபர்கள் வரை செல்லமுடிந்த நீர்மூழ்கிக்கப்பல்தான் 'மத்ஸ்யா 6000'. இதால் 6,000 மீட்டர் ஆழம் வரை செல்ல முடியும். 80 மிமீட்டர் தடிமன்கொண்ட டைட்டானியம் கலவையால் ஆன இது, 96 மணி நேர ஆக்ஸிஜன் விநியோகத்துடன் 12–16 மணி நேரம் செயல்படும். இந்தப் பணி இந்தியாவின் பொருளாதாரத்தை கணிசமாக உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**16. அண்மையில், 'சுவிஸ் அமைதி உச்சிமாநாடு' நடைபெற்ற இடம் எது?**



அ. இந்தியா

**ஆ. சுவிச்சர்லாந்து ☑**

இ. பிரான்ஸ்

ஈ. ஜெர்மனி

★ சுவிட்சர்லாந்தின் பர்கன்ஸ்டாக் ரிசார்ட்டில் உக்ரைனில் அமைதி ஏற்படுவதற்காக நடத்தப்பட்ட 2 நாள் உச்சிமாநாடு, ரஷ்யா–உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவரும் என்ற நம்பிக்கையுடன் நிறைவடைந்தது. 100 பிரதிநிதிகளில், 80 நாடுகளும் 4 அமைப்புகளும் இறுதி கூட்டறிக்கையை ஆதரித்தன. 2022 பிப்ரவரியில் தொடங்கிய மோதலை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளை எளிதாக்குவதில் தனது கவனத்தை செலுத்திய அமைதி உச்சிமாநாடு, சமாதான முயற்சிகளை விவாதிக்கவும் மேம்படுத்தவும் சர்வதேச பிரதிநிதிகளை அணிதிரட்டியது.

**17. அண்மையில், எல் நினோ மற்றும் லா நினா நிலைமைகளின் உருவாக்கத்தைக் கணிப்பதற்காக புதிய கருவி ஒன்றை உருவாக்கியுள்ள அமைப்பு எது?**

**அ. பெருங்கடல்சார் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையம் (INCOIS) ☑**

ஆ. தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT)

இ. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO)

ஈ. இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (IISER)

★ ஹைதராபாத்தைச் சார்ந்த இந்திய தேசிய பெருங்கடல்சார் தகவல் சேவை மையம் (INCOIS) எல் நினோ மற்றும் லா நினா நிலைமைகளைக் கணிக்க பேய்சியன் கன்வல்யூஷனல் நியூரல் நெட்வொர்க்கை (BCNN) உருவாக்கியுள்ளது. செயற்கை நுண்ணறிவு (AI), ஆழ்ந்த கற்றல் மற்றும் இயந்திர கற்றல் ஆகியவற்றைப் பயன்படுத்தி, BCNN கடல்–வளிமண்டல இடைவினைகளைக் கவனிப்பதன்மூலமும் Nino3.4 குறியீட்டைப் பயன்படுத்துவதன்மூலமும் ENSO கட்டங்களை முன்னறிவிக்கிறது.

★ மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின்கீழ் 1999இல் நிறுவப்பட்ட INCOIS, பல்வேறு பங்குதாரர்களுக்கு கடல் தரவு, தகவல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்கி வருகிறது.

### 18. 'பாலைவனமாதல் & வறட்சியை எதிர்த்துப்போராடுவதற்கான உலக நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?



அ. ஜூன்.16

**ஆ. ஜூன்.17 ☑**

இ. ஜூன்.18

ஈ. ஜூன்.19

★ நிலச்சீரழிவின் கடுமையான பாதிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.17 அன்று, பாலைவனமாதல் மற்றும் வறட்சியை எதிர்த்துப் போராடுவதற்கான உலக நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "United for Land. Our Legacy. Our Future" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள் ஆகும். இந்தக் கருப்பொருள், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் உலகளவில் சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் கூட்டான நிலப்பொறுப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

### 19. 'Pawan–Urja: Powering the Future of India' என்ற மையக்கருப்பொருளுடன், 'உலக காற்று நாள்' நிகழ்வைக் கொண்டாடிய மத்திய அமைச்சகம் எது?

அ. பாதுகாப்பு அமைச்சகம்

ஆ. உழவு அமைச்சகம்

**இ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑**

ஈ. நகர்ப்புற மேம்பாடு & வறுமை ஒழிப்பு அமைச்சகம்

नवीन एवं
नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF
NEW AND
RENEWABLE ENERGY
सत्यमेव जयते

★ புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் 2024 ஜூன்.15 அன்று 'உலக காற்று நாள்' கொண்டாட்ட நிகழ்ச்சியை நடத்தியது. இது இதுவரையிலான இந்திய காற்றாலைத் துறையின் புகழ்பெற்ற வெற்றியைக் கொண்டாடுவதையும், இந்தியாவில் காற்றாலை எரிசக்தியை ஏற்றுக்கொள்வதை விரைவுபடுத்துவதற்கான சாத்தியமான வழியைப்பற்றி விவாதிப்பதையும் நோக்கமாகக் கொண்டது. "பவன்–உர்ஜா: இந்தியாவின் எதிர்காலத்தை மேம்படுத்துதல்" என்ற மையக்கருப்பொருளுடன், இந்த நிகழ்வு 'மின் தேவையைப் பூர்த்திசெய்வதில் காற்றாலை எரிசக்தியின் பங்கு', 'இந்தியாவில் கடலோர காற்றாலை ஆற்றல் ஏற்றலை விரைவுபடுத்துதல்' மற்றும் 'இந்தியாவில் கடற்காற்று வளர்ச்சி: இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துதல்' ஆகியவைபற்றி குழு விவாதங்களை நடத்தியது.

★ 2024 மேக்குள் 46.4 கிகாவாட் ஒட்டுமொத்த நிறுவப்பட்ட காற்றாலை மின்திறனுடன், இந்தியா உலகின் 4ஆவது மிகப்பெரிய காற்றாலை மின்னாற்றலாக முன்னேறியுள்ளது. 2030ஆம் ஆண்டளவில் புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான எரிசக்தி வளங்களிலிருந்து அதன் நிறுவப்பட்ட மின்சார திறனில் 50% மற்றும் 2070க்குள் நிகர சுழியத்தை அடைவதற்கான இந்தியாவின் முயற்சிகளுக்கு காற்றாலை ஆற்றல் முக்கியமானது.

### 20. '2024 – சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டில்' இந்தியாவின் தரநிலை என்ன?




அ. 156ஆவது

ஆ. 166ஆவது

**இ. 176ஆவது ☑**

ஈ. 186ஆவது

★ நடுவண் அரசின் சுற்றுச்சூழல் முன்னேற்றக் கோரிக்கைகள் இருந்தபோதிலும், 2024 – சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டில் 180 நாடுகளில் இந்தியா 176ஆவது இடத்தில் உள்ளது; கடந்த 2022இல் 180ஆவது இடத்தில் இந்தியா இருந்தது. யேல் மற்றும் கொலம்பியா ஆராய்ச்சியாளர்களால் தொகுக்கப்பட்ட இது, பல அளவுருக்களைக்கொண்டு

பசுமை செயல்திறனை மதிப்பிடுகிறது. 2012ஆம் ஆண்டு முதல், இந்தியா தொடர்ந்து இந்தக் குறியீட்டில் சரிவைச் சந்தித்து வருகிறது; இது, தற்போதைய சுற்றுச்சூழல் சவால்களை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

**21. இந்திய ரெயில்வேயானது அண்மையில் எந்த ஆற்றின்மீதுள்ள உலகின் மிகவுயரமான ரெயில் பாலத்தைக் கடந்து, சங்கல்தானிலிருந்து ரியாசிக்குச் செல்லும் முதல் சோதனை ரெயிலை இயக்கியது?**

அ. சட்லெஜ்

ஆ. ஜீலம்

**இ. செனாப் ☑**

ஈ. யமுனை



★ உலகின் மிகவுயரமான ரெயில்வே பாலமான செனாப் பாலத்தைக் கடந்து, சங்கல்தானிலிருந்து–ரியாசிக்கு முதல் சோதனை ரெயிலோட்டம் நிறைவடைந்ததாக மத்திய ரெயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அறிவித்தார். ஜம்மு–காஷ்மீரில் அமைந்துள்ள இந்தப் பாலம் செனாப் ஆற்றில் இருந்து 359 மீ உயரத்தில் அமைந்துள்ளது; இது ஈபிள் கோபுரத்தைவிடவும் சுமார் 35 மீட்டர் உயரத்தில் உள்ளது.

**22. அண்மையில், செங்கொடி–2024 பயிற்சியின் இரண்டாவது பதிப்பு நடைபெற்ற இடம் எது?**

அ. அல்டஸ் விமானப்படைத் தளம், ஓக்லஹோமா

**ஆ. ஈல்சன் விமானப்படைத் தளம், அலாஸ்கா ☑**

இ. பீல் விமானப்படைத் தளம், கலிபோர்னியா

ஈ. கிரீச் விமானப்படைத் தளம், நெவாடா



★ ஜூன்.04–14 வரை அமெரிக்க வான்படையின் அலாஸ்காவில் உள்ள ஈல்சன் விமானப்படைத் தளத்தில் நடத்தப்பட்ட செங்கொடி–2024 பயிற்சியில் இந்திய வான்படை குழு பங்கேற்றது. இது செங்கொடி–2024இன் இரண்டாவது பதிப்பாகும்; இது ஒரு மேம்பட்ட வான்வழி போர் பயிற்சியாகும். இது அமெரிக்க வான்படையால் ஓராண்டில் நான்கு முறை நடத்தப்படுகிறது. இந்தப் பயிற்சியில் இந்திய வான்படை, சிங்கப்பூர் குடியரசு விமானப்படை, இங்கிலாந்தின் ராயல் விமானப்படை, ராயல் நெதர்லாந்து விமானப்படை, ஜெர்மன் லுஃப்ட்வாஃபே மற்றும் அமெரிக்க விமானப்படை ஆகியவை பங்கேற்றன.

★ 'செங்கொடி' என்பது யதார்த்தமான போர் அமைப்புகளை வழங்க வடிவமைக்கப்பட்ட பல வகைகளில் நடத்தப்படும் ஒரு வான்வழி போர் பயிற்சியாகும். விரும்பிய சூழலை உருவகப்படுத்துவதற்காக படைகளின் எல்லை நிர்ணயம் செய்யப்படுகிறது; சிவப்புப்படை வான் பாதுகாப்புக் கூறுகளை உருவகப்படுத்துகிறது. நீலப்படை தாக்குதல் கலப்பு கூறுகளை உருவகப்படுத்துகிறது. IAF இந்திய வான்படையின் ரபேல் விமானங்கள் செங்கொடி பயிற்சியில் பங்கேற்றது இதுவே முதல் முறையாகும்.

**23. அண்மையில், லண்டன் மத்திய வங்கியால், '2024ஆம் ஆண்டின் இடர் மேலாளர் விருது' வழங்கி மரியாதை செய்யப்பட்ட இந்திய ஒழுங்காற்று அமைப்பு எது?**

**அ. RBI ☑**

ஆ. NABARD

இ. SEBI

ஈ. SBI

★ லண்டன் மத்திய வங்கியால், '2024ஆம் ஆண்டின் இடர் மேலாளர் விருது' வழங்கி மரியாதை செய்யப்பட்ட இந்திய ஒழுங்காற்று அமைப்பு இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆகும். இந்தியாவில் இடர் மேலாண்மை கொள்கைகளை மேம்படுத்துவதிலும், நிதி நிலைத்தன்மையை உறுதிசெய்வதிலும் ரிசர்வ் வங்கியின் முயற்சிகளை இந்த விருது

அங்கீகரிக்கிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநர் மனோரஞ்சன் மிஸ்ரா, இடர் கலாச்சாரத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் சாதனைகள் மற்றும் பயனுள்ள இடர்மேலாண்மை நடைமுறைகளில் உலகளாவிய மத்திய வங்கிகளுக்கான வரையறைகளை நிர்ணயித்து இந்த விருதை ஏற்றுக்கொண்டார்.

**24. அண்மையில், அதிகபட்ச காற்றாலை மின் நிறுவல் திறனுக்கான விருதை வென்ற மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. குஜராத் ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. ஒடிசா



★ புது தில்லியில் உலக காற்று நாளைக் கொண்டாடும், "Pawan–Urja: Powering the Future of India" நிகழ்வில், அதிக காற்றாலை மின் நிறுவல் திறனுக்கான விருதை குஜராத் மாநிலம் பெற்றது. தமிழ்நாட்டின் 10,743 மெகாவாட்டுடன் ஒப்பிடுகையில், 2024 மே மாதத்திற்குள் 11,823 மெகாவாட் நிறுவப்பட்ட திறனுடன் குஜராத் தமிழ்நாட்டை விஞ்சியது. கர்நாடகா 6,312 மெகாவாட்டுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. இந்த விருதை குஜராத் அதிகாரிகள் மம்தா வர்மா மற்றும் ஜெய் பிரகாஷ் சிவஹரே ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆகஸ்ட் முதல் 'தமிழ்ப்புதல்வன்' திட்டம்.**

அரசுப்பள்ளிகளில் படித்து கல்லூரிகளில் சேர்ந்திருக்கும் மாணவர்களுக்கு ஆகஸ்ட் மாதம் முதல் வங்கிக்கணக்கில் ₹1000 வரவு வைக்கும் 'தமிழ்ப்புதல்வன்' திட்டம் தொடங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வியில் 16 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் 'காலை உணவுத்திட்டம்', 27 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் 'இல்லம் தேடிக்கல்வி', 28 லட்சம் மாணவர்களுக்கு திறன்பயிற்சி வழங்கிவரும், 'நான் முதல்வன்' திட்டம் என ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

---

**2. சாகித்திய அகாதெமியின் யுவ, பால புரஸ்கார் விருதுகள் அறிவிப்பு. தமிழ் மொழியில் லோகேஷ் இரகுராமன், யூமா வாசுகி தேர்வு.**

2024ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமியின் யுவ புரஸ்கார் மற்றும் பால சாகித்திய புரஸ்கார் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழியில் யுவ புரஸ்கார் விருதுக்கு லோகேஷ் இரகுராமனும், பால சாகித்திய புரஸ்கார் விருதுக்கு யூமா வாசுகியும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் தமிழ், சமற்கிருதம், ஆங்கிலம் உள்பட அங்கீகரிக்கப்பட்ட 24 மொழிகளில் வெளியாகும் சிறந்த இலக்கியப்படைப்புகளுக்கு புகழ்பெற்ற சாகித்திய அகாதெமி விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

இளையோரின் சிறந்த படைப்புகளுக்கு யுவ புரஸ்கார் விருது, சிறுவர்களுக்காக எழுதப்படும் சிறந்த படைப்புகளுக்கு பால சாகித்ய புரஸ்கார் விருது வழங்கி நாடு முழுவதும் உள்ள சிறந்த எழுத்தாளர்கள் கௌரவிக்கப்படுகின்றனர்.

விருதாளர்களுக்கு கலச வடிவிலான செப்புத்தகடு விருது மற்றும் ₹50,000–க்கான காசோலை வழங்கப்படுகிறது.

**தமிழ் மொழி விருதாளர்கள்:**

சாகித்திய அகாதெமியின் யுவ புரஸ்கார்–2024 விருதுப்பட்டியலில் தமிழ் மொழியில் லோகேஷ் இரகுராமன் (34) தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவரது முதல் கதைத்தொகுப்பான 'விஷ்ணு வந்தார்' விருதுக்குத் தேர்வாகியுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு வெளியான, 'தன்வியின் பிறந்தநாள்' சிறுவர் சிறுகதைக்காக எழுத்தாளர் யூமா வாசுகிக்கு (64) பால சாகித்திய புரஸ்கார்–2024 விருது அறிவிக்கப்பட்டுள்ளது. மாரிமுத்து என்ற இயற்பெயரைக்கொண்ட யூமா வாசுகி, எழுத்தாளர், ஓவியர், புனைகதையாளர், மொழிபெயர்ப்பாளர் உள்ளிட்ட பன்முகத்தன்மைகொண்டவராவார்.

---

**3. தமிழ்நாடு காவல்துறையில் 21% பெண்கள்.**

தமிழ்நாடு காவல் துறையில் 21 சதவீதம் பெண்கள் இருப்பதாக காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு காவல்துறையில் பெண்கள் கடந்த 1973இல் சேர்க்கப்பட்டனர். இதன் ஐம்பதாண்டு நிறைவை முன்னிட்டு, தேசிய அளவில் பெண் காவலருக்கான துப்பாக்கி சுடும்போட்டி, தமிழ்நாடு காவல்துறை சார்பில் நடத்தப்படுகிறது.

---

**4. 2.15 லட்சம் ஆமைக்குஞ்சுகளை கடலுக்கு அனுப்பி சாதனை.**

நடப்பாண்டில் 2.15 லட்சம் ஆமைக்குஞ்சுகளை கடலுக்கு அனுப்பி, வனத்துறை சாதனை செய்துள்ளதாக தமிழ்நாடு அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் 1076 கிமீட்டர் நீள கடற்கரையில் இனப்பெருக்கம் மற்றும் முட்டையிட கடலாமைகள் வருகின்றன. குறிப்பாக, ஆலிவ் ரிட்லி, பச்சை ஆமை, ஹாக்ஸ்பில் ஆமை, லாக்கர்ஹெட் ஆமை மற்றும் லெதர்பேக் ஆமை ஆகிய ஐந்து வகை கடல் ஆமைகள் வருகின்றன. கடலாமைகளுக்கான பருவம் ஒவ்வோர் ஆண்டும் நவம்பரில் தொடங்கும்.

---


# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8


**1. அண்மையில், எந்த நாட்டு அறிவியலாளர்கள், CHASE தொலைநோக்கிமூலம் சூரிய வளிமண்டல சுழற்சியின் புதிய வடிவத்தைக் கண்டுபிடித்தனர்?**

அ. ஜப்பான்

ஆ. இந்தியா

**இ. சீனா ☑**

ஈ. பிரான்ஸ்



★ CHASE தொலைநோக்கியைப் பயன்படுத்தும் சீன அறிவியலாளர்கள் சூரியனின் வளிமண்டல சுழற்சியில் ஒரு புதிய வடிவத்தைக் கண்டுபிடித்துள்ளனர். இது இந்த நிகழ்வின் முதல் துல்லியமான 3D படத்தை வழங்குகிறது. இயற்கை வானியல் இதழில் வெளியிடப்பட்ட இந்த நிகழ்வு, சூரியனின் காந்த செயல்பாடு மற்றும் வளிமண்டல நடத்தை பற்றிய புரிதலை மேம்படுத்துகிறது. ஒரு செயற்கைக்கோள் திட்டமான CHASE, சூரிய இயக்கவியல் பற்றிய அறிவை ஆழப்படுத்துவதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. டிஜிட்டல் ஹெல்த் இன்சென்டிவ் திட்டமானது கீழ்க்காணும் எந்த முன்னெடுப்பின்கீழ் தொடங்கப்பட்டது?**

அ. இந்திரதனுஷ் திட்டம்

ஆ. யுனிவர்சல் ஹெல்த் கேர்

**இ. ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் ☑**

ஈ. பிரதமர் ஸ்வஸ்திய சுரக்ஷா யோஜனா

★ நோயாளிகளின் உடல்நலப்பதிவுகளை எண்மமயமாக்கி, ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் ஹெல்த் அக்கவுண்ட் (ABHA ID) உடன் இணைப்பதற்கான டிஜிட்டல் ஹெல்த் இன்சென்டிவ் திட்டத்தை (டிஹெச்ஐஎஸ்) மத்திய அரசு 2025 ஜூன். 30 வரை நீட்டித்துள்ளது. ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டலின்கீழ், 2023 ஜனவரி.1 அன்று தொடங்கப்பட்டது. DHIS திட்டம் இந்தியாவில் டிஜிட்டல் சுகாதார நடைமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ABHA உடன் இணைக்கப்பட்ட டிஜிட்டல் ஹெல்த் ரெக்கார்டுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஊக்கத்தொகைகளுடன், சுகாதார வசதிகள் மற்றும் டிஜிட்டல் தீர்வு நிறுவனங்கள் ஆகியவை தகுதியில் அடங்கும்.

**3. 'பிளானட் நைன்' என்றால் என்ன?**

**அ. நமது சூரிய குடும்பத்தின் வெளிப்புறத்தில் உள்ள ஓர் அனுமான கோள் ☑**

ஆ. நெப்டியூனின் ஒரு நிலவு

இ. குய்ப்பர் பட்டையில் உள்ள வால் விண்மீன்கள்

ஈ. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட சனியின் ஒரு நிலவு



★ வானியலாளர்கள் கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலமாக வெளிப்புற சூரிய குடும்பத்தில் ஒரு கற்பனையான ஒன்பதாவது கோளான பிளானட் நைனைத் தேடிவருகின்றனர். தொலைதூர டிரான்ஸ்–நெப்டியூனியன் பொருட்களின் சுற்றுப் பாதையில் உள்ள முரண்பாடுகளை விளக்க முன்மொழியப்பட்ட பிளானட் நைன், சூரியனிலிருந்து 400 முதல் 800 வானியல் அலகுகள் வரையிலான அதிக நீள்வட்ட சுற்றுப்பாதையுடன் பூமியின் நிறையில் 5–10 மடங்கு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதை விரைவில் கண்டுபிடிப்போம் என நிபுணர்கள் நம்புகின்றனர்.

**4. 'SDG 7'இன் முதன்மை நோக்கம் என்ன?**

அ. அணுவாற்றல் வளர்ச்சியை ஊக்குவித்தல்

ஆ. பைங்குடில் வாயு வெளியேற்றத்தை 50% குறைப்பது

**இ. அனைவருக்கும் மலிவான, நம்பகமான, நிலையான & நவீன எரிசக்திக்கான அணுகலை உறுதிசெய்தல் ☑**

ஈ. உலகளவில் புதைபடிவ எரிபொருள் உற்பத்தியை அதிகரித்தல்

★ "SDG 7: எரிசக்தி முன்னேற்ற அறிக்கை – 2024" ஆனது 2030ஆம் ஆண்டளவில் SDG 7ஐ சந்திக்கும் பாதையில் உலகம் இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது. முதன் முதலில் 2018இல் வெளியிடப்பட்ட இந்த ஆண்டு அறிக்கை SDG 7 முன்னேற்றத்திற்கான முக்கிய குறிப்பு ஆகும். அனைவருக்கும் மலிவான, நம்பகமான, நிலையான மற்றும் நவீன எரிசக்திக்கான அணுகலை உறுதிசெய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அறிக்கை IEA, IRENA, UNSD, உலக வங்கி மற்றும் WHO ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டதாகும்.

**5. எந்தத் தொலைநோக்கியைப் பயன்படுத்தி, வானியலாளர்கள், 'SN 2023adsy' என்ற புதிய சூப்பர்நோவாவைக் கண்டுபிடித்துள்ளனர்?**



அ. ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி

**ஆ. ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி ☑**

இ. ஸ்பிட்சர் விண்வெளி தொலைநோக்கி

ஈ. சந்திரா X-கதிர் ஆய்வகம்

★ ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியைப் பயன்படுத்தி, வானியலாளர்கள் 'SN 2023adsy' என்றவொரு புதிய சூப்பர்நோவாவைக் கண்டுபிடித்துள்ளனர். ஒரு சூப்பர்நோவா என்பது ஒரு பெருவிண்மீனின் பேரழிவின் காரணமாக நிகழும் ஒரு வெடிப்பு ஆகும்; ஒரு விண்மீன் அண்டையிலிருந்து பொருளைக் குவிக்கும்போது வகை–I நிகழ்வும் ஒரு விண்மீன் அதன் ஈர்ப்பு விசையின்கீழ் சரிந்தால் வகை–II நிகழ்வும் நிகழ்கிறது. சூப்பர்நோவாக்கள், விண்வெளியில் மிகப்பெரிய வெடிப்புகள், விண்மீன் திரள்களை மிஞ்சும் அளவுக்குக் கனமான தனிமங்களை உருவாக்குகின்றன. மேலும் பால்வீதி அளவுள்ள விண்மீன்களில் இது 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்கின்றன.

**6. '*Filoboletus manipularis*' என்றால் என்ன?**



அ. சிலந்தி

ஆ. மீன்

**இ. காளான் ☑**

ஈ. ஆக்கிரமிப்பு களை

★ காசர்கோடு காடுகளில், '*Filoboletus manipularis*' என்ற ஓர் அரிய உயிரி–ஒளி காளான் இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர். லூசிஃபெரின் மற்றும் லூசிஃபெரேஸ் சம்பந்தப்பட்ட இரசாயன எதிர்வினை காரணமாக இந்தக் காளான்கள் இரவில் பிரகாசமான பச்சை நிறத்தில் ஒளிரும். அவை வெப்பமண்டல, ஈரப்பதமான சூழலில் அழுகும் கரிமப்பொருட்களுடன் செழித்து வளரும். இந்த உயிரி–ஒளி பூச்சிகளைக் கவர்ந்து, வித்துப் பரவலுக்கு உதவுகிறது.

**7. அண்மையில், 46ஆவது அண்டார்டிக் ஒப்பந்த ஆலோசனைக் கூட்டத்தை நடத்திய நாடு எது?**




**அ. இந்தியா ☑**

ஆ. இந்தோனேசியா

இ. பூட்டான்

ஈ. சீனா

★ இந்தியா, கொச்சியில் 46ஆவது அண்டார்டிக் ஒப்பந்த ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியது மற்றும் அதன் மைத்ரி ஆராய்ச்சி தளமான மைத்ரி–IIக்கு வழித்தோன்றலையும் அறிவித்தது. சவூதி அரேபியா அண்டார்டிக் ஒப்பந்த உறுப்பினர்களில் இணைந்தது. அண்டார்டிகாவின் நிர்வாகத்தில் புவிசார் அரசியல் செல்வாக்கு செலுத்தக்கூடாது

என்றும், இந்த ஒப்பந்தம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளின் பிரத்யேக சங்கமாக இருக்கக்கூடாது என்றும் இந்தியா உள்ளடக்கிய நிர்வாகத்தை வலியுறுத்தியது.

**8. நேரடி நெல் விதைப்பு அல்லது 'தார்-வட்டார்' நுட்பத்தை தீவிரமாக ஊக்குவித்து வருகிற மாநில அரசு எது?**



அ. ஹரியானா

ஆ. உத்தர பிரதேசம்

**இ. பஞ்சாப் ☑**

ஈ. மேற்கு வங்காளம்

★ பஞ்சாப் மாநில அரசாங்கம் நேரடி நெல் விதைப்பு (அல்லது 'தார்-வட்டார்') நுட்பத்தை ஊக்குவித்து வருகிறது; இது கனமான / நடுத்தர-கனமான-அழுத்தமான மண்ணுக்கு சிறந்த நீர்தக்கவைப்பு காரணமாக மிகவும் பொருத்தமான முறையாக உள்ளது. அடிக்கடி நீர்ப்பாசனம் தேவைப்படும் இலகுவான மண், DSRஇன் நீர்சேமிப்பு நன்மைகளை மறுக்கிறது. பஞ்சாபின் மஜா மற்றும் தோபா பகுதிகளில் நேரடி நெல் விதைப்புக்கு ஏற்ற மண் வகைகள் உள்ளன; அதே சமயம் மால்வாவில் லேசான அமைப்புள்ள மண் உட்பட மண் அமைப்புகளின் கலவை உள்ளது.

**9. 'கிருஷி சகி ஒருங்கிணைப்பு திட்டம்' குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அமைச்சகங்கள் எவை?**

**அ. உழவு & உழவர்கள் நல அமைச்சகம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑**

ஆ. உள்துறை அமைச்சகம் மற்றும் ஜல் சக்தி அமைச்சகம்

இ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் சுகாதாரம் & குடும்ப நல அமைச்சகம்

ஈ. பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகம்

★ பிரதமர் நரேந்திர மோதி 2024 ஜூன்.18 அன்று வாரணாசியில் 30,000-க்கும் மேற்பட்ட சுயஉதவி குழுக்களுக்கு 'கிருஷி சகிகள்' எனச் சான்றிதழ்களை வழங்கினார். வேளாண்மையில் பெண்களின் முக்கிய பங்கை அங்கீகரித்து, உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகமும் ஊரக வளர்ச்சி அமைச்சகமும் இணைந்து கடந்த 2023 ஆகஸ்டில் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்மூலம், 'கிருஷி சகி' சான்றிதழ் திட்டம் தொடங்கப்பட்டது. இது கிராமப்புற பெண்களின் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் வேளாண் நடைமுறைகளில் அதிகாரமளித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது.

**10. 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ், 200000 மாணவர்களுக்கு IT திறன் பயிற்சியளிப்பதற்காக தமிழ்நாட்டுடன் கூட்டிணைந்துள்ள நிறுவனம் எது?**

அ. கூகுள்


ஆ. மைக்ரோசாப்ட்

இ. மெட்டா

**ஈ. ஆரக்கிள் ☑**

★ 200,000+ மாணவர்களுக்கு கிளவுட் கம்ப்யூட்டிங், AI, டேட்டா சயின்ஸ், எம்எல் மற்றும் பிளாக்செயின் போன்ற மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத் திறன்களில் பயிற்சியளிக்கும் நோக்கத்தில், 'நான் முதல்வன்' திட்டத்திற்காக ஆரக்கிள் தமிழ்நாடு அரசுடன் கூட்டு சேர்ந்துள்ளது. டிஜிட்டல் மற்றும் வளாக அடிப்படையிலான கற்றல், அதிநவீன தொழில்நுட்பங்களில் சான்றிதழ்களை வழங்குவதன்மூலம் இளைஞர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்தற்கான ஆரக்கிளின் உறுதிப்பாட்டை இந்த முயற்சி அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இளைஞர்களிடையே தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வளர்ப்பதில் ஆரக்கிளின் பங்கை வலியுறுத்தி, எதிர்கால வேலைச்சந்தைக்குத் தேவையான திறன்களுடன் மாணவர்களை உருவாக்குவதை இந்த ஒத்துழைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

**11. அண்மையில், மதிப்புமிக்க, 'நெல்சன் மண்டேலா வாழ்நாள் சாதனையாளர் விருது' பெற்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனை படைத்தவர் யார்?**



**அ. வினோத் கணத்ரா ☑**

ஆ. ரவி கெய்க்வாட்

இ. அமித் தத்தா

ஈ. அஷ்வின் குமார்

★ இந்தியாவைச் சேர்ந்த பிரபல குழந்தைகள் திரைப்படத் தயாரிப்பாளரான வினோத் கணத்ரா, திரைத்துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக தென்னாப்பிரிக்காவின் மதிப்புமிக்க, 'நெல்சன் மண்டேலா வாழ்நாள் சாதனையாளர் விருது' பெற்றுள்ளார். 7ஆவது நெல்சன் மண்டேலா குழந்தைகள் திரைப்பட விழாவில் வழங்கப்பட்ட இந்த விருதைப் பெறும் முதல் இந்தியர் ஆவார். 40 ஆண்டுகளுக்கும் மேலான வினோத் கணத்ராவின் தொழில்முறை வாழ்வில், அவர் ஏராளமான ஆவணப்படங்கள் மற்றும் இளைஞர் நிகழ்ச்சிகளை எடுத்துள்ளார். 'லிவ் உல்மன் அமைதி பரிசு' மற்றும் 'தாதாசாஹேப் பால்கே வாழ்நாள் சாதனையாளர் விருது' உள்ளிட்ட முப்பத்தாறு தேசிய மற்றும் சர்வதேச விருதுகளை அவர் வென்றுள்ளார்.

**12. 2024 – உலக அரிவாள் செல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Hope Through Progress: Advancing Sickle Cell Care Globally ☑**

WORLD SICKLE CELL DAY

ஆ. Celebrating Progress

இ. Shine the Light on Sickle Cell

ஈ. Increase public awareness and understanding of sickle cell disease

★ மரபணு இரத்தக்கோளாறான அரிவாள் செல் நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஜூன்.19ஆம் தேதி உலக அரிவாள் செல் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. 2008 ஐநா தீர்மானத்தின்மூலம் நிறுவப்பட்ட இது, முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் தடுப்புபற்றி பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு தெரிவிக்கும் நோக்கம் கொண்டது. 2024 இன் கருப்பொருள், "Hope Through Progress: Advancing Sickle Cell Care Globally" ஆகும். இது உலகெங்கிலுமுள்ள நோயாளிகளுக்குப் பராமரிப்பை மேம்படுத்துதல் மற்றும் நிவாரணம் வழங்குவதை வலியுறுத்துகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அமெரிக்காவில் விமானப்படை கூட்டுப்பயிற்சி.**

அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் நடைபெற்ற, 'செங்கொடி' இராணுவ கூட்டுப்பயிற்சியில் F16 மற்றும் F15 போன்ற அதிநவீன போர்விமானங்களுடன் இந்திய வான்படையின் ரபேல் போர்விமானமும் முதல்முறையாக ஈடுபட்டது. சிங்கப்பூர், பிரிட்டன், நெதர்லாந்து, ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளின் விமானப்படையினரும் இந்த கூட்டுப்பயிற்சியில் பங்கேற்றனர். இப்பயிற்சியின்மூலம் சர்வதேச நட்புநாடுகளுடன் இணைந்து இயங்குந்தன்மை பற்றிய நுண்ணறிவு மற்றும் பன்னாட்டுச்சூழலில் பணிகள் பற்றிய கூட்டுப்புரிதல் ஆகிய அனுபவங்கள் இந்திய விமானப்படைக்கு கிடைத்தன.

---

**2. பொற்பனைக்கோட்டையில் 2ஆம் கட்ட அகழாய்வு தொடக்கம்.**

புதுக்கோட்டையில் சங்ககால அரசர்களின் கோட்டையாக இருக்கலாம் எனக்கருதப்படும் பொற்பனைக்கோட்டையில், தமிழ்நாடு அரசின் தொல்லியல்துறை சார்பில் இரண்டாம் கட்டமாக அகழாய்வுப் பணிகள் தொடங்கியுள்ளன. புதுக் கோட்டை நகரத்திலிருந்து 6 கிமீ தொலைவில் அமைந்துள்ளது பொற்பனைக்கோட்டை என்ற பகுதி.

---

**3. 'பள்ளிகளின் பெயர்களில் சாதி அடையாளம் இருக்கக்கூடாது': ஓய்வுபெற்ற நீதியரசர் சந்துரு குழு அறிக்கையில் பரிந்துரை.**

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் கடந்த ஆண்டு அரசுப்பள்ளி மாணவனை, சக மாணவர்கள் சிலர் வீடு புகுந்து அரிவாளால் வெட்டிய சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதையடுத்து பள்ளிகளில் சாதி மோதல்கள் மற்றும் வன்முறைகளை தடுப்பதற்கான வழிமுறைகளை ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிக்க தமிழ்நாடு அரசு சார்பில் ஓய்வுபெற்ற நீதியரசர் சந்துரு தலைமையில் ஒருநபர் விசாரணைக்குகுழு அமைக்கப்பட்டது. இந்தக்குழுவின் தனது அறிக்கையை முதலமைச்சரிடம் சமர்ப்பித்தார்.

அதில், அரசுப்பள்ளிகளின் பெயர்களில் ஆதிதிராவிடர் நலத்துறை உள்பட எந்தச் சாதிய அடையாளங்களும் இருக்க கூடாது எனப்பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதேபோல் தனியார் பள்ளிகளில் உள்ள சாதி பெயர்களை நீக்கவேண்டும் எனவும், சாதி அடையாளங்கள் இருக்கக்கூடாது என்ற உறுதிமொழி பெற்ற பிறகே புதிய பள்ளி தொடங்க அனுமதி அளிக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

---

**4. 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டம்: அடுத்த மாதம் தொடங்க அரசு முடிவு.**

'கலைஞரின் கனவு இல்லம்' திட்டத்தை அடுத்த மாதம் தொடங்க, தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது. ஊரகப் பகுதிகளில் 5 ஆயிரத்துக்கும் குறைவாக குடிசைகள் உள்ள 15 மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து வீடுகட்டும் ஆணைகளை வழங்க தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது. நடப்பு நிதியாண்டில் ஒரு வீட்டுக்கு ₹3.10 லட்சம் என்ற அளவில், ஒரு லட்சம் வீடுகள் கட்ட ₹3,100 கோடி ஒதுக்கி ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

---

**5. நான்கு இடங்களில் புதிதாக அகழாய்வுப்பணிகள்.**

சிவகங்கை மாவட்டம் கீழடியில் பத்தாம் கட்டமாக ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இங்கு 2014ஆம் ஆண்டிலிருந்து அகழாய்வுகள் நடைபெற்று வருகின்றன.

தொல்லியல் தளமான கொந்தகையில் நான்காம் கட்ட அகழாய்வுப் பணிகள் இப்போது தொடங்கியுள்ளன. முதுமக்கள் தாழிகள், மட்கலன்கள் என பல்வேறு தொல்பொருள்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டையில் நடப்பாண்டு இரண்டாம் கட்ட அகழாய்வுப்பணி நடைபெறவுள்ளது.

இதேபோன்று, திருவண்ணாமலை மாவட்டம் கீழ்நமண்டி, புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டையில் இரண்டாம் கட்ட அகழாய்வுப்பணி தொடங்கப்பட்டுள்ளது.

**முதல் கட்ட அகழாய்வுகள்:**

தென்காசி மாவட்டம் திருமலாபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் சென்னானூர், திருப்பூர் மாவட்டம் கொங்கல்நகரம், கடலூர் மாவட்டம் மருங்கூர் ஆகிய நான்கு புதிய இடங்கள் உள்பட ஏற்கெனவே அகழாய்வு நடந்து வரும் நான்கு இடங்கள் என மொத்தம் 8 இடங்களில் நடப்பாண்டில் அகழாய்வுப்பணிகளை முதலமைச்சர் தொடக்கிவைத்தார்.

மேலும், தருமபுரி மாவட்டம் பெரும்பாலை என்னும் இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் அறிக்கை மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள 138 கல்வெட்டுகளில் விளக்கவுரைகள் அடங்கிய, தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி ஆகிய இரண்டு நூல்களையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

**6. GSAT–N2 திட்டம்மூலம் இந்தியாவில் அதிவேக இணைய சேவை: ISRO தகவல்.**

விண்ணில் விரைவில் செலுத்தப்படவுள்ள இந்தியாவின் GSAT–N2 தகவல் தொடர்பு செயற்கைக்கோள்மூலம் விநாடிக்கு 48 GB வேகத்தில் இணைய சேவையை வழங்கமுடியும் என ISRO தெரிவித்துள்ளது. இந்திய விண்வெளி ஆய்வுமையத்தின் (ISRO)கீழ் செயல்படும் நியூஸ்பேஸ் இந்தியா நிறுவனம் வெளிநாட்டு செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்பும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்காவின் ஸ்பேஸ் X நிறுவனத்துடன் நியூ ஸ்பேஸ் இந்தியா நிறுவனம் புதிய ஒப்பந்தம் மேற்கொண்டது. அதன்படி, இந்தியாவின் GSAT–N2 (முந்தைய பெயர் GSAT–20) என்ற அதிநவீன தகவல் தொடர்பு செயற்கைக்கோளை அமெரிக்காவின் ஸ்பேஸ் X நிறுவனத்தின் பால்கான் 9 என்ற ஏவுகலம்மூலம் ஏவுவதற்கு இருதரப்புக்கும் இடையே கையொப்பமானது. இந்தச் செயற்கைக்கோளின் ஆயுள்காலம் 14 ஆண்டுகள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வெளிநாட்டு ஏவுகலம் ஏன்?:**

இந்தியாவில் ISROமூலம் வடிவமைக்கப்பட்ட SSLV, PSLV, GSLV, LVM–3 ஆகிய ஏவுகலங்கள்மூலம் செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டு வருகின்றன. விண்கலன்கள் அல்லது செயற்கைக்கோள்களின் எடையைப் பொருத்து அதற்கான ஏவுகலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் அதிகபட்சமாக 4,000 கிகி வரையிலான எடைகொண்ட கலன்களை நவீன LVM–3 ஏவுகலம்மூலம் தாங்கிச்செல்லமுடியும். ஆனால், தகவல்–தொடர்பு மற்றும் புவிக்கண்காணிப்புக்காக தற்போது வடிவமைக்கப்பட்டுள்ள GSAT–N2 செயற்கைக்கோள் 4,700 கிலோவுக்கும் கூடுதலான எடைகொண்டது. அதன் காரணமாகவே எலான் மஸ்கின் அமெரிக்க நிறுவனத்துடன் அதற்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

---

**7. கலைச்செம்மல் விருது.**

நுண்கலைத்துறையில் சாதனைகளைப் படைத்துவரும் கலைஞர்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கப்படும் விருதுதான் கலைச்செம்மல் விருது. நுண்கலைத்துறையில் அரும்பெரும் சாதனைகள், சேவைகளைப்பாராட்டும் வகையில், ஆண்டுக்கு ஆறு கலைஞர்களுக்கு, 'கலைச்செம்மல் விருது' வழங்கப்படுகிறது.

---

**8. பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவ தனி இணையதளம்.**

பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவுவதற்காக தனி இணையதள (https://www.pocsoportal.tn.gov.in) முகப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் தெரிவிக்கப்படும் விவரங்கள் யாருக்கும் தெரியாத வகையில், இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. நாளந்தா பல்கலைக்கழகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. ஜார்கண்ட்

ஆ. குஜராத்

**இ. பீகார் ☑**

ஈ. இராஜஸ்தான்



★ பீகார் மாநிலம் ராஜகிருகத்தில் பழங்கால இடிபாடுகள் அருகே புதிய நாளந்தா பல்கலைக்கழக வளாகத்தை பிரதமர் நரேந்திர மோதி திறந்து வைத்தார். ஐந்தாம் நூற்றாண்டில் குமாரகுப்தாவால் நிறுவப்பட்ட நாளந்தா, ஹர்ஷவர்தனர் மற்றும் பால மன்னர்களின்கீழ் 600 ஆண்டுகளாக ஒரு புகழ்பெற்ற துறவற பல்கலைக்கழகமாக இருந்தது. பௌத்தம், மருத்துவம் மற்றும் வானியல்போன்ற பாடங்களைக் கற்பிக்கும் பல்கலைக்கழகமான இது ஆசிய கண்டத்திலிருந்து மாணவர்களை ஈர்த்தது. 1193இல் பக்தியார் கில்ஜியால் சூறையாடப்பட்ட இது, 1812இல் மீண்டும் கண்டறியப்பட்டது. இப்போது UNESCOஇன் உலக பாரம்பரிய தளமாக இது உள்ளது.

**2. அண்மையில், ஒரே பாலின திருமணத்தை அங்கீகரித்த முதல் தென்கிழக்காசிய நாடு எது?**

**அ. தாய்லாந்து ☑**

ஆ. வியட்நாம்

இ. மலேசியா

ஈ. சிங்கப்பூர்



★ ஒரே பாலின திருமணத்தை அங்கீகரித்த முதல் தென்கிழக்காசிய நாடாக ஆனது தாய்லாந்து. உள்ளடக்கிய நற்பெயர் இருந்தபோதிலும், பழமைவாத சமூகம் மற்றும் அரசாங்கத்தின் மதிப்புகள் காரணமாக தாய்லாந்து இந்தச் சட்டத்தை நிறைவேற்ற பல தசாப்தங்களாக சவால்களை எதிர்கொண்டது. இந்த மசோதா எந்தவொரு பாலினத்தின் திருமண பங்காளிகளுக்கும் முழு சட்ட, நிதி மற்றும் மருத்துவ ரீதியிலான உரிமைகளை வழங்குகிறது. இது மன்னர் மஹா வஜிரலோங்கோர்னின் முறையான ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. 120 நாட்களுக்குள் இது நடைமுறைக்கு வரும்.

**3. '*Ophicthus Suryai*' என்றால் என்ன?**

அ. மேற்கு வங்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் அரிய வகை மீன்

ஆ. வடகிழக்கு மாநிலங்களில் காணப்படும் ஆக்கிரமிப்பு களை

**இ. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட பாம்பு விலாங்கு மீனினம் ☑**

ஈ. இராணுவ ஆயுதம்



★ இந்தியாவின் விலங்கியல் ஆய்வுமையத்தின் கோபால்பூர் மையத்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள் ஒடிஸாவில், '*Ophicthus Suryai*' என்ற புதிய பாம்பு விலாங்கு மீனினத்தை கண்டுபிடித்துள்ளனர். செவுள் திறப்புக்கு அருகிலுள்ள முதுகுத் துடுப்பு தோற்றம், தனித்துவமான முதுகெலும்பு எண்ணிக்கை மற்றும் இருதாடைகளிலும் உள்ள பற்களின் வரிசை ஆகியவற்றால் இந்த மீனினம் அதன் கூட்டாளர்களிடமிருந்து வேறுபடுகிறது. '*Ophichthidae*' குடும்பத்தைச் சேர்ந்த பாம்பு விலாங்கு மீன்கள் சூடான, வெப்பமண்டல நீரில் வாழ்கின்றன. பெரும்பாலும் கடலின் அடிப்பகுதியில் ஒளிந்து கொள்ளும் இவை 10 அடி வரை வளருகின்றன.

**4. அண்மையில், இந்தியாவின் எந்தப் பகுதியில், "இரட்டை சூரிய ஒளிவட்டம்" என்று அழைக்கப்படும் ஓர் அரிய வானியல் நிகழ்வு காணப்பட்டது?**

அ. மேற்குத்தொடர்ச்சி மலைகள்

**ஆ. லடாக் ☑**

இ. அந்தமான் & நிக்கோபார் தீவுகள்

ஈ. தார் பாலைவனம்



★ அண்மையில், லடாக்கில் ஓர் அரிய, 'இரட்டை சூரிய ஒளிவட்டம்' தென்பட்டது. இந்த ஒளியியல் நிகழ்வு சூரியனைச் சுற்றி இரண்டு செறிவான வளையங்களைக் கொண்டுள்ளது. இது கீற்று மேகங்களில் உள்ள பனிப்படிகங்களின் வழியாக சூரியவொளி ஒளிவிலகுவதால் ஏற்படுகிறது. உள் ஒளிவட்டம் 22° ஆரமும் வெளிப்புற ஒளிவட்டம் 46° வரையும் பரவியுள்ளது. மேகங்களில் உள்ள அறுங்கோண பனிப்படிகங்களின் தனித்துவமான சீரமைப்பு இந்த திகைப்பூட்டும் விளைவை உருவாக்குகிறது.

**5. அண்மையில், யாருக்கு தெலுங்கிற்கான சாகித்திய அகாதெமி யுவ புரஸ்கார் வழங்கப்பட்டது?**

**அ. இரமேஷ் கார்த்திக் நாயக் ☑**



ஆ. நீலம் சரண்

இ. விக்ரம் சிங்

ஈ. ஜோதி குப்தா

★ நிஜாமாபாத் மாவட்டம் விவேக் நகரத்தைச் சேர்ந்த ரமேஷ் கார்த்திக் நாயக் என்ற 26 வயது எழுத்தாளர் தெலுங்கு இலக்கியத்திற்கான சாகித்திய அகாதெமி யுவ புரஸ்கார் விருதைப்பெற்றார். 2011இல் நிறுவப்பட்ட இந்த விருது, 35 வயதுக்குட்பட்ட இளம் எழுத்தாளர்களை தங்கள் படைப்புகளுக்காகக் கௌரவிக்கிறது. இவ்விருதில் ஒரு செப்புத் தகடு, சால்வை, சான்று மற்றும் ₹50,000 காசோலை ஆகியவை அடங்கும். 1954இல் நிறுவப்பட்ட சாகித்திய அகாதெமி, இந்திய அரசாங்கத்தின்கீழ் தன்னாட்சி முறையில் இந்திய மொழிகளின் இலக்கியத்தை ஊக்குவிக்கிறது, இலக்கிய சொற்பொழிவு மற்றும் வெளியீட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**6. 'Truenat' பணித்தளத்துடன் தொடர்புடைய நோய் எது?**

அ. டெங்கு



ஆ. புற்றுநோய்

**இ. காசநோய் ☑**

ஈ. மலேரியா

★ மோல்பியோவால் உருவாக்கப்பட்ட இந்தியாவின், 'Truenat' என்ற காசநோய் அறிதல் முறைமை உலக சுகாதார அவையில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. 2017இல் அறிமுகப்படுத்தப்பட்ட இது, மருந்து–எதிர்ப்பு திரிபுகள் உட்பட காசநோய் வகைகளை விரைவாகக் கண்டறியும் ஒரு சிறிய மைக்ரோ–PCR அமைப்பாகும். ஒரு மணி நேரத்திற்குள் முடிவுகளை வழங்கும் இது, இந்தியா முழுவதும் பரவலாக பயன்படுத்தப்படுகிறது. காசநோய் இறப்பு அதிகமுள்ள நாட்டில் ஆரம்பகால சிகிச்சைக்கு இது உதவுகிறது. உலகளாவிய காசநோயாளர்களில் 27% பேர் உள்ள இந்தியா, அதன் தேசிய காசநோய் ஒழிப்புத்திட்டத்தின்கீழ், 'Truenat'ஐப் பயன்படுத்துகிறது.

**7. அண்மையில், எந்த நாட்டு அறிவியலாளர்கள் மலிவான பயோடீசலை உற்பத்தி செய்வதற்கான ஊக்கியை உருவாக்கியுள்ளனர்?**

அ. பிரேசில், மலேசியா மற்றும் இந்தோனேசியா



ஆ. ரஷ்யா, ஜெர்மனி மற்றும் பிரான்ஸ்

**இ. இந்தியா, சீனா மற்றும் இங்கிலாந்து ☑**

ஈ. ஜப்பான், கனடா மற்றும் இஸ்ரேல்

★ அஸ்ஸாம், ஒடிசா (இந்தியா), சீனா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த அறிவியலாளர்கள் பயோடீசல் உற்பத்திசெலவைக் கணிசமாக குறைப்பதற்காக நீரெதிர்க்கும் வினையூக்கியை உருவாக்கியுள்ளனர். மெதுவான புதைபடிவ எரிபொருள் உருவாவதைப் போலல்லாமல், உயிரி–எரிபொருள்கள் விரைவாக உயிரியிலிருந்து

தயாரிக்கப்படுகின்றன. முதன்மையாக திரவம் (அ) வாயு வடிவில் உள்ள இவை பொதுவாக போக்குவரத்துக்காக பெட்ரோலிய பொருட்களுடன் கலக்கப்படுகின்றன.

**8. அண்மையில், மாநிலத்தில் உள்ள 1.91 லட்சம் உழவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ₹2 லட்சம் வரையிலான விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வதாக அறிவித்த மாநில அரசு எது?**

அ. பீகார்

**ஆ. ஜார்கண்ட் ☑**

இ. ஹரியானா

ஈ. பஞ்சாப்



★ ஜார்கண்ட் மாநில அரசு 1.91 லட்சத்துக்கும் மேற்பட்ட உழவர்களுக்கு ₹2 லட்சம் வரையிலான விவசாயக்கடன்களை தள்ளுபடி செய்வதாக அறிவித்துள்ளது. 2020 மார்ச் 31 வரை ₹50,000 முதல் 2 லட்சம் ரூபாய் வரை உழவர்கள் பெற்ற கடன்கள் ஒருமுறை தீர்வுமூலம் தள்ளுபடி செய்யப்படும். 2021–22 நிதியாண்டில் ₹50,000 வரையிலான பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இந்த முடிவு விவசாயிகளுக்கு குறிப்பிடத்தக்க நிவாரணத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**9. SIPRI அறிக்கையின்படி, இந்தியாவில் தற்போது எத்தனை அணு வெடியுளைகள் உள்ளன?**

அ. 150

ஆ. 105

**இ. 172 ☑**

ஈ. 127

sipri

STOCKHOLM INTERNATIONAL PEACE RESEARCH INSTITUTE

★ அண்மையில் வெளியிடப்பட்ட SIPRI அணு ஆயுதங்கள் பற்றிய அறிக்கையின்படி, சீன ஆயுதக்கிடங்கில் 500 அணு வெடியுளைகளும், இந்தியாவின் ஆயுதக்கிடங்கில் 172 அணு வெடியுளைகளும், பாகிஸ்தானின் ஆயுதக்கிடங்கில் 170 அணு வெடியுளைகளும் உள்ளன. மேம்பட்ட நீர்மூழ்கிக்கப்பல்கள் மற்றும் நீண்டதூரம் செல்லும் ஏவுகணைகள் மூலம் இந்தியா தனது அணுவாற்றல் திறனை விரிவுபடுத்துகிறது.

**10. காசி விஸ்வநாதர் திருக்கோவில் நடைபாதை திட்டத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?**

அ. ஒடிசா

ஆ. அஸ்ஸாம்

இ. பஞ்சாப்

**ஈ. உத்தர பிரதேசம் ☑**



★ மூன்றாவது முறையாக பதவியேற்ற பிறகு இந்தியப் பிரதமரின் அண்மைய வாரணாசி பயணம் அவரது முதல் பயணமாக அமைந்தது. காசி விஸ்வநாதர் திருக்கோவில் நடைபாதையின் முதல் கட்டத்தை அவர் திறந்து வைத்தார். அதை கங்கைக்கரையுடன் இணைத்து, இந்தியாவின் சனாதன கலாச்சாரத்தை எடுத்துரைத்தார். வாரணாசியின் வரலாற்றுச் சிறப்பு மற்றும் கலாசார செழுமையை பிரதமர் நரேந்தி மோதி புகழ்ந்தார். கால பைரவர் திருக்கோவிலில் வழிபாடு செய்த அவர் கங்கை ஆரத்தியைக் கண்டார்.

**11. அண்மையில், புனிதத்தலங்களின் கொள்ளளவைவிட அதிகமாக பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது எச்சரிக்கைகளை அனுப்பக்கூடிய, 'Crowd Eye' என்ற கருவியை உருவாக்கியுள்ள ஐஐடி எது?**

அ. ஐஐடி ஆமதாபாத் **ஆ. ஐஐடி ரூர்க்கி ☑**

இ. ஐஐடி கான்பூர் ஈ. ஐஐடி பம்பாய்

★ யமுனோத்ரியில் தொடங்கி, சார் தாம் புனிதத்தலங்களில் அதிகரித்து வரும் பக்தர்களின் வருகையை நிர்வகிக்க, 'Crowd Eye' என்ற சாதனத்தை ஐஐடி ரூர்க்கி உருவாக்கியுள்ளது. இந்த சாதனம் நிகழ்நேர கூட்ட கண்காணிப்பை வழங்குகிறது. நிறுவலுக்காக UCOST–க்கு நிதிக்கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ₹60,000–70,000 செலவில் உள்ள இத்திட்டம், காப்புரிமைக்காக காத்திருக்கிறது. எதிர்கால புதுப்பிப்புகளில் கூட்டத்தரவுகளில் பாலின வேறுபாட்டை அறிவதும் உள்ளடக்கும்.

**12. அண்மையில், மக்களவையின் தற்காலிக அவைத்தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. டக்குபதி புரந்தேஸ்வரி

**ஆ. பர்த்ருஹரி மதாப் ☑**

இ. K சுரேஷ்

ஈ. மோகன் சிங்



★ மக்களவையின் இடைக்கால அவைத்தலைவராக பாஜக தலைவரும், ஏழு முறை நாடாளுமன்ற உறுப்பினருமான பர்த்ருஹரி மதாப் நியமிக்கப்பட்டுள்ளார். 18ஆவது மக்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்துவைப்பதும், அவைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை அவைக்கு தலைமைதாங்குவதும் அவரது கடமைகளில் அடங்கும். தற்காலிக சபாநாயகர் பதவி என்பது புதிதாக உருவாக்கப்பட்ட மக்களவையின் ஆரம்பக்கால செயல்பாட்டிற்கு அவசியமான ஒரு தற்காலிக பதவியாகும்.

**13. 2024ஆம் ஆண்டில், எந்த மாநிலத்திலிருந்து தேசிய மகளிர் ஆணையத்திற்கு அதிக புகார்கள் சென்றுள்ளன?**

**அ. உத்தர பிரதேசம் ☑**

ஆ. மத்திய பிரதேசம்

இ. பீகார்

ஈ. ஹரியானா

★ 2024ஆம் ஆண்டில், தேசிய மகளிர் ஆணையம் உத்தர பிரதேசத்திலிருந்து அதிக புகார்களைப் (6,492) பெற்றது. அதைத்தொடர்ந்த இடங்களில் தில்லி (1,119) மற்றும் மகாராஷ்டிரா (764) உள்ளன. மொத்தம் பெறப்பட்ட 12,648 புகார்களில், 3,567 புகார்கள் 'தனமான உரிமை' தொடர்பானவை, 3,213 புகார்கள் குடும்ப வன்முறை மற்றும் 1,963 வரதட்சணை துன்புறுத்தலாகும். குறிப்பிடத்தக்க வன்முறைகள் இருந்தபோதிலும், 6 புகார்கள் மட்டுமே மணிப்பூரில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**14. அண்மையில், பின்லாந்தில் நடந்த பாவோ நூர்மி விளையாட்டுப்போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர் யார்?**

**அ. நீரஜ் சோப்ரா ☑**

ஆ. டோனி கெரானென்

இ. ஆலிவர் ஹெலாண்டர்

ஈ. ஆண்டர்சன் பீட்டர்ஸ்




★ ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா ஜூன்.18 அன்று பின்லாந்தில் நடந்த பாவோ நூர்மி கேம்ஸ்–2024 இல் 85.97 மீ எறிந்து தங்கப்பதக்கத்தை வென்றார். காயம் காரணமாக ஆஸ்ட்ராவா கோல்டன் ஸ்பைக் சந்திப்பைத் தவறவிட்ட பிறகு, இது இவர் பங்குபெறும் மூன்றாவது நிகழ்வாகும். அடுத்த மாதம் பாரிஸ் ஒலிம்பிக்கிற்குத் தயாராகிக் கொண்டிருக்கும் நீரஜ் சோப்ராவின் செயல்திறனை இவ்வெற்றி மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

**15. ஒவ்வோர் ஆண்டும், 'உலக அகதிகள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. 19 ஜூன்

**ஆ. 20 ஜூன் ☑**

இ. 21 ஜூன்

ஈ. 22 ஜூன்




★ அகதிகளின் அவலநிலைபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவர்களை ஒன்றுசேர்ப்பதை ஊக்குவிக்கவுமாக ஆண்டுதோறும் ஜூன்.20 அன்று உலக அகதிகள் நாள் கொண்டாடப்படுகிறது. 2024ஆம் ஆண்டின் கருப்பொருள், "For a World Where Refugees Are Welcomed" என்பதாகும். 1951 அகதிகள் மாநாட்டின் 50ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் 2001இல் நிறுவப்பட்ட இது, சர்வதேச ஒத்துழைப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மோதல், துன்புறுத்தல் மற்றும் வன்முறை காரணமாக அகதிகள் உருவாகிறார்கள்.

**16. அண்மையில், இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தடயவியல் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம் என்ன?**

அ. சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்

**ஆ. குற்றவியல் தடயவியல் உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் ☑**

இ. கல்வி வசதிகளை மேம்படுத்துதல்

ஈ. போக்குவரத்து அமைப்புகளை மேம்படுத்துதல்



★ குற்றவியல் நீதி அமைப்புக்கு உதவும் தடயவியல் உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக தேசிய தடயவியல் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை (NFIES) இந்திய அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. 2024 ஜூன்.19 அன்று, பிரதமர் நரேந்திர மோதி தலைமையிலான நடுவண் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட NFIES, உள்துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது. 2024 ஜூலை.01 முதல் அமலுக்கு வரும் புதிய குற்றவியல் சட்டங்களுக்கு கட்டாய தடயவியல் விசாரணை தேவைப்படுகிறது. தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் கூடுதல் மத்திய தடய அறிவியல் ஆய்வகங்களுக்கான புதிய வளாகங்களை NFIES உள்ளடக்கியுள்ளது.

**17. அண்மையில், யோகா மற்றும் இயற்கை மருத்துவ ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சில், ஸ்வியாசாவுடன் இணைந்து, "விண்வெளிக்கான யோகா" என்ற மாநாட்டை எந்த இடத்தில் ஏற்பாடு செய்தது?**

அ. புது தில்லி

ஆ. ஹைதராபாத்

இ. சென்னை

**ஈ. பெங்களூரு ☑**



★ யோகா & இயற்கை மருத்துவ ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சிலும் ஸ்வியாசா பல்கலைக்கழகமும் இணைந்து பெங்களூருவில் உள்ள எஸ்–வியாசா பல்கலைக்கழகத்தில் 2024ஆம் ஆண்டுக்கான சர்வதேச யோகா நாளிற்காக "விண்வெளிக்கான யோகா" மாநாட்டை "தன் மற்றும் சமூகத்திற்கான யோகா" என்ற கருப்பொருளில் ஏற்பாடு செய்தன. இந்நிகழ்வில் இந்திய நிறுவனங்களின் முக்கிய உரைகள் இடம்பெற்றது மற்றும் உலகளாவிய போட்டிகள் & புதுமையான சவால்கள் உட்பட யோகாவை ஊக்குவிக்கும் பல்வேறு செயல்பாடுகளை முன்னிலைப்படுத்தியது. நலமான சமுதாயத்தை வளர்ப்பதில் யோகாவின் பங்கு மற்றும் விண்வெளி வீரர்களுக்கான அதன் சாத்தியமான பயன்பாடுகளை இம்மாநாடு வலியுறுத்தியது.

**18. அண்மையில், 'நிலையான வளர்ச்சி அறிக்கை – 2024' அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக வானிலை அமைப்பு (WMO)

ஆ. இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (IUCN)

இ. உலக வங்கி

**ஈ. நிலையான வளர்ச்சிக்கானத் தீர்வுகள் வழங்கும் வலையமைப்பு (SDSN) ☑**

★ 2024 – நிலையான வளர்ச்சி அறிக்கையானது வறுமை மற்றும் பட்டினி நிலையைக் குறைத்தல்போன்ற 2015 SDG இலக்குகளை அடைவதில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் காணப்படுவதாக வெளிப்படுத்துகிறது. நிலையான வளர்ச்சிக்கானத் தீர்வுகள் வழங்கும் வலையமைப்பில் வெளியிடப்பட்ட, 2030ஆம் ஆண்டிற்கான இலக்குகளில் 16% மட்டுமே நிறைவேறியுள்ளது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

★ எதிர்கால ஐநா உச்சிமாநாட்டிற்கு முன் வெளியிடப்பட்டுள்ள இது, முக்கிய ஐநா சீர்திருத்தங்களை முன்மொழிகிறது மற்றும் ஐநா அடிப்படையிலான பன்முகத்தன்மைக்கான குறியீட்டை வெளியிட்டுள்ளது. பின்லாந்து, சுவீடன் மற்றும் டென்மார்க் ஆகியவை இத்தரவரிசையில் முன்னணியில் உள்ளன.

**19. '2024 – ஆற்றல் மாற்றக் குறியீட்டில்' இந்தியாவின் தரநிலை என்ன?**

**அ. 63ஆவது ☑**

ஆ. 65ஆவது

இ. 73ஆவது

ஈ. 75ஆவது




★ உலக பொருளாதார மன்றத்தின் 2024 – உலகளாவிய ஆற்றல் மாற்றக் குறியீட்டில் இந்தியா 63ஆவது இடத்தில் உள்ளது. நிலையான, பாதுகாப்பான மற்றும் அணுகக்கூடிய ஆற்றல் அமைப்புகளை நோக்கிய உலகளாவிய மாற்றத்தை இந்தக் குறியீடு கண்காணிக்கிறது. தரவரிசையில் சுவீடன் முதலிடத்திலும், டென்மார்க், பின்லாந்து, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. பிரேசில் மற்றும் சீனாபோன்ற வளர்ந்துவரும் பொருளாதாரங்களின் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தபோதிலும், 83% நாடுகள் பாதுகாப்பு, சமபங்கு அல்லது நிலைத்தன்மையில் பின்வாங்கியுள்ளன. ஏற்றத்தாழ்வுகள் இருந்தபோதிலும், முன்னேறிய மற்றும் வளரும் பொருளாதாரங்களுக்கு இடையிலான இடைவெளி குறைந்துள்ளது.

**20. '5G நுண்ணறிவு கிராமம்' என்ற முன்னெடுப்பின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. நகர்ப்புற இணைப்பை மேம்படுத்துதல்

ஆ. செயற்கைக்கோள் தொடர்புகளை மேம்படுத்துதல்

**இ. 5G தொழில்நுட்பம்மூலம் கிராமப்புற சமூகங்களை மேம்படுத்துதல் ☑**

ஈ. புதிய சமூக ஊடக தளங்களை உருவாக்குதல்




★ தொலைத்தொடர்புத்துறையானது தொலைத்தொடர்பு துறையில் புதுமைகளை உருவாக்கும் நோக்கோடு இரண்டு முன்முயற்சிகளை அறிவித்துள்ளது. அவை 5G நுண்ணறிவு கிராமம் மற்றும் குவாண்டம் என்க்ரிப்ஷன் அல்காரிதம் ஆகும் . இந்தத் திட்டங்கள் சமமான தொழில்நுட்ப முன்னேற்றத்திற்காக 5G தொழில்நுட்பத்தைப் (Ultra–Reliable Low–Latency Communication (URLLC) மற்றும் massive Machine Type Communication (mMTC)) பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

★ massive Machine Type Communication (mMTC)மூலம் கிராமப்புற மேம்பாட்டில் கவனம் செலுத்தப்படுகின்றது. இந்த முயற்சிகள் விவசாயம், கல்வி, சுகாதாரம், நிர்வாகம் மற்றும் நிலைத்தன்மைபோன்ற முக்கியமான பகுதிகளை குறிவைத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 5G இணைப்பின் நன்மைகளை சென்றடையச் செய்கிறது.

**21. இ–ஷ்ரம் வலைத்தளத்துடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

**அ. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

ஆ. வேளாண்மை அமைச்சகம்

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

★ ஜெனீவாவில் நடைபெற்ற 112ஆவது பன்னாட்டு தொழிலாளர் மாநாட்டில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் செயலர் தலைமையிலான இந்திய பிரதிநிதிகள் இ–ஷ்ரம் வலைத்தளத்தை சிறப்பித்துப் பேசினார். 2021இல் தொடங்கப்பட்ட இந்த வலைத்தளம், நானூறு தொழில்களில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்களைப் பதிவுசெய்து, விரிவான தேசிய தரவுத்தளத்தை வழங்குகிறது. முழுமையாக ஆதார் சரிபார்ப்பு செய்யப்பட்ட இது, சமூக பாதுகாப்புத் திட்டங்களை அணுகுவதை எளிதாக்குகிறது.

**22. INS சுனைனா சார்ந்த வகை எது?**



அ. கல்வாரி வகுப்பு

**ஆ. சரயு வகுப்பு ☑**

இ. அரிஹந்த் வகுப்பு

ஈ. மேற்கூறியவை எதுவுமில்லை

★ கொச்சியில் பணியில் சேர்க்கப்பட்ட மற்றும் தெற்குக் கடற்படைக் கட்டளையின்கீழ் இயங்கும் சரயு–வகுப்பு கடல்சார் ரோந்துக்கப்பலான INS சுனைனா, 2024 ஜூன்.15 அன்று சீஷெல்ஸின் விக்டோரியா துறைமுகத்துக்குச் சென்றது. இந்த விஜயம், இந்திய கடற்படைக்கும் சீஷெல்ஸ் கூட்டுறவுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தால் கட்டப்பட்ட INS சுனைனா கடலோர ரோந்துகள், கடல்சார் கண்காணிப்பு ஆகியவற்றை ஆதரிக்கிறது.

**23. வாதவன் துறைமுகம் கட்டப்படவுள்ள மாநிலம் எது?**



அ. குஜராத்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. கேரளா

ஈ. ஒடிஸா

★ பிரதமர் தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், மகாராஷ்டிர மாநிலத்தின் தகானு அருகே வாதவனில் பெரிய துறைமுகம் ஒன்றை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையம் மற்றும் மகாராஷ்டிர மாநிலம் கடல்சார் வாரியம் இணைந்து இந்தத் துறைமுகத்தை அமைக்கவுள்ளன. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ₹76,220 கோடியாகும். இந்தத் துறைமுகத்தில் 1000 மீட்டர் நீளமுள்ள ஒன்பது சரக்குப் பெட்டக முனையங்கள், கடலோர பெட்டக முனையம் உட்பட நான்கு பல்நோக்கு முனையங்கள் அமைக்கப்படும்.

★ இந்தத் துறைமுகத்தில் திட்டம் ஆண்டுக்கு 298 மில்லியன் மெட்ரிக் டன் சரக்கைக் கையாளும் வகையில் அமைக்கப்பட உள்ளது. பிரதமரின் விரைவு சக்தி பெருந்திட்ட நோக்கத்துடன் இணைந்த இத்திட்டம், பொருளாதார நடவடிக்கைகளுக்கு வலுசேர்க்கும். இந்தத் துறைமுகம்மூலம் சுமார் 12 லட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

**24. Mars Atmosphere and Volatile EvolutioN (MAVEN) திட்டத்தைத் தொடங்கிய விண்வெளி அமைப்பு எது?**

அ. NASA ☑

ஆ. ISRO

இ. JAXA

ஈ. CNSA



★ கடந்த 2013இல் ஏவப்பட்ட NASAஇன் MAVEN சுற்றுக்கலன், அண்மையில் செவ்வாய் கோளின் வளிமண்டலத்தில் திகைப்பூட்டும் ஊதா நிற துருவ மின்னொளிகளை கண்டறிந்தது. MAVENஇன் முதன்மை நோக்கம் செவ்வாய் கோளின் மேல் வளிமண்டலத்தை ஆராய்வது மற்றும் சூரிய செயல்பாடு அதன் வளிமண்டலத்தின் பெரும்பகுதியை எவ்வாறு அகற்றியது என்பதைப் புரிந்துகொள்வது ஆகும். நுண்ணுயிர் வாழ்விற்கான அதன் கடந்தகால ஆற்றலைப் புரிந்துகொள்வதில் இது முக்கியமான ஆய்வுகளை மேற்கொள்கிறது. வாழக்கூடிய நிலையிலிருந்து செவ்வாய் அதன் தற்போதைய நிலைக்கு எவ்வாறு மாறியது என்ற மாற்றத்தை வெளிப்படுத்துவதை இந்த ஆராய்ச்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2021இல் காற்று மாசால் 81 லட்சம் பேர் உயிரிழப்பு: இந்தியாவில் மட்டும் 21 லட்சம்.**

உலக அளவில் கடந்த 2021ஆம் ஆண்டின் மொத்த உயிரிழப்பில் 12%ஆன 81 லட்சம் பேர் காற்று மாசால் உயிரிழந்து இருப்பது ஐநாஇன் 'UNICEF' அமைப்பின் ஆய்வில் தெரியவந்துள்ளது. இதில், உலகின் மிகப்பெரிய மக்கள்தொகைக் கொண்ட இந்தியாவில் 21 லட்சம் பேரும், சீனாவில் 23 லட்சம் பேரும் காற்று மாசால் உயிரிழந்துள்ளனர்.

---

**2. வெம்பக்கோட்டை அகழாய்வில் சுடுமண் உருவ பொம்மை.**

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே விஜயகரிசல்குளம் ஊராட்சிக்குட்பட்ட மேட்டுக்காட்டில் நடைபெற்ற அகழாய்வின்போது, சுடுமண் உருவ பொம்மை, கண்ணாடி மணிகள், பழங்கால செங்கற்கள் ஆகியவை கண்டு எடுக்கப்பட்டன. வெம்பக்கோட்டை அருகே 3–ஆம் கட்ட அகழாய்வுப் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக மூன்று குழிகள் தோண்டப்பட்டு, அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், இரண்டாம் நாள் அகழாய்வின்போது, உடைந்த நிலையில் சுடுமண் உருவ பொம்மை, இருபதுக்கும் மேற்பட்ட கண்ணாடி மணிகள், பழங்கால செங்கற்கள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.

---

# IMPORTANT LINKS

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 2024 – பன்னாட்டு யோகா நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Yoga for Self and Society ☑

ஆ. Yoga is way of life

இ. Yoga for humanity

ஈ. Yoga for Wellness

★ 2024 – பன்னாட்டு யோகா நாளுக்கானக்கருப்பொருள், "Yoga for Self and Society" என்பதாகும். இது ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான அதன் முழுமையான நன்மைகளை விளக்கும் விதமாக அமைந்துள்ளது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோதியின் ஆலோசனையின் பேரில், 2014ஆம் ஆண்டு ஐநா அவையால் நிறுவப்பட்ட சர்வதேச யோகா நாள் ஆண்டுதோறும் ஜூன்.21ஆம் தேதியன்று கோடைகால சங்கிராந்தியுடன் இணைந்து கொண்டாடப்படுகிறது. உலகெங்கிலும் உள்ள தனிநபர்கள் மற்றும் சமூகங்களில் சமநிலை மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் யோகாவின் மாற்றும் ஆற்றல் மற்றும் அதன் பங்கை இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது.

**2. சுவாமி விவேகானந்தர் நிஷக்த் ஸ்வவலம்பன் புரோட்சகான் திட்டம் என்பது கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும்?**



அ. ஜார்கண்ட் ☑

ஆ. ஒடிசா

இ. பீகார்

ஈ. ஹரியானா

★ ஜார்கண்ட் மாநிலம் குந்தி மாவட்டத்தில், அரிவாள் செல் இரத்தசோகை உள்ள நபர்களுக்கு சுவாமி விவேகானந்தர் நிஷக்த் ஸ்வவலம்பன் புரோட்சகான் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ₹1,000 உதவித்தொகை வழங்கப்படவுள்ளது. இதன் தொடக்கமாக, மாவட்ட நிர்வாகம் பல்வேறு தொகுதிகளில் இருந்து ஒன்பது பயனாளிகளை அடையாளம் கண்டுள்ளது. உதவித்தொகை தகுதியானது மாற்றுத்திறனாளிச் சான்றிதழை அடிப்படையாகக்கொண்டதாகும். அரிவாள் செல் இரத்தசோகையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இது பயனளிக்கிறது.

**3. அண்மையில், லால் பகதூர் சாஸ்திரி பன்னாட்டு விமான நிலையத்திற்கான ₹2869.65 கோடி மதிப்பிலான மேம்பாட்டுத் திட்டத்துக்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இது எந்த நகரத்தில் அமைந்துள்ளது?**



அ. வாரணாசி ☑

ஆ. அயோத்தி

இ. இந்தூர்

ஈ. போபால்

★ பிரதமர் தலைமையில் நடைபெற்ற நடுவண் அமைச்சரவைக்கூட்டத்தில், வாரணாசியில் அமைந்துள்ள லால் பகதூர் சாஸ்திரி பன்னாட்டு விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கான இந்திய விமான நிலைய ஆணையத்தின் முன் மொழிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. விமான நிலையத்தின் பயணிகள் கையாளும் திறனை ஆண்டுக்கு 39 லட்சத்திலிருந்து 99 லட்சமாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான செலவு ₹2869.65 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 75,000 சதுர மீட்டர் பரப்பளவைக்கொண்ட புதிய முனையக் கட்டடம் ஒரே நேரத்தில் 5000 பயணிகளைக் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட உள்ளது.

★ இந்தத் திட்டத்தில் ஓடுபாதையை நீட்டிப்பது உள்ளிட்ட பணிகளும் அடங்கும். சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதிசெய்யும் முதன்மை நோக்கத்துடன் வாரணாசி விமான நிலையம் பசுமை விமான நிலையமாக கட்டப்படும்.

**4. அண்மையில், இந்தியாவின் சுகாதார அமைப்பின் தயார்நிலையை மேம்படுத்துவதற்காக ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) எவ்வளவு நிதியுதவி அளித்துள்ளது?**

அ. $140 மில்லியன்

ஆ. $150 மில்லியன்


இ. $160 மில்லியன்

**ஈ. $170 மில்லியன் ☑**

★ இந்தியாவின் சுகாதார அமைப்பின் தயார்நிலை மற்றும் எதிர்கால தொற்றுநோய்களுக்கான அதன் உடனடி செயல் திறன்களை மேம்படுத்துவதற்காக ஆசிய வளர்ச்சி வங்கி இந்தியாவிற்கு கணிசமாக $170 மில்லியன் அமெரிக்க டாலர்களை (தோராயமாக ₹1,418 கோடி) வழங்கியுள்ளது. இந்தியாவின் தேசிய சுகாதாரக் கொள்கை – 2017உடன் இணைந்து, கொள்கை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள இந்த நிதியுதவி, உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பை அடைவதற்கு அத்தியாவசியமான நிர்வாகத்தையும் கொள்கை கட்டமைப்பையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நகரங்கள், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தொற்றுநோய் அச்சுறுத்தல்களுக்கு விரைவான பதிலளிப்புகளைச் செயல்படுத்துவது, ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட ஆய்வகங்கள்மூலம் நாடு முழுவதும் நோய் கண்காணிப்பு வலையமைப்புகளை வலுப்படுத்துவது ஆகியவை முக்கிய முயற்சிகளில் அடங்கும்.

**5. "*Indiconema*" என்றால் என்ன?**

**அ. *Gomphonemoid diatom* இன் புதிய இனம் ☑**



ஆ. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சிலந்தி இனம்

இ. அணுவாற்றல் திறனுடைய நீர்மூழ்கிக்கப்பல்

ஈ. பண்டைய நீர்ப்பாசன நுட்பம்

★ இந்தியாவின் கிழக்குத்தொடர்ச்சி மலைகளின் தூயநீர் ஆறுகளில், '*Indiconema*' என்ற புதிய '*Gomphonemoid diatom*' இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். '*Gomphonemoid diatom*'கள் ஒளிச்சேர்க்கை, நீர்வாழ் உணவுச் சங்கிலி மற்றும் நீர்நலத்தின் உணர்திறன் குறிகாட்டிகளுக்கு அவசியமான ஓர் ஒற்றைச் செல் உயிரினங்களாகும். '*Indiconema*', இருதுருவங்களிலும் துளைப்புலங்களைக் கொண்டிருப்பதன்மூலம் மற்றவற்றிலிருந்து வேறுபட்டு உள்ளது; இவை மேற்குத்தொடர்ச்சி மலைகளிலும் காணப்படுகிறது. இது கிழக்கு ஆப்பிரிக்க இனமான *Afrocymbella* உடன் உருவவியல் ரீதியாக தொடர்புடையது.

**6. AIமூலம் சாலைப்பாதுகாப்பை மேம்படுத்த இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நிறுவனம் எது?**

அ. IIT, கான்பூர்



**ஆ. IIIT, தில்லி ☑**

இ. IIM, ஆமதாபாத்

ஈ. IIT, பம்பாய்

★ இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது (NHAI) இந்திரபிரஸ்தா தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துடனான (IIIT தில்லி) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இத்திட்டம் தோராயமாக 25,000 கிமீ நெடுஞ்சாலைகளில் செயல்படுத்தப்படும். தேசிய நெடுஞ்சாலைகளில் சாலைக்குறியீடுகளின் கிடைப்பை மேம்படுத்துவதற்கு செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான தீர்வுகளைப் பயன்படுத்துவது மற்றும் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட நெடுஞ்சாலைகளில் சாலை அடையாள நிலைமைகள்பற்றிய படங்கள் மற்றும் தரவுகளை சேகரிக்க ஐஐஐடி தில்லி ஆய்வுகளை மேற்கொள்ளும்.

**7. முட்கல் கோட்டை அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

இ. மகாராஷ்டிரா

**ஈ. கர்நாடகா ☑**

★ கர்நாடக மாநிலத்தில் உள்ள முட்கல் கோட்டை இந்தியாவின் வளமான வரலாற்று மற்றும் கலாசார பாரம்பரியத்தை காட்சிப்படுத்துகிறது. சாளுக்கியர், ராஷ்டிரகூடர், பாமினி சுல்தான்கள் மற்றும் விஜயநகரப்பேரரசு ஆகியவற்றுடன் தொடர்புடைய இந்தக் கோட்டை 1000 ஆண்டுகால வரலாற்றைக்கொண்டுள்ளது. துங்கபத்ரை மற்றும் கிருஷ்ணா ஆறுகளுக்கு இடையே வளமான, கனிமவளம் மிக்க ரெய்ச்சூர் ஆற்றிடை பகுதியில் அமைந்திருந்ததால், விஜயநகரப் பேரரசுக்கும் அடில் ஷாஹி சுல்தானகத்துக்கும் இடையே இது ஓர் உத்திசார் போர்க்களமாக விளங்கியது.

**8. அண்மையில், புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயான மனித–ஆப்பிரிக்க உறக்கநோயின் (African trypanosomiasis) காம்பியன்ஸ் வடிவத்தை அகற்றுவதில் நடப்பு 2024ஆம் ஆண்டில் முதலாவதாகவும் மொத்தத்தில் 51ஆவதாகவும் ஆன நாடு எது?**




அ. நைஜீரியா

**ஆ. சாட் ☑**

இ. கென்யா

ஈ. தான்சானியா

★ 2024ஆம் ஆண்டில், 'உறக்க நோய்' என்றும் அழைக்கப்படும் புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயை மனித ஆப்பிரிக்க உறக்க நோயின் காம்பியன் வடிவத்தை முற்றாக ஒழித்த முதல் நாடு மற்றும் உலகளவில் 51ஆவது நாடு என சாட் ஆனது. செட்ஸீ ஈக்களால் பரவும் புரோட்டோசோவான் ஒட்டுண்ணிகளால் இந்நோய் ஏற்படுகிறது. இது துணை–சஹாரா ஆப்பிரிக்காவில் முதன்மையாகப் பரவுகிறது. 24 மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்க நாடுகளில் காணப்படும் காம்பியன் வடிவம் நாள்பட்ட நோயை ஏற்படுத்துகிறது. அதேசமயம் 13 கிழக்கு மற்றும் தென்னாப்பிரிக்க நாடுகளில் காணப்படும் ரோடீசியன் வடிவம் கடுமையான நோயை ஏற்படுத்துகிறது.

**9. அண்மையில், கள்ளச்சாராய துயரச்சம்பவம் நிகழ்ந்த மாநிலம் எது?**



**அ. தமிழ்நாடு ☑**

ஆ. பீகார்

இ. குஜராத்

ஈ. இராஜஸ்தான்

★ தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், கள்ளச்சாராயத்தை உட்கொண்டதால் குறைந்தது 34 பேர் இறந்தனர்; சுமார் 100 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அலாஸ்கன் ஹூச்சினோ பழங்குடியினரிடமிருந்து பெறப்பட்ட ஹூச் ஆனது தரக்கட்டுப்பாடு ஏதுமில்லாமல் கச்சா அமைப்புகளில் தயாரிக்கப்படுகிறது. நொதித்தல் மற்றும் வடிகட்டுதல்மூலம் தயாரிக்கப்படுகிற இதில், பெரும்பாலும் நச்சுநிறை மெத்தனால் உள்ளது. முறையற்ற வடிகட்டுதல் காரணமாக மெத்தனால் செறிவூட்டப்பெற்று இது மிகவும் ஆபத்தானதாக மாறுகிறது. சட்டவிரோத மது அருந்துவதால் ஏற்படும் உயிரிழப்பு அபாயத்தை இந்தச் சம்பவம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

**10. கோலார் தங்க வயல் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. ஒடிசா ஆ. அஸ்ஸாம்

இ. பஞ்சாப் **ஈ. கர்நாடகா ☑**

★ கோலார் தங்க வயல்களில் (KGF) தங்கச்சுரங்கத்தை புதுப்பிக்கும் நடுவண் அரசின் திட்டத்திற்கு கர்நாடக மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கோலார் மாவட்டத்தில் பெங்களூரில் இருந்து 100 கிமீ தொலைவில் அமைந்துள்ள KGF சுரங்கங்கள், 1972ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பொதுத்துறை நிறுவனமான பாரத் கோல்ட் மைன்ஸ் லிமிடெட் (BGML) மூலம் இயக்கப்படும் உலகின் மிக ஆழமான சுரங்கங்களில் ஒன்றாகும்.

**11. பர்தா வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. இராஜஸ்தான்

**ஆ. குஜராத் ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. ஒடிசா



★ அண்மையில் கிர் காட்டிலிருந்து ஆறு ஆசிய சிங்கங்கள் பர்தா வனவிலங்கு சரணாலயத்திற்கு இடம்பெயர்ந்தன. அழிவின் விலிம்பிலுள்ள இந்தச் சிங்கங்கள், ஆப்பிரிக்க சிங்கங்களைவிட சற்று சிறியவை. IUCNஇன் அழிந்துவரும் உயிரின பட்டியலில் உள்ள இவை, CITESஇன் பின்னிணைப்பு–I மற்றும் இந்தியாவின் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972 ஆகியவற்றின்கீழ் பாதுகாக்கப்படுகின்றன. குஜராத்தின் சௌராஷ்டிரா பகுதியில் உள்ள கிர் காடுகள் மற்றும் பிற பாதுகாக்கப்பட்ட பகுதிகள் அவற்றின் பிரத்யேக வாழ்விடங்களாகும்.

**12. 2024 – 'உலக முதலீட்டு அறிக்கை'யை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. UNCTAD ☑**

ஆ. UNDP

இ. UNEP

ஈ. UNICEF

★ UNCTADஇன் 2024 – உலக முதலீட்டு அறிக்கையானது 2023ஆம் ஆண்டில் அயல்நாட்டு நேரடி முதலீட்டில் (FDI) 2% உலகளாவிய சரிவை வெளிப்படுத்துகிறது. இந்தியாவிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. நிலையான நிதி தயாரிப்புகள்மூலம் நிலையான வளர்ச்சி இலக்கு முதலீடுகளுக்கான நிதியும் சரிவு கண்டுள்ளது. 1964இல் நிறுவப்பட்ட UNCTAD ஆனது வளரும் நாடுகளுக்கு உலகளாவிய பொருளாதாரத்தின் நன்மைகளை சமமாக அணுக உதவுகிறது.

**13. 2003–2024–க்கு இடையில், 'ஹிந்து குஷ் ஹிமாலயா' என்ற பனி அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. UNEP

**ஆ. ஒருங்கிணைந்த மலை வளர்ச்சிக்கான சர்வதேச மையம் (ICIMOD) ☑**

இ. கிரீன்பீஸ் இந்தியா

ஈ. உலக வங்கி



★ ICIMODஇன் 2024 – ஹிந்து குஷ் ஹிமாலயா ஸ்னோ அப்டேட் அறிக்கையானது இந்தியாவின் கங்கையாற்றுப் படுகை, பிரம்மபுத்திரா மற்றும் சிந்துநதிப் படுகையில் குறைந்த பனிப்பொழிவு பதிவாகியுள்ளதாகக் கூறியுள்ளது. HKH பகுதி 8 நாடுகளில் பரவியுள்ளது மற்றும் ஆசியாவின் முதன்மையான ஆறு அமைப்புகளுக்கு முக்கியமானதான இது, 1.9 பில்லியன் மக்களை ஆதரிக்கிறது. இது பரந்த பனி மற்றும் பனிப்பாறை வளங்களைக் கொண்டுள்ளது. இது சுற்றுச்சூழல் சேவைகள் மற்றும் நீரோட்டத்தின் கீழுள்ள சமூகங்களுக்கு மிகவும் அவசியமானதாக விளங்குகிறது. இது தெற்கு மற்றும் கிழக்காசியா முழுவதும் நீர் விநியோகத்திற்கு மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

**14. அண்மையில், 2027–க்குள் மாநிலத்தில் இருந்து மலேரியாவை ஒழிக்க தீவிர பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ள மாநில அரசு எது?**



அ. குஜராத்

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. ஹரியானா

ஈ. பீகார்

★ 2027ஆம் ஆண்டிற்குள் மலேரியாவை ஒழிப்பதற்கான பிரச்சாரத்தை உத்தர பிரதேச மாநிலம் தொடங்கியுள்ளது. தேசிய ஏந்திகள்வழி பரவும் நோய்கள் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் முயற்சிகளை தீவிரப்படுத்துகிறது. இந்த ஆண்டு 771 பாதிப்புகள் பதிவாகியுள்ள நிலையில், இந்த முயற்சியானது முழுமையான விசாரணை, சிகிச்சை மற்றும் சமூகக் கல்வி ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. பருவமழைக்கு முன்னதாக மேம்படுத்தப்பட்ட ஏந்திகள்வழி பரவும் நோய்கள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் கொசு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ பிளாஸ்மோடியம் ஒட்டுண்ணிகளால் ஏற்படும் மலேரியா, உடல்நலத்திற்கு அச்சுறுத்தல் விளைவிக்கிறது. ஐந்து ஒட்டுண்ணி இனங்களில் P. ஃபால்சிபாரம் மற்றும் P. வைவாக்ஸ் ஆகியவை அதிக இடர்களை ஏற்படுத்துகின்றன.

**15. "ஒரு குடும்பம், ஓர் அடையாளம்" திட்டத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?**



அ. குஜராத்


**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. ஹரியானா

ஈ. பீகார்

★ உத்தர பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், அரசின் சலுகைகள் மற்றும் வேலைவாய்ப்புகளைச் சீர் அமைக்கும் நோக்கில், 'குடும்ப அடையாள அட்டைகளை' விரைவாக செயல்படுத்த வலியுறுத்தினார். "ஒரு குடும்பம், ஓர் அடையாளம்" திட்டத்தின்கீழ், ஒவ்வொரு குடும்பமும் திட்ட நிர்வாகத்தை மேம்படுத்தவும் வெளிப்படையான செயல்பாடுகளை உறுதிப்படுத்தவும் ஒரு தனிப்பட்ட அடையாள எண்ணைப் பெறும். தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் அணுகலுக்காக குடும்ப அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி சுமார் 15.07 கோடி மக்கள் இதனால் பயனடைகின்றனர்.

**16. பாதுகாப்பின்போது ஏற்படும் கடும் தீக்காயங்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக அதன் வகையில் முதலாவதான தோல் வங்கியைத் தொடங்கியுள்ள ஆயுதப்படை எது?**



அ. இந்திய விமானப்படை

ஆ. இந்திய கடற்படை

**இ. இந்திய இராணுவம் ☑**

ஈ. தேசிய பாதுகாப்புப் படை

★ இந்திய இராணுவம் ஜூன்.18 அன்று ராணுவ மருத்துவமனையில் (ஆராய்ச்சி மற்றும் பரிந்துரை) அதிநவீன தோல் வங்கியைத் திறந்து வைத்தது. ஆயுதப்படை மருத்துவ சேவைகளில் முதன்முதலாக தொடங்கப்பட்டுள்ள இந்த வசதி, ஆயுதப்படை வீரர்கள் மற்றும் குடும்பங்களுக்கு ஏற்படும் கடும் தீக்காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் கவனம் செலுத்துகிறது. இது தீவிபத்துகள் மற்றும் மின்விபத்துக்கள் ஆகியவற்றால் ஏற்படும் காயங்களை நிவர்த்திசெய்கிறது. தோல் வங்கியானது தோல் ஒட்டலைச் சேகரித்தல், பதப்படுத்துதல், சேமித்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றை மையப்படுத்துகிறது.


**17. அண்மையில், கீழ்க்காணும் எந்தக் கோளில் ஆற்றல் சமநிலையின்மை கண்டறியப்பட்டது?**

அ. வெள்ளி

**ஆ. சனி ☑**

இ. செவ்வாய்

ஈ. வியாழன்



★ ஹூஸ்டன் பல்கலை ஆராய்ச்சியாளர்கள் காசினி ஆய்வின் தரவுகளைப் பயன்படுத்தி சனிக்கோளில் குறிப்பிடத்தக்க பருவகால ஆற்றல் சமநிலையின்மையைக் கண்டறிந்தனர். இந்தக் கண்டுபிடிப்பு வாயுக்கோளான சனிக்கோளின் காலநிலை மற்றும் கோள் பரிணாம வளர்ச்சியின் தற்போதைய மாதிரிகளைச் சவால் செய்கிறது. சிலூ வாங்கின் இந்தக் கண்டுபிடிப்பு சனியின் காலநிலையில் உள்வெப்பத்தின் தாக்கத்தை எடுத்துக்காட்டுகிறது மற்றும் நமது சூரிய மண்டலத்தில் கோள் மற்றும் வளிமண்டல அறிவியல் பற்றிய புரிதலை மறுவடிவமைப்பு செய்கிறது.

**18. செந்தலைக்கழுகுகளுக்கான (Asian King Vultures) உலகின் முதல் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையத்தை நிறுவியுள்ள மாநிலம் எது?**

அ. குஜராத்

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. ஹரியானா

ஈ. பீகார்



★ உத்தர பிரதேச மாநிலத்தின் மகாராஜ்கஞ்ச் மாவட்டத்தில் செந்தலைக்கழுகுகளுக்கான உலகின் முதல் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையம் நிறுவப்பட்டுள்ளது. ஜடாயு பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையம் எனப் பெயர் சூட்டப்பட்ட இது, 2007ஆம் ஆண்டு முதல் அழிவின் விளிம்பிலுள்ள உயிரினங்களுக்கானப் பட்டியலில் உள்ள இவற்றை உயிர்ப்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வகை கழுகுகள் வாழ்விட இழப்பு மற்றும் டிக்ளோஃபெனாக் நஞ்சு ஆகியவற்றால் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. கழுகு இணைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அவற்றின் உயிர்வாழ்வை உறுதிப்படுத்தவும் இது நோக்கம் கொண்டுள்ளது.

**19. அண்மையில், 2024 – 'புளூ பிளானட்' பரிசை வென்ற அரசுகளுக்கிடையேயான அமைப்பு எது?**

**அ. பல்லுயிர் & சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகள் மீதான அரசுகளுக்கிடையேயான தளம் (IPBES) ☑**

ஆ. தட்பவெப்பநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கிடையேயான குழு (IPCC)

இ. உடல்நலம் மற்றும் மாசுபாட்டிற்கான உலகளாவிய கூட்டணி (GAHP)

ஈ. மேற்கூறிய எதுவும் இல்லை

★ பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகள் மீதான அரசுகளுக்கிடையேயான தளம் (IPBES), பல்லுயிர், சுற்றுச்சூழல் சேவைகள் மற்றும் மக்களுக்கு இயற்கையின் பங்களிப்புகள் ஆகியவற்றில் உலகளாவிய அதிகாரமாக விளங்கும் அதன் பங்கிற்காக, 2024 – 'நீலக்கோள்' பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

★ ஜப்பானின் அசாகி கிளாஸ் அறக்கட்டளையால் கடந்த 1992இல் நிறுவப்பட்ட இந்த மதிப்புமிக்க விருது, உலகளாவிய சுற்றுச்சூழல் சவால்களைத் தீர்ப்பதில் அறிவியல் பங்களிப்புகளை அங்கீகரிக்கிறது. IPBES, லண்டன் பல்கலைக்கழக கல்லூரியைச்சேர்ந்த இராபர்ட் கோஸ்டான்சாவுடன் இவ்விருதை பகிர்ந்துகொள்கிறது.

**20. அண்மையில் முதலாவது தேசிய கூட்டு உற்பத்தி கருத்தரங்கத்தை நடத்திய அமைச்சகம் ஏது?**

**அ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஆ. உள்துறை அமைச்சகம்

இ. பாதுகாப்பு அமைச்சகம்

ஈ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

★ மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) முதல் தேசிய கூட்டு உற்பத்தி கருத்தரங்கத்தை (NAMS) நடத்தியது. இது அதிநவீன உற்பத்திக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை வலியுறுத்தும் விதமாக உள்ளது. MeitY செயலர் S கிருஷ்ணன் ஒரு கூட்டு உற்பத்தி அறிக்கையை வெளியிட்டார் மற்றும் உள்நாட்டு கூட்டு உற்பத்தி இயந்திரத்தை வெளியிட்டார். கடந்த 2022ஆம் ஆண்டின் கூட்டு உற்பத்திக்கான தேசிய உத்தியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட, இந்தியாவின் கூட்டு உற்பத்தி சுற்றுச்சூழலமைப்பை இக்கருத்தரங்கம் முன்னிலைப்படுத்தியது.

**21. அண்மையில், 'ஹெமிஸ் திருவிழா' நடைபெற்ற மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

**அ. லடாக் ☑**

ஆ. அஸ்ஸாம்

இ. மணிப்பூர்

ஈ. லட்சத்தீவு



★ திபெத்திய பௌத்தத்தைக் கொண்டாடும் ஹெமிஸ் திருவிழா, இந்தியாவில் லடாக்கில் ஆண்டுதோறும் நடைபெறும் ஒரு திருவிழாவாகும். 2024ஆம் ஆண்டில், இது ஜூன் 16 மற்றும் 17ஆம் தேதிகளில் கொண்டாடப்பட்டது. ஹெமிஸ் செச்சு என்று அழைக்கப்படும் இது குரு பத்மசாம்பவாவின் பிறந்தநாளைக் கொண்டாடுகிறது. 2 நாள் நடைபெறும் இந்நிகழ்வு, லடாக்கின் மிகப்பெரிய பௌத்த மடாலயமான ஹெமிஸ் மடாலயத்தை, கண்கவர் வண்ணங்கள், இசை மற்றும் ஆன்மீக ஆற்றலால் நிரப்புகிறது. இது ஒரு குறிப்பிடத்தக்க கலாச்சார கொண்டாட்டமாக பார்க்கப்படுகிறது.

**22. ஃபயர் டிராகன் – 480 என்பது கீழ்க்காணும் எந்த நாட்டின் தந்திரோபாய எறிகணையாகும்?**

அ. இந்தியா

ஆ. ஜப்பான்

**இ. சீனா ☑**

ஈ. இஸ்ரேல்




★ சீனாவின் ஃபயர் டிராகன்–480 எறிகணையால் செங்கடலில் உள்ள ஓர் அமெரிக்க டிகோண்டெரோகா வகை கலத்தை மூழ்கடிக்க முடியும் என ஒரு PLA ஆய்வு கூறுகிறது. நோரின்கோ குழுமத்தால் தயாரிக்கப்பட்ட 750 மிமீ உடைய தந்திரோபாய எறிகணையான இது, துல்லியமான வழிகாட்டுதல் உணரிகள் மற்றும் அதிவேக ஏவுதளம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. 400 கிலோவுக்கும் அதிகமான வெடியுளை மற்றும் வினாடிக்கு 500 மீட்டருக்கும் அதிகமான தாக்கத்தின் வேகத்துடன், 10,000 டன் எடையுள்ள ஒரு கலத்தை வெறும் இரண்டே தாக்குகளில் இதால் அழிக்க முடியும். 2019இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட இதன் தாக்கும் வரம்பு 500 கிமீக்கு மேலாகும்.

**23. 2024 – 'உலகளாவிய காற்றின் நிலை' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக வங்கி

**ஆ. சுகாதார விளைவுகள் நிறுவனம் (HEI) ☑**

இ. உலக சுகாதார நிறுவனம் (WHO)

ஈ. ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP)

★ சுகாதார விளைவுகள் நிறுவனம் மற்றும் UNICEF ஆகியவற்றின் 2024 – உலகளாவிய காற்றின் நிலை' (SoGA) அறிக்கையின்படி, வளிமாசு இறப்பிற்கான இரண்டாவது முன்னணி உலகளாவிய ஆபத்து காரணியாக உள்ளது. இது இருதய நோய் மற்றும் நுரையீரல் புற்றுநோய் போன்ற தொற்றாநோய்களை ஏற்படுத்துகிறது; 2021இல் 8.1 மில்லியன் இறப்புகளுக்கு இது காரணமாக அமைந்துள்ளது.

★ உலக வளிமாசு நோய் சுமையில் இந்தியாவும் சீனாவும் 54%த்தைக் கொண்டுள்ளன. 2021ஆம் ஆண்டில், வளிமாசு இந்தியாவில் 1,69,400 சிறார் இறப்பையும் 2,37,000 COPD (நாள்பட்ட நுரையீரல் தடை நோய்) இறப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.

**24. அண்மையில், தேசிய மனித உரிமைகள் ஆணையமானது வரிசையான காவல் மரணங்கள் தொடர்பாக எந்த மாநில அரசுக்கு குறிப்பாணை அனுப்பியது?**

அ. கேரளா

**ஆ. ஒடிசா ☑**

இ. ஜார்கண்ட்

ஈ. சிக்கிம்

★ காவல் மரணங்களுக்கு இழப்பீடு வழங்காதது தொடர்பாக ஒடிசா அரசுக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் குறிப்பாணை அனுப்பியுள்ளது. 2017 முதல் 2022 வரை, இந்தியாவில் 660 காவல் மரணங்கள் பதிவாகியுள்ளன; குஜராத்தில் அதிகபட்சமாக 80 பேர் இறந்துள்ளனர். அரசியலமைப்புச் சட்டப்பாதுகாப்புகளில் பிரிவுகள் 14 மற்றும் 21 மற்றும் சட்டப்பாதுகாப்புகளில் பிரிவுகள் 330, 331 IPC மற்றும் 176 Cr.P.C ஆகியவை காவலில் உள்ளோர்க்கு பாதுகாப்பு வழங்குகின்றது. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் வழிகாட்டுதல்களும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளும் குற்றஞ்சாட்டப்பட்டோரை மேலும் பாதுகாப்பதோடு, சரியான கைது நடைமுறைகளை உறுதிசெய்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கள்ளச்சாராய உயிரிழப்பு: விசாரிக்க ஆணையம்.**

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயத்துக்கு அறுபதுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக ஆராய, ஓய்வு பெற்ற நீதிபதி பி கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் விசாரணை ஆணையம் அமைக்க முதலமைச்சர் மு க ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையம் தனது பரிந்துரைகளை மூன்று மாதங்களுக்குள் வழங்கும்.

---

**2. 1,000 பெண்கள், திருநங்கை ஓட்டுநர்களுக்கு ஆட்டோ வாங்க ₹1 லட்சம் மானியம்: தமிழ்நாடு அரசு.**

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுசெய்துள்ள 1,000 பெண் மற்றும் திருநங்கை ஓட்டுநர்கள் புதியதாக ஆட்டோ வாங்கும் செலவினத்தில் தலா ₹1 லட்சம் மானியமாக வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

---

**3. ஃபோமிபைசோல்.**

மெத்தனால் நச்சு முறிவுக்கு 'ஃபோமிபைசோல்' பயன்படுத்தப்படுகிறது. மெத்தனால் குருதியில் கலந்தபின் குறிப்பிட்ட நேரத்துக்குள், 'ஃபோமிபைசோல்' மருந்து வழங்கப்பட்டால் அதன் வீரியம் குறையும் எனக் கூறப்பட்டாலும், அந்த மருந்தின் தரம் இதுவரை உறுதிசெய்யப்படவில்லை. அதேவேளை, மெத்தனாலுக்கு மாற்றாக எத்தனால் மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. இரண்டுமே ஆல்கஹால் என்றாலும் மெத்தனாலின் வீரியத்தை எத்தனால் குறைக்கும் என்பதால் பாதுகாப்பான இந்த சிகிச்சை முறை பின்பற்றப்படுகிறது.

---

**4. மகளிருக்கான பிரத்யேக உடற்பயிற்சி கூடம் விரைவில் திறப்பு.**

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மகளிருக்கான பிரத்யேக உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்க குடும்புக்கு ஒரு உடற்பயிறச்சி கூடம் எனும் வீதத்தில் 'எம்பவர் உடற்பயிற்சிக் கூடம்' என்னும் பெயரில் அமைக்க முதல்கட்டமாக ₹10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

---

**5. மறுபயன்பாட்டு ஏவுகலன் சோதனை வெற்றி: ISRO.**

விண்ணில் செயற்கைக்கோள்களை நிலைநிறுத்தியபிறகு மீண்டும் பாதுகாப்பாக தரைக்குத் திரும்பிவரும் மறுபயன்பாட்டுக்கான ஏவுகலனை (RLV) கர்நாடக மாநிலம், சித்ரதுர்காவில் உள்ள வான்வெளி சோதனை தளத்தில் வைத்து வெற்றிகரமாக ISRO பரிசோதித்தது. தற்போது SSLV, PSLV, LVM–3 ஏவுகலங்கள் மூலமாக செயற்கைக் கோள்களையும், விண்கலன்களையும் ISRO விண்ணில் செலுத்தி வருகின்றது. இந்த நிலையில், விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வுமையம் உள்ளிட்ட ISRO ஆய்வமைப்புகளும், பாதுகாப்பு & வான்படை ஆராய்ச்சி அமைப்புகளும் இணைந்து மறுபயன்பாட்டுக்கான ஏவுகலனை வடிவமைக்கத் திட்டமிட்டன. அதன்படி, 'புஷ்பக்' எனும் பெயரிலான ஏவுகலன் வடிவமைக்கப்பட்டு கடந்த ஆண்டு வெற்றிகரமாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. அண்மையில், 'உழவு மற்றும் அதைச்சார்ந்த துறைகளின் உற்பத்தியின் மதிப்பு குறித்த புள்ளிவிவர அறிக்கையை (2011-12 முதல் 2022-23 வரை) வெளியிட்ட அமைப்பு எது?**

அ. NABARD

**ஆ. தேசிய புள்ளியியல் அலுவலகம் ☑**

இ. இந்திய உணவுக் கழகம்

ஈ. வேளாண் அமைச்சகம்

★ தேசிய புள்ளியியல் அலுவலகம், "உழவு மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளின் (2011-12 முதல் 2022-23 வரை) உற்பத்தியின் மதிப்பு" குறித்த புள்ளிவிவர அறிக்கையை வெளியிட்டது. இதன் முக்கிய சிறப்பம்சம் 2022-23இல் வேளாண்மைத் துறையின் 18.2% GVA பங்காகும். வேளாண்சார்ந்த துறை பங்களிப்புகள்: பயிர் (54.3%), கால்நடைகள் (30.9%), வனவியல் (7.9%), மற்றும் மீன்பிடித்தல் (6.9%). 2011-12 முதல் 2022-23 வரை, பயிர்களின் பங்கு 62.4%இலிருந்து 54.3%ஆக குறைந்துள்ளது. அதே காலகட்டத்தில் கால்நடைகள், வனவியல் மற்றும் மீன்பிடி உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது.

**2. உத்தர பிரதேச மாநிலத்தில் நேரடி நெல் விதைப்பு முறையை (DSR) ஊக்குவிப்பதற்காக குறைந்த மீத்தேன் அரிசி திட்டத்தில் (LMRP) அண்மையில் இணைந்த நிறுவனம் எது?**

**அ. கிசான் கிராஃப்ட் லிமிடெட் ☑**

ஆ. ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

இ. அம்ப்ரோசியா ஆர்கானிக் பண்ணை

ஈ. TATA குழுமம்

★ உத்தர பிரதேச மாநிலத்தில் நேரடி நெல் விதைப்பு முறையை (DSR) ஊக்குவிப்பதற்காக UP-PRAGATI Accelerator திட்டங்களின் (UPPAP) கீழ் குறைந்த மீத்தேன் அரிசி திட்டத்தில் (LMRP) கிசான் கிராஃப்ட் லிமிடெட் சேர்ந்துள்ளது. உலக வங்கியின் 2030 நீர்வளக்குழுவின் முன்னெடுப்பான LMRP, வேளாண் நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் நீர் பயன்பாட்டுத் திறன் மற்றும் குறைந்த கார்பன் உமிழ்வு முறைகளை ஊக்குவிப்பதன்மூலம் வருவாயை அதிகரிப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

**3. அண்மையில், எந்த அமைப்பால், '2024 – Global Gas Flaring Tracker Report' வெளியிடப்பட்டது?**

அ. IMF

**ஆ. உலக வங்கி ☑**

இ. UNEP

ஈ. UNDP



★ உலக வங்கியின், 'Global Gas Flaring Tracker Report'இன்படி, 2023ஆம் ஆண்டில் எரிவாயு எரிப்பு 148 பில்லியன் கன மீட்டரை எட்டியது; இது 2019க்குப் பிறகு மிக அதிகமாகும். எரிவாயு எரிதல் என்பது எண்ணெய் பிரித்தெடுக்கும் போது இயற்கை எரிவாயு எரிக்கப்படும் செயலாகும். சந்தைக் கட்டுப்பாடுகள், ஒழுங்குமுறை சிக்கல்கள் மற்றும் அரசியல் காரணிகள் காரணமாக இந்தச் செயல் நீடிக்கிறது. எரியும் வாயுவை பாதுகாப்பாக வெளியேற்றினாலும், அது மின்னுற்பத்தி அல்லது பாதுகாப்பிற்கு பயன்படுத்தக்கூடிய மதிப்புமிக்க வளத்தை வீணாக்கும் ஒரு செயலாகும்.

**4. அண்மையில், 'விரைவான இடப்பெயர்வு – நம்பகமான பயணிகள் திட்டத்தைத்' தொடக்கிய அமைச்சகம் எது?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்


**ஆ. உள்துறை அமைச்சகம் ☑**

இ. சுற்றுலா அமைச்சகம்

ஈ. குடும்பம் & சுகாதார நல அமைச்சகம்

★ புது தில்லி இந்திராகாந்தி பன்னாட்டு விமான நிலையத்தின் மூன்றாவது முனையத்தில், 'விரைவான இடப்பெயர்வு – நம்பகமான பயணிகள்' (Fast Track Immigration – Trusted Traveller Programme– FTI–TTP) என்ற திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் தொடக்கி வைத்தார். இந்தத் திட்டம் பயணிகளுக்கு வேகமான, எளிமையான மற்றும் பாதுகாப்பான குடியேற்ற அனுமதிக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது FTI–TTP இணையதளம் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். நாட்டின் 21 முக்கிய விமான நிலையங்களில் FTI–TTP தொடங்கப்படும். முதற்கட்டமாக தில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத், கொச்சி மற்றும் அகமதாபாத் ஆகிய முக்கிய விமான நிலையங்களில் இத்திட்டம் தொடங்கப்படும்.

**5. 'உலக நீரியல் நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**




அ. ஜூன்.20

**ஆ. ஜூன்.21 ☑**

இ. ஜூன்.22

ஈ. ஜூன்.23

★ உலக நீரியல் நாளானது ஜூன்.21ஆம் தேதியன்று கடைப்பிடிக்கப்படுகிறது. கடந்த 1921ஆம் ஆண்டு முதல் சர்வதேச நீரியல் அமைப்பின் வழிநடத்தலின் கீழ் இந்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. கடல்கள், பெருங்கடல்கள் மற்றும் செல்லக் கூடிய நீர்நிலைகளை ஆய்வுசெய்து அட்டவணைப்படுத்துவதற்கான உலகளாவிய முயற்சிகளை சர்வதேச நீரியல் அமைப்பு ஒருங்கிணைக்கிறது.

★ நூறு உறுப்புநாடுகளுடன், இது கடல்சார் அட்டவணைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளில் சீரான தன்மையை ஊக்குவிக்கிறது. கடந்த 1955ஆம் ஆண்டு முதல் உறுப்பினராக உள்ள இந்தியா, கொல்கத்தாவில் இந்திய கடற்படை நீரியல் துறையை இயக்கி வருகிறது; இது நவீன கடற்படையுடன் நீரியல் ஆய்வுகளுக்கு மையமாக உள்ளது.

**6. அண்மையில், திறன்மேம்பாடு & தொழில்முனைவோர் அமைச்சகம், வளர்ந்துவரும் திறன்களைக்கொண்டு இந்தியாவின் வேளாண் துறையை புத்துணர்வூட்டுவதற்காக கீழ்க்காணும் எந்த நாட்டுடன் ஒத்துழைத்தது?**

அ. கனடா

ஆ. மெக்ஸிக்கோ

**இ. ஆஸ்திரேலியா ☑**

ஈ. நியூசிலாந்து

कौशल विकास और उद्यमशीलता मंत्रालय
MINISTRY OF SKILL DEVELOPMENT AND ENTREPRENEURSHIP
सत्यमेव जयते

★ திறன்மேம்பாடு & தொழில்முனைவோர் அமைச்சகமும் ஆஸ்திரேலிய அரசாங்கமும் இணைந்து ஆஸ்திரேலியா–இந்தியா கிரிட்டிகல் அக்ரிகல்ச்சர் ஸ்கில்ஸ் பைலட் திட்டத்தை மதிப்பாய்வு செய்ய ஒரு வட்டமேசையை நடத்தியது. அதுல் குமார் திவாரி மற்றும் மேத்யூ ஜான்ஸ்டன் தலைமையில் நடந்த கலந்துரையாடல், முயற்சியை அளவிடுதல் மற்றும் நகலெடுப்பதில் கவனம் செலுத்தியது. NCVET, NSDC, ICAR, MoE, ASCI ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கடந்த மார்ச் மாதம் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், 64 நிறுவனங்களைச் சேர்ந்த 89 நிபுணர்களுடன் விரிவான ஆலோசனைகள்மூலம் ஐந்து முக்கியமான வேளாண் பணிகளை அடையாளம் கண்டுள்ளது.

**7. அண்மையில், எந்த நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் அகச்சிவப்பு ஒளியை புலப்படும் ஒளியாக மாற்ற ஒரு புதிய சாதனத்தை உருவாக்கியுள்ளனர்?**

**அ. அறிவியல் கழகம் (IISc) ☑**

ஆ. ஐஐடி, தில்லி


இ. ஐஐடி, கான்பூர்

ஈ. ஐஐடி, மெட்ராஸ்

INDIAN INSTITUTE OF SCIENCE
भारतीय विज्ञान संस्थान

★ இந்திய அறிவியல் கழகத்தின் (IISc) ஆராய்ச்சியாளர்கள் அகச்சிவப்பு ஒளியை புலப்படும் ஒளியாக மாற்றும் ஒரு புதிய சாதனத்தை உருவாக்கியுள்ளனர்; இது பாதுகாப்பு மற்றும் ஒளியியல் தகவல்தொடர்புகளில் புரட்சியை ஏற்படுத்தும். 2D பொருளைப் பயன்படுத்தி, உயர்–மாற்றும் மற்றும் அகன்றபுல படமாக்கலுக்காக நேரியலல்லாத ஆப்டிகல் ஆடி அடுக்கை அவர்கள் உருவாக்கினர். இந்தத் தொழில்நுட்பம் சிலிக்கான் டை ஆக்சைடு அடுக்குடன் தங்க பிரதிபலிப்பு மேற்பரப்பில் பன்னடுக்கு காலியம் செலினைடைப் பயன்படுத்துகிறது. இது மிகச்சிக்கலான அகச்சிவப்பு படமாக்கல் நுட்பங்களை எளிதாக்குகிறது.

**8. Space Variable Objects Monitor (SVOM) செயற்கைக்கோள் என்பது எந்த இருநாடுகளின் கூட்டுத்திட்டமாகும்?**



அ. சீனா மற்றும் ரஷ்யா

ஆ. பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா

**இ. பிரான்ஸ் மற்றும் சீனா ☑**

ஈ. அமெரிக்கா மற்றும் சீனா

★ அண்மையில், லாங் மார்ச் 2C ஏவுகலத்தின்மூலம் சீனாவின் ஜிசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்திலிருந்து பிரெஞ்சு – சீன செயற்கைக்கோள் SVOM விண்ணில் செலுத்தப்பட்டது. 930 கிலோகிராம் எடையுள்ள SVOM, பூமிக்கு மேலே 600 கிமீட்டருக்கு மேலுள்ள சுற்றுப்பாதையில் இருந்து காமா–கதிர் வெடிப்புகளைக் கண்டறிந்து ஆய்வுசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இருநாடுகளின் கருவிகளுடன் பொருத்தப்பட்ட இது 5 ஆண்டுகள் வடிவமைக்கப்பட்ட ஆயுளைக் கொண்டுள்ளது; ஆனால் 20 ஆண்டுகள் வரை இதால் செயல்பட முடியும். விண்மீன் வெடிப்புகளிலிருந்து உருவாகும் காமா–கதிர் வெடிப்புகளை ஆராய்வதன்மூலம் அண்ட பரிணாமத்தைப் பற்றிய நுண்ணறிவுகளை அறிந்துகொள்ள முடியும்.

**9. அண்மையில், மனித–வனவிலங்கு மோதலைக் குறைப்பதற்காக, 'Ele–fence' என்ற முதல் AI–அடிப்படையிலான ஸ்மார்ட் வேலி திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?**



அ. தமிழ்நாடு

ஆ. மேகாலயா

**இ. கேரளா ☑**

ஈ. அஸ்ஸாம்

★ இந்தியாவின் முதல் AI–அடிப்படையிலான ஸ்மார்ட் வேலியான 'Ele–fence' திட்டம், முதன்மையாக யானைகள் சம்பந்தப்பட்ட மனித–வனவிலங்கு மோதலைத் தணிப்பதற்காக, கேரளாத்தின் வயநாட்டில் பயன்படுத்தப்படுகிறது. ஒயிட் எலிஃபண்ட் டெக்னாலஜிஸ் மற்றும் கேரள வனத்துறையால் செயல்படுத்தப்பட்ட இது, மனித வாழ்விடங்களை நோக்கிவரும் யானைகளால் ஏற்படும் பயிரிழப்பு மற்றும் உயிரிழப்புகளைத் தடுப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது. 'Ele–fence' பாதிக்கப்பட்ட பகுதிகளில் வனவிலங்குகளையும் மனித வாழ்வாதாரங்களையும் பாதுகாக்க பார்க்கிறது.

**10. அண்மையில், எந்த நாட்டின் குடிமக்களுக்கு மருத்துவ இ–விசா வசதியை இந்தியா அறிவித்தது?**




**அ. வங்காளதேசம் ☑**

ஆ. நேபாளம்

இ. பூட்டான்

ஈ. மியான்மர்

★ வங்காளதேசத்தினருக்கு இ–மருத்துவ விசா வசதி மற்றும் வங்காளதேசத்தின் ரங்பூரில் புதிய தூதரகத்தை திறப்பதாக பிரதமர் நரேந்திர மோதி அறிவித்துள்ளார். வங்காளதேச பிரதமர் ஷேக் ஹசீனாவின் இரண்டு நாள் அரசுமுறை பயணத்தின்போது இந்த அறிவிப்பு செய்யப்பட்டது.

**11. அண்மையில், '43ஆவது உலக மருத்துவ மற்றும் சுகாதார விளையாட்டுகள்' நடைபெற்ற இடம் எது?**

அ. சீனா

**ஆ. பிரான்ஸ் ☑**

இ. இந்தியா

ஈ. ஜெர்மனி



★ 2024 ஜூன் 16–23 வரை பிரான்சின் புனித டிரோப்ஸில் நடைபெற்ற 43ஆவது உலக மருத்துவ மற்றும் சுகாதார விளையாட்டுப்போட்டிகளில், ஆயுதப்படை மருத்துவ சேவையைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் 32 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர். லெப்டினன்ட் கர்னல் சஞ்சீவ் மாலிக், மேஜர் அனிஷ் ஜார்ஜ், கேப்டன் ஸ்டீபன் செபாஸ்டியன், கேப்டன் டேனியா ஜேம்ஸ் ஆகியோர் கூட்டாக 19 தங்கம், 9 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றனர். 'மெட்கேம்ஸ்' என்பது மருத்துவ மற்றும் சுகாதார நிபுணர்களுக்கான உலகின் மிகப் பெரிய விளையாட்டு நிகழ்வாகும்; இது முதன்முதலில் 1978இல் நடைபெற்றது.

**12. 2024 – வில்வித்தை உலகக்கோப்பையில் இந்தியாவுக்காக 2 வெண்கலப்பதக்கங்களை வென்றவர் யார்?**

அ. பிரவின் ஜாதவ்

ஆ. அபிஷேக் வர்மா

**இ. தீரஜ் பொம்மதேவரா ☑**

ஈ. லிம்பா ராம்



★ நடப்பு 2024ஆம் ஆண்டில் துருக்கியின், அன்டலியாவில் நடைபெற்ற வில்வித்தை உலகக்கோப்பை 3ஆம் கட்டப் போட்டியில், 22 வயதான தீரஜ் பொம்மதேவரா, ரீகர்வ் போட்டிகளில் இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றார். இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலம் என மொத்தம் நான்கு பதக்கங்களை வென்றது. அதிதி சுவாமி, ஜோதி சுரேகா வென்னம் மற்றும் பர்னீத் கௌர் ஆகியோரைக்கொண்ட இந்திய மகளிர் கூட்டு அணி, இந்த பருவத்தில் தொடர்ந்து மூன்றாவது வெற்றியைக் குறிக்கும் வகையில் ஹாட்ரிக் தங்கப்பதக்கங்களை வென்றது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அடுத்த மாதத்துக்குள் 100 தானியங்கி வானிலை மையங்கள்: வருவாய்த்துறை தகவல்.**

அடுத்த மாதத்துக்குள் 100 தானியங்கி வானிலை மையங்கள் அமைக்கப்படும் என்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை தெரிவித்துள்ளது. வானிலையை மிகச்சரியாகக் கணித்து உரிய முன்னெச்சரிக்கையை வழங்கிட இராமநாதபுரம், ஏற்காடு பகுதியில் 2 ரேடார்கள் அமைக்க ₹56.03 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

---

**2. அகல் விளக்கு திட்டம்.**

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகள் எந்தவித இடர்பாடுமின்றித் தொடர்ந்து பள்ளிக்கு வருகைபுரியும் பொருட்டு, அவர்களுக்கு உடல்ரீதியாகவும், மனரீதியாகவும், சமூகரீதியாகவும் ஏற்படும் இடையூறுகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும், இணையதள செயலிகளைப் பாதுகாப்பாகக் கையாள்வது குறித்து வழிகாட்டுதல் வழங்கவும் ஆசிரியைகளைக்கொண்ட குழுக்கள் அமைக்கப்பட உள்ளன. இவர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கு, "அகல் விளக்கு" என்னும் திட்டம் ₹50 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 2024 – பன்னாட்டு ஒலிம்பிக் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Together, For a Peaceful World

**ஆ. Let's Move and Celebrate ☑**

இ. Together for a better world

ஈ. Moving Forward: United by Emotion




★ 1894ஆம் ஆண்டு பாரிஸில் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி நிறுவப்பட்டதைக் குறிக்கும் வகையில் ஜூன்.23ஆம் தேதி உலகம் முழுவதும் ஒலிம்பிக் நாள் கொண்டாடப்படுகிறது. டாக்டர் ஜோசப் க்ரஸ்ஸால் கடந்த 1947ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட இந்த நாள் முதல் முறையாக 1948ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. "Let's Move and Celebrate" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். 33ஆவது கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸில் 2024 ஜூலை.26 முதல் ஆகஸ்ட்.11 வரை நடைபெறவுள்ளன.

**2. அண்மையில், 16ஆவது ஆந்திர பிரதேச சட்டப்பேரவையின் சபாநாயகராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

அ. அசோக் பெண்டாலம்

**ஆ. C அய்யண்ணபத்ருடு ☑**

இ. கொய்யே மோஷனு ராஜு

ஈ. ஜெகன் மோகன் ரெட்டி

★ தெலுங்கு தேசம் கட்சியின் நர்சிப்பட்டினம் MLA, C அய்யண்ணபத்ருடு, 16ஆவது ஆந்திர பிரதேச சட்டப்பேரவையின் சபாநாயகராக 2024 ஜூன்.22 அன்று ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவைத்தலைவர் பதவிக்கு வேறு எந்த MLAஉம் வேட்புமனுத் தாக்கல்செய்யாததால் அவர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கபட்டார்.

**3. கேரள மாநிலத்தின் எந்த நகரம் அண்மையில் இந்திய நாட்டின் முதல் UNESCO 'இலக்கிய நகரம்' என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது?**

அ. திருவனந்தபுரம்

**ஆ. கோழிக்கோடு ☑**

இ. கொல்லம்

ஈ. பத்தனம்திட்டா




★ கேரள மாநிலத்தின் கோழிக்கோடு UNESCO படைப்பாற்றல் நகரங்கள் வலையமைப்பில் இணைந்து இந்தியாவின் முதல் UNESCO 'இலக்கிய நகரமாக' ஆனது. 2004இல் நிறுவப்பட்ட UCCN, இலக்கியம், கைவினைப்பொருட்கள் மற்றும் இசைபோன்ற துறைகளில் உலகளவில் கிட்டத்தட்ட 300 நகரங்களை உள்ளடக்கி, படைப்பாற்றல்மூலம் நகர்ப்புற வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. UCCNஇல் உள்ள மற்ற இந்திய நகரங்களில் ஸ்ரீநகர் மற்றும் ஜெய்ப்பூர் (கைவினை மற்றும் நாட்டுப்புற கலைகள்), மும்பை (திரைப்படம்), சென்னை, குவாலியர் மற்றும் வாரணாசி (இசை) மற்றும் ஹைதராபாத் (அறுசுவை உணவியல்) ஆகியவை அடங்கும்.

**4. இ-சம்ரிதி தளத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. விவசாய கடன் வழங்க வேண்டும்

**ஆ. குறைந்தபட்ச ஆதரவு விலையில் (MSP) பருப்புகளை கொள்முதல் செய்து கொள்வதற்கு விவசாயிகள் தங்களைப் பதிவு செய்துகொள்வதற்கான தளம் ☑**

இ. பயிர்க்காப்பீடு வழங்குதல்

ஈ. இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல்

★ குறைந்தபட்ச ஆதரவு விலையில் (MSP) உறுதிசெய்யப்பட்ட பருப்பு கொள்முதலுக்காக இ–சம்ரிதி தளத்தில் பதிவு செய்ய உழவர்களை ஊக்குவிக்குமாறு மாநில அரசுகளை மத்திய வேளாண் அமைச்சர் வலியுறுத்தினார். NAFED மற்றும் NCCFஆல் தொடங்கப்பட்ட இந்தத்தளம் நேரடிப்பதிவு அல்லது PACS மற்றும் FPOமூலம் பதிவுசெய்துகொள்ள அனுமதிக்கிறது. NAFEDமூலம் நேரடியாக உழவர்களின் வங்கிக்கணக்கில் பணம் வரவுவைக்கப்படுகிறது. NAFED, 1958இல் நிறுவப்பட்ட ஒரு தலைமைச் சந்தைப்படுத்தல் கூட்டுறவு நிறுவனமாகும். இது வேளாண் வர்த்தகத்தை ஊக்குவிக்கிறது. இதன் தலைமையகம் புது தில்லியில் உள்ளது.

### 5. '*Dendrophthoe longensis*' என்றால் என்ன?



அ. பூஞ்சை நோய்

ஆ. அதிவேக தாக்குதல் திறனுடைய நீர்மூழ்கிக்கப்பல்

**இ. புதிய வகை தாவரம் ☑**

ஈ. விண்வெளி ஆய்வூர்தி

★ இந்திய தாவரவியலாளர்கள் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மற்றும் அருணாச்சல பிரதேச மாநிலத்தில் 2 புதிய தாவர இனங்களைக் கண்டுபிடித்துள்ளனர். நிலமேல் தண்டுடைய–ஒட்டுண்ணி தாவரமான, '*Dendrophthoe longensis*', அந்தமானின் பசுமையான காடுகளில் உள்ள மாமரங்களில் காணப்பட்டது. ஒரு சிறிய, வெள்ளை மற்றும் ஊதாநிற புள்ளிகள்கொண்ட ஒரு மூலிகைத் தாவரமான '*Petrocosmea arunachalense*', அருணாச்சல பிரதேசத்தில் உள்ள ஒரு குகையில் கண்டுபிடிக்கப்பட்டது. இது இந்தியாவில் அறியப்பட்ட இரண்டாவது '*Petrocosmea*' இனமாகும்.

### 6. சிந்து நதிநீர் ஒப்பந்தம் (IWT) என்பது எந்த இருநாடுகளுக்கு இடையே கையெழுத்தான ஒப்பந்தமாகும்?




அ. இந்தியா மற்றும் சீனா

**ஆ. இந்தியா மற்றும் பாகிஸ்தான் ☑**

இ. இந்தியா மற்றும் நேபாளம்

ஈ. இந்தியா மற்றும் பூடான்

★ இந்தியாவுடனான 1960ஆம் ஆண்டு சிந்து நதிநீர் ஒப்பந்தம் குறித்து விவாதிக்க பாகிஸ்தான் தூதுக்குழு சமீபத்தில் ஜம்மு வந்தது. அப்போதைய இந்தியப்பிரதமர் ஜவகர்லால் நேரு மற்றும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் ஆகியோரால் கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம் சிந்து நதியின் நீர்விநியோகத்தை ஒழுங்குபடுத்துகிறது. இந்தியா பியாஸ், ராவி மற்றும் சட்லஜ் ஆறுகளிலிருந்தும் பாகிஸ்தான் செனாப், சிந்து மற்றும் ஜீலம் ஆறுகளிலிருந்தும் தண்ணீரைப்பெற்றது. நிரந்தர சிந்து ஆணையம் இந்த ஒப்பந்தம் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுகிறது.

### 7. ஆண்டுதோறும், ஐநா பொதுச்சேவை நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?



அ. ஜூன்.21

ஆ. ஜூன்.22

**இ. ஜூன்.23 ☑**

ஈ. ஜூன்.24

★ பொதுச் சேவையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவும், அரசு ஊழியர்களின் அர்ப்பணிப்பைப் போற்றவும் ஐக்கிய நாடுகளின் பொதுச்சேவை நாள் ஆண்டுதோறும் ஜூன்.23ஆம் தேதி அன்று உலகளவில் கொண்டாடப்படுகிறது.

★ சமூகங்கள் பொதுச்சேவையின் மதிப்பைக் கொண்டாடுவது, வளர்ச்சிக்கான அதன் பங்களிப்பை வெளிப்படுத்துவது, அரசு ஊழியர்களின் பணியைக் கௌரவிப்பது மற்றும் பொதுத்துறையில் பணியாற்ற இளைஞர்களை ஊக்குவிப்பது ஆகியவற்றை இந்த நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**8. UNCTAD அறிக்கையின்படி, 2023இல் அந்நிய நேரடி முதலீடுகளின் அடிப்படையில், இந்தியா, எந்த நிலைக்குத் தள்ளப்பட்டது?**

அ. 9ஆவது

ஆ. 10ஆவது

**இ. 15ஆவது ☑**

ஈ. 17ஆவது

★ UNCTAD அறிக்கையின்படி, இந்தியாவுக்கான அந்நிய நேரடி முதலீடு (FDI) கடந்த 2023இல் 43% குறைந்துள்ளது. 2022இல் இருந்த $49 பில்லியனில் இருந்து $28 பில்லியனாகக் குறைந்துள்ளது. உலக அளவில் அந்நிய நேரடி முதலீடு 2 சதவீதம் குறைந்துள்ளது. இந்தியா, சீனா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் அந்நிய நேரடி முதலீடு குறைந்துள்ளது. இந்தியாவின் உலகளாவிய FDI பெறுநர் தரவரிசையானது 2023இல் இருந்த 8ஆவது இடத்திலிருந்து 15ஆவது இடத்திற்கு சரிந்துள்ளது. ஆனால் பசும்புலம் திட்டங்கள் மற்றும் பன்னாட்டு திட்ட நிதி ஒப்பந்தங்களை ஈர்ப்பதில் இந்தியா முதல் ஐந்து இடங்களுக்குள் உள்ளது.

**9. உலக கைவினைக் கழகத்தால், 'உலக கைவினை நகரம்' என அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட இந்திய நகரம் எது?**

**அ. ஸ்ரீநகர் ☑**

ஆ. கொச்சி

இ. அயோத்தி

ஈ. கொல்கத்தா



★ ஜம்மு மற்றும் காஷ்மீரின் மிகப்பெரிய நகரமான ஸ்ரீநகர், உலக கைவினைக் கழகத்தால், 'உலக கைவினை நகரம்' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹாவின் அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்ட இந்த அங்கீகாரம், நகரின் திறமையான மற்றும் அர்ப்பணிப்புள்ள கைவினைஞர்களை எடுத்துக்காட்டுகிறது. இந்த விருது ஸ்ரீநகரின் தனித்துவமான பாரம்பரிய கைவினைப் பொருட்களைப் பாதுகாப்பதையும், அவர்களின் உலகளாவிய போற்றுதலையும் கலாச்சார செழுமையையும் வெளிப்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டுள்ளது.

**10. அண்மையில், உலகளாவிய உள்நாட்டு விமானச்சந்தையில், இந்தியா, எந்த இடத்தைப் பிடித்துள்ளது?**

அ. முதலாவது

ஆ. இரண்டாவது

**இ. மூன்றாவது ☑**

ஈ. நான்காவது

★ பத்தாண்டுகளுக்கு முன்பு ஐந்தாவது இடத்திலிருந்த இந்தியா தற்போது பிரதமர் நரேந்திர மோதியின் தலைமையில் முன்னேறி உலகின் மூன்றாவது மிகப்பெரிய உள்நாட்டுச்சந்தையாக இந்தியாவின் விமானப்போக்குவரத்துத்துறை உயர்ந்துள்ளது. விமான இருக்கை திறனில் சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் 6.9% என்ற அளவில் முன்னணியில் உள்ளது. குறைந்த விலை விமானங்கள் தற்போது 78.4 சதவீத சந்தைப்பங்குடன் ஆதிக்கம் செலுத்துகின்றன; அதில் இண்டிகோ 62%ஐக்கொண்டுள்ளது.

**11. அண்மையில், WTT (உலக டேபிள் டென்னிஸ்) போட்டியாளர் ஒற்றையர் பட்டத்தை வென்ற முதல் இந்திய டேபிள் டென்னிஸ் வீரர் / வீராங்கனை யார்?**

அ. மம்தா மேத்தா

**ஆ. ஸ்ரீஜா அகுலா ☑**

இ. நேஹா அகர்வால்

ஈ. மனிகா பத்ரா



★ ஹைதராபாத்தைச் சேர்ந்த ஸ்ரீஜா அகுலா, WTT போட்டியாளர் ஒற்றையர் பட்டத்தை வென்ற முதல் இந்திய டேபிள் டென்னிஸ் வீராங்கனை என்ற வரலாறு படைத்தார்; மேலும் WTT போட்டியாளர் லாகோஸ்–2024இல் இரட்டையர் பட்டத்தையும் வென்றார். ஜூன்.19 முதல் 23 வரை நைஜீரியாவின் லாகோஸில் நடைபெற்ற இந்நிகழ்வில், $80,000 மதிப்பிலான பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. ஸ்ரீஜா அகுலா, ஒற்றையர் இறுதிப்போட்டியில் சீனாவின் யிஜி டிங்கை 4–1 என்ற கணக்கில் வீழ்த்தினார்.

**12. நிலக்கரி அமைச்சகமானது அண்மையில் எந்த மாநிலத்தில் நிலத்தடி நிலக்கரி வாயுவாக்கத்திற்கான (UCG) இந்தியாவின் முதல் சோதனைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது?**

அ. பீகார்

ஆ. ஒடிஸா

**இ. ஜார்கண்ட் ☑**

ஈ. மத்திய பிரதேசம்



★ இந்தியாவின் நிலக்கரி அமைச்சகம் ஜார்கண்டின் ஜம்தாரா மாவட்டத்தில் உள்ள கஸ்தா நிலக்கரித் தொகுதியில் நாட்டின் முதல் நிலத்தடி நிலக்கரி வாயுவாக்கத் திட்டத்தைத் தொடக்கியது. ஈஸ்டர்ன் கோல்ஃபீல்ட்ஸ் லிட் (ECL) தலைமையிலான இம்முயற்சி நிலக்கரியை மீத்தேன், ஹைட்ரஜன், கார்பன் மோனாக்சைடு மற்றும் கார்பன் டை ஆக்சைடாக மாற்ற முயற்சி செய்கிறது. இந்த வாயுக்கள் செயற்கை இயற்கை எரிவாயு உற்பத்தி, எரிபொருள் மற்றும் உரத்தொகுப்பு மற்றும் வெடிபொருட்கள் உற்பத்தி உள்ளிட்ட பரந்த தொழில்துறை பயன்பாடுகளைக்கொண்டுள்ளன. இது இந்தியாவின் நிலக்கரிசார் தொழிற்துறையில் நிலையான பயன்பாடுகளுடன் புரட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நிலவின் இருள் பகுதியிலிருந்து மாதிரிகள்: பூமிக்குக் கொண்டு வந்தது சீன விண்கலம்.**

நிலவின் இருள் பகுதியிலிருந்து மாதிரிகளைச் சேகரித்துக்கொண்டு சீனாவின் 'சாங்கே–6' விண்கலத்தின் தரை இறங்கி பகுதி பூமிக்குத் திரும்பிவந்தது. நிலவின் தொலைதூரப் பகுதியிலிருந்து பாறைகள் உள்ளிட்ட மாதிரிகள் பூமிக்குக் கொண்டுவரப்படுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

---

**2. செம்மொழிப் பூங்காவில் உணவுத்திருவிழா.**

உலக அகதிகள் நாளை முன்னிட்டு, ஐநா அவையின் அகதிகளுக்கான உயராணையத்தின் சார்பில், "ஊரும் உணவும்" என்னும் உணவுத்திருவிழா சென்னையில் அமைந்துள்ள செம்மொழிப்பூங்காவில் ஜூலை 5, 6, 7 ஆகிய தேதிகளில் நடத்தப்படவுள்ளது. நடப்பாண்டு, 'எல்லோரும் இன்புற்றிருக்க' என்னும் கருப்பொருளில் இத்திருவிழா நடத்தப்படவுள்ளது.

# IMPORTANT LINKS

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 'புஷ்பக்' என்னும் மறுபயன்பாட்டு ஏவுகலத்தின் (RLV LEX-03) தரையிறங்கு சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்ட விண்வெளி நிறுவனம் ஏது?**



**அ. ISRO ☑**

ஆ. NASA

இ. JAXA

ஈ. CNSA

★ ISRO தனது 'புஷ்பக்' என்ற மறுபயன்பாட்டு ஏவுகலத்தை (RLV LEX-03) மூன்றாவது முறையாக சவாலான சூழ் நிலையில் சோதனை செய்து வெற்றியடைந்தது. இந்த ஏவுகலம் முந்தைய ஏவுகலத்திலிருந்த பாகங்களை மீண்டும் பயன்படுத்தியதோடு துல்லியமான தரையிறங்கலுக்காக மேம்பட்ட உணரிகளைப் பயன்படுத்தியது. செலவைக் கணிசமாகக் குறைக்கும் நோக்கோடு வடிவமைக்கப்பட்டுள்ள இது, விண்வெளியில் செயற்கைக்கோள்களை நிலைநிறுத்திய பிறகு ஒரு விமானத்தைப்போல மீண்டும் தரையிறங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. '17 வயதுக்குட்பட்ட ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் – 2024'இல், இந்தியா, எத்தனை பதக்கங்களை வென்றது?**



**அ. 11 ☑**

ஆ. 12

இ. 13

ஈ. 14

★ ஜூன்.22-24 வரை ஜோர்டானின் அம்மானில் நடந்த 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் – 2024இல் இந்திய மல்யுத்த வீரர்கள் 11 பதக்கங்களை (4 தங்கம், 2 வெள்ளி, 5 வெண்கலம்) வென்றனர். அவர்கள் ஆடவர் மற்றும் மகளிர் ஃப்ரீஸ்டைல் மற்றும் ஆடவர் கிரேக்க-ரோமன் பிரிவுகளில் ஒரு வடிவத்திற்கு 10 எடை பிரிவுகளில் போட்டியிட்டனர். தற்போது நடைபெற்று வரும் U-23 சாம்பியன்ஷிப் போட்டிக்கு முன்னதாக இந்த நிகழ்வு நடைபெற்றது. 2023 – சாம்பியன்ஷிப் போட்டிகள் கிர்கிஸ்தானின் பிஷ்கெக்கில் நடந்தது.

**3. அண்மையில், 64ஆவது பன்னாட்டு சர்க்கரை அமைப்பு கவுன்சில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்ட இடம் எது?**

அ. பெய்ஜிங், சீனா

ஆ. பாரிஸ், பிரான்ஸ்

**இ. புது தில்லி, இந்தியா ☑**

ஈ. லண்டன், இங்கிலாந்து

★ 64ஆவது பன்னாட்டு சர்க்கரை அமைப்பு கவுன்சில் கூட்டம் 2024 ஜூன்.25 அன்று புது தில்லியில் தொடங்கியது. இக்கூட்டத்தை கவுன்சிலின் தற்போதைய தலைமைப் பொறுப்பை வகிக்கும் இந்தியா நடத்தியது. 30 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஜூன்.27 வரை சர்க்கரைத் தொழிற்துறை மற்றும் உயிரி எரிபொருள் விவகாரங்களைப்பற்றி விவாதிப்பார்கள். கடந்தாண்டு லண்டனில் நடந்த கூட்டத்தில் தலைமைப்பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியா, உலகின் இரண்டாவது மிகப்பெரிய சர்க்கரை உற்பத்தியாளரும் உலகளவில் மிகப்பெரிய நுகர்வோராகவும் உள்ளது. உலகளாவிய சர்க்கரை உற்பத்தியில் 20%உம் நுகர்வில் 15%உம் இந்தியா பங்களிக்கிறது.

**4. அண்மையில், தேசிய STOP வயிற்றுப்போக்கு பிரச்சாரம் – 2024ஐ தொடங்கிய அமைச்சகம் எது?**

அ. உள்துறை அமைச்சகம்

**ஆ. சுகாதாரம் & குடும்பநல அமைச்சகம் ☑**

இ. வேளாண் அமைச்சகம்

ஈ. பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

★ குழந்தைகளிடையே வயிற்றுப்போக்கை நிறுத்துவதற்கான தேசிய இயக்கத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் J P நட்டா, புது தில்லியில் தொடக்கிவைத்தார். வயிற்றுப்போக்கு காரணமாக குழந்தைகள் உயிரிழப்பதை முற்றிலும் தடுப்பதே இந்தப் பிரச்சார இயக்கத்தின் நோக்கமாகும். இதன்படி ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ORS கரைசல் வழங்கப்படவுள்ளது. ஜல்ஜீவன் இயக்கம், தூய்மை இந்தியா இயக்கம் மற்றும் ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர் கட்டமைப்பு விரிவாக்கம் போன்ற திட்டங்கள், வயிற்றுப்போக்கு காரணமாக குழந்தைகளிடையே ஏற்படும் உயிரிழப்பைக் குறைக்க பெருமளவு உதவியிருப்பதாக அப்போது தெரிவித்தார்.

**5. அண்மையில், எந்த மாநில அரசு தேசிய கல்விக்கொள்கையின்கீழ் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஒரு பிரதம மந்திரி சிறப்புக் கல்லூரியை நிறுவுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது?**

அ. உத்தர பிரதேசம்

ஆ. ஹரியானா

இ. பீகார்

**ஈ. மத்திய பிரதேசம் ☑**

★ மத்திய பிரதேசத்தில், பிரதம மந்திரி சிறப்புக் கல்லூரி திட்டம் ஜூலை.01ஆம் தேதி அனைத்து 55 மாவட்டங்களிலும் தொடங்கப்படும். அம்மாநில முதலமைச்சர் Dr மோகன் யாதவ், புதிய டிரோன் கொள்கையை அறிவித்து, விமானப் போக்குவரத்து, விவசாயம் மற்றும் AI வேலைவாய்ப்புகளுக்கான கற்பித்தலை மேம்படுத்துவதை வலியுறுத்தினார். ஒவ்வொரு கல்லூரியும் பாரம்பரிய இந்திய அறிவு மையத்தை நிறுவும். சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஊக்குவிக்க, அனைத்து அரசு, அரசு சாரா மற்றும் உதவி பெறும் கல்லூரிகளிலும் கல்வித்தோட்டங்கள் உருவாக்கப்படும்.

**6. இந்தியாவின் எந்தப்பகுதியில், கலுபர் போர் நினைவு அருங்காட்சியகம் அமைந்துள்ளது?**

அ. பெங்களூரு

**ஆ. லடாக் ☑**

இ. சண்டிகர்

ஈ. புது தில்லி




★ ஜூலை.26 அன்று கார்கில் வெற்றி நாளின் 25ஆவது ஆண்டு விழாவையொட்டி, லடாக்கில், இந்திய இராணுவம், கார்கில் போர்வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், சுற்றுலாப்பயணிகளுக்காக கலுபர் போர் நினைவகத்தை திறந்து வைத்தது. லடாக் ஆரிய பள்ளத்தாக்கில் அமைந்துள்ள இந்த நினைவுச்சின்னம் கேப்டன் மனோஜ் பாண்டே போன்றோரின் துணிச்சலைப் போற்றுகிறது. உள்ளூர் மக்களும் இப்போரில் முக்கிய பங்கு வகித்தனர். கார்கிலுக்கு முந்தைய வெற்றி நாள் கொண்டாட்டங்களில் பிரிக் OP யாதவ் (ஓய்வு) தலைமையிலான, "போர்க்களத்திற்கான மலையேற்றம்" அடங்கும்.

**7. "ஒரு வாரம் ஒரு கருப்பொருள்" என்ற பிரச்சாரத்துடன் தொடர்புடைய துறை எது?**

அ. நிதி

**ஆ. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ☑**

இ. வேளாண்மை

ஈ. சுகாதார பராமரிப்பு

★ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின்கீழ் இயங்கும் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் கழகம் (CSIR), இந்தியாவில் உள்ள அதன் 37 ஆய்வகங்களில் 2024 ஜூன்.24 முதல் "ஒரு வாரம் ஒரு கருப்பொருள்" பிரச்சாரத்தை ஏற்பாடு செய்துள்ளது. மத்திய அமைச்சர் Dr ஜிதேந்திர சிங், இந்தப் பிரச்சாரத்தைத் தொடக்கி வைத்தார்.

★ CSIR ஆய்வக முன்னெடுப்புகளை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்ட இம்முயற்சி, வேலைவாய்ப்புகளை உருவாக்கி, MSME–கள், புத்தொழில்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை மேம்படுத்துவதன்மூலம் புதுமைகளை ஊக்குவிக்கிறது மற்றும் குடிமக்களுக்கு நன்மையளிக்கிறது.

8. **'ஈட்டி – Javelin' என்பது என்ன வகையான ஏவுகணை அமைப்பாகும்?**

**அ. ஆள்-எடுத்துச் செல்லக்கூடிய பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டப்பட்ட ஏவுகணை ☑**



ஆ. கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணை

இ. சீர்வேக ஏவுகணை

ஈ. மேற்கூறியவை எதுவுமில்லை

★ இந்தியாவும் அமெரிக்காவும் தனது ராணுவ தேவைகளுக்காக இந்தியாவில் அமெரிக்க ஜாவ்லின் ஏவுகணைகளை இணைந்து தயாரிப்பது குறித்து ஆலோசித்து வருகின்றன. ஜாவ்லின் என்பது ரேதியோன் மற்றும் லாக்ஹீட் மார்ட்டின் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட ஆள்–எடுத்துச்செல்லக்கூடிய பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டப்பட்ட ஏவுகணை ஆகும். கவச வாகனங்கள் மற்றும் பதுங்குக்குழிகள் மற்றும் ஹெலிகாப்டர்கள் போன்ற பிற இலக்குகளை வீழ்த்த வடிவமைக்கப்பட்டுள்ள இது, 2500 மீ தூரம் வரை சென்று தாக்கும் திறன் கொண்டது. இதை தோள்பட்டை அல்லது வாகனத்தில் வைத்து இயக்கலாம்.

9. **அண்மையில் எந்த மாநிலத்தில், '*Didymocarpus janakiae*' என்ற ஒரு புதிய தாவர இனம் கண்டுபிடிக்கப்பட்டது?**

அ. சிக்கிம்



**ஆ. அஸ்ஸாம் ☑**

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. கேரளா

★ அருணாச்சல பிரதேச மாநிலத்தின் மேற்கு கமெங் மாவட்டத்தில் 2,300 மீ உயரத்தில், '*Didymocarpus janakiae*' என்ற புதிய தாவர இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மூத்த இந்திய தாவரவியலாளரான E K ஜானகியம்மாளின் நினைவாக பெயரிடப்பட்ட இந்த இனம், *Didymocarpus* இனத்தைச் சேர்ந்தது; இது ஆப்பிரிக்க வயலட் குடும்பத்தின் (*Gesneriaceae*) ஒருபகுதியாகும். அழகிய வாழ்விடங்களில் காணப்படும் இது, சுற்றுச்சூழல் அமைப்பின் தரத்தை எடுத்துக்காட்டுகிறது. இந்த இனத்தில் 111 இனங்கள் உள்ளன, அவற்றில் 27 இந்தியாவில் காணப்படுகிறது.

10. **பண்டைய நகரமான தாம்லுக் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. ஜார்கண்ட்



**ஆ. மேற்கு வங்காளம் ☑**

இ. பீகார்

ஈ. ஒடிசா

★ மேற்கு வங்காள மாநிலத்தில் அமைந்துள்ள தாம்லுக், 'தாமிரலிப்தா' அல்லது 'தாமிரலிப்தி' என்று அழைக்கப்படும் ஒரு குறிப்பிடத்தக்க பண்டையகால நகரமாகும். இது ஏழு முதல் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் சுஹ்மா இராச்சியத்தின் தலைநகரமாகவும் பின்னர் பால பேரரசாகவும் செயல்பட்டது. சமீபத்திய அகழ்வாராய்ச்சியில் பண்டைய நகரமான சந்திரகேதுகரின் எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இன்றைய, தாம்லுக் அதன் வெற்றிலை உற்பத்தி & ஏற்றுமதிக்கு புகழ்பெற்றதாக விளங்குகிறது.

**11. அண்மையில், "பூரி பதாய் தேஷ் கி பலாய்" என்ற தேசிய அளவிலான பிரச்சாரத்தைத் தொடங்கிய அரசு–சாரா அமைப்பு எது?**

அ. ஸ்மைல் அறக்கட்டளை

**ஆ. சைல்ட் ரைட்ஸ் & யூ (CRY) ☑**

இ. கூஞ்ச்

ஈ. ஹெல்ப் ஏஜ் இந்தியா

★ நாடு முழுவதும் பெண் குழந்தைகளின் பள்ளி வருகையை அதிகரிக்க, "பூரி பதாய் தேஷ் கி பலாய்" என்ற தேசிய அளவிலான பிரச்சாரத்தை சைல்ட் ரைட்ஸ் & யூ (CRY) தொடக்கியுள்ளது. இந்தியாவில், பெண்களின் கல்வியறிவு விகிதம் ஆண்களைவிட பின்தங்கியுள்ளது. கிராமப்புறங்களில் ஐந்தாம் வகுப்பு முடிக்கும் முன்னரே பள்ளியிலிருந்து நின்றுவிடும் வழக்கம் கணிசமாக உள்ளது. இருப்பினும், கடந்த பத்தாண்டுகளில் கிராமப்புறப் பெண்களின் கல்வி அறிவு 26% உயர்ந்துள்ளது. ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மேல்நிலைகளில் பெண்களின் மொத்த சேர்க்கை விகிதம் ஆண்களைவிட அதிகமாகவே உள்ளது. இந்த முன்முயற்சியானது கல்வியில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்துவதையும் கல்விமூலம் பெண்களை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**12. அண்மையில், மாநில அமைச்சர்கள் தங்கள் சொந்த வருமான வரியைச் செலுத்துவதற்கு பொறுப்பாவார்கள் என அறிவித்த மாநில அரசு எது?**



அ. பீகார்

ஆ. ஒடிஸா

இ. ஜார்கண்ட்

**ஈ. மத்திய பிரதேசம் ☑**

★ ஜூன்.25 அன்று, மத்திய பிரதேச அமைச்சரவை மாநில அமைச்சர்கள் தங்கள் சொந்த வருமான வரியைச் செலுத்த வேண்டும் என்று முடிவுசெய்து, இந்த வரிகளை உள்ளடக்கிய 1972 விதியை மாற்றியது. முதலமைச்சர் மோகன் யாதவ், அமைச்சர்களின் ஊதியம் மற்றும் சலுகைகளுக்குச் செலுத்தப்படும் வருமான வரிக்கான மாநிலத்தின் நிதிப் பொறுப்பு முடிவுக்கு வருவதை வலியுறுத்தி, இம்முடிவை அறிவித்தார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கடலூர் குடிகாடில் 61 ஏக்கர் அலையாத்தி காடுகள்: புதிதாக உருவாக்குகிறது வனத்துறை.**

கடலூர் மாவட்டத்தின் குடிகாடு பகுதியில், தமிழ்நாடு பசுமை இயக்கப் பணிகள் வாயிலாக, 61 ஏக்கர் பரப்பளவுக்கு அலையாத்தி காடுகள் உருவாக்கும் பணிகள் தொடங்கியுள்ளதாக தமிழ்நாடு வனத்துறை தெரிவித்துள்ளது. கடற்கரை ஓரங்களில், மணலும் நீரும்கலந்த சேறுபோன்ற பகுதியில், குறிப்பிட்ட சில வகை மரங்கள் நன்கு வளரும். இந்த மரங்கள் மணலில் வேர்பரப்பி, இறுகப்பிடிக்கும் தன்மைகொண்டவை. இதனால், இவ்வகை அலையாத்தி மரங்கள் இருக்கும் பகுதிகளில், கடலரிப்பு ஏற்படுவது தடுக்கப்படும்; சுனாமிபோன்ற பேரிடர்கள் ஏற்படும் போதும் பாதிப்பு தடுக்கப்படும். இங்கு, சுரபுன்னை, வெண்கண்டல், கருங்கண்டல், நரிக்கண்டல், சிறுகண்டல், தில்லை, ஆட்டுமுள்ளி, உமிரி போன்ற வகை மரக்கன்றுகள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன.

---

**2. இரண்டாவது முறையாக மக்களவைத் தலைவரானார் ஓம் பிர்லா.**

நாடாளுமன்ற 18ஆவது மக்களவையின் தலைவராக ஓம் பிர்லா குரல் வாக்கெடுப்புமூலம் தேர்வுசெய்யப்பட்டார். இதன்மூலம் மக்களவைத் தலைவராக தொடர்ந்து 2ஆவது முறையாக தேர்வான ஐந்தாவது நபர் என்ற பெருமை ஓம் பிர்லாவுக்கு கிடைத்தது. இதுவரை M A ஐயங்கார், G S தில்லான், பல்ராம் ஜாக்கர், G M C பாலயோகி ஆகியோர் தொடர்ந்து இருமுறை மக்களவைத் தலைவராக பணியாற்றியுள்ளனர். இவர்களில் காங்கிரஸைச் சேர்ந்த பல்ராம் ஜாக்கர் மட்டுமே இரு பதவிக்காலத்தையும் முழுமையாகப் பூர்த்திசெய்தவர்.

18ஆவது மக்களவை கூட்டத்தொடர் கடந்த ஜூன்.24ஆம் தேதி தொடங்கியது. புதிய உறுப்பினர்களுக்கு தற்காலிக மக்களவை தலைவர் பர்த்ருஹரி மஹதாப் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

---

## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

1. **தில்லி தேசிய தலைநகரப் பகுதியில் குளோபல் நேவிகேசன் சாட்டிலைட் சிஸ்டம் (GNSS) ரிசீவரை நிறுவ, மானவ் ரச்னா பல்கலைக்கழகத்துடன் (MRU) அண்மையில் கூட்டிணைந்த அமைப்பு எது?**

**அ. ISRO ☑**

ஆ. NASA

இ. JAXA

ஈ. CNSA

★ மானவ் ரச்னா பல்கலைக்கழகம் தில்லி தேசிய தலைநகரப் பகுதியில் முதல் குளோபல் நேவிகேஷன் சாட்டிலைட் சிஸ்டம் (GNSS) ரிசீவரை நிறுவ ISRO மற்றும் NARL உடன் கூட்டுசேர்ந்தது. இந்த முயற்சியானது வளிமண்டலம் மற்றும் விண்வெளி அறிவியலில் ஆராய்ச்சியை மேம்படுத்துவதை தனது நோக்கமாகக்கொண்டுள்ளது. பொறியியல் மற்றும் அறிவியல்சார்ந்த மாணவர்களுக்கு செயற்கைக்கோள் வழிசெலுத்தல் தொழில்நுட்பத்துடன் நடைமுறை அனுபவத்தையும் இது வழங்குகிறது.

2. **அம்புபச்சி மேளா என்பது கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும்?**

**அ. அஸ்ஸாம் ☑**

ஆ. சிக்கிம்

இ. மணிப்பூர்

ஈ. நாகாலாந்து



★ அஸ்ஸாம் மாநிலத்தின் கௌகாத்தியில் உள்ள காமாக்யா திருக்கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் அம்புபச்சி மேளாவுக்கு நாடு முழுவதிலுமிருந்து பக்தர்கள் கூடி வருகின்றனர். இந்தியாவின் 51 சக்திபீடங்களில் ஒன்றான காமாக்யா திருக்கோவில், நிலாச்சல் மலையின்மேல் அமைந்துள்ளது. இது பார்வதிதேவியின் வடிவமான காமாக்யா தேவிக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது காமாக்யா தேவியின் மாதவிடாய் நாளில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் ஒரு கொண்டாட்டமாகும். கோவிலின் கட்டிடக்கலை தனித்துவமாக பாரம்பரிய நாகரா மற்றும் முகலாய பாணிகளை ஒருங்கிணைக்கிறது; இது நிலாச்சல பாணி என்றும் அழைக்கப்படுகிறது.

3. **அண்மையில், மாநிலங்களவையின் அவைத்தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. பியூஷ் கோயல்

**ஆ. J P நட்டா ☑**

இ. சிராக் பாஸ்வான்

ஈ. ராஜ்நாத் சிங்




★ மகாராட்டிர மாநிலம் வட மும்பையிலிருந்து மக்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பியூஷ் கோயலைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர் J P நட்டா மாநிலங்களவையின் அவைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த ஆண்டு பிப்ரவரியில் குஜராத்தில் இருந்து மாநிலங்களவைக்கு J P நட்டா பாஜகவால் பரிந்துரைக்கப்பட்டார்.

4. **Reciprocal Exchange of Logistics Agreement (RELOS) என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையேயான நிர்வாக ஏற்பாடாகும்?**

அ. பிரான்ஸ் ஆ. சீனா

இ. ஆஸ்திரேலியா **ஈ. ரஷ்யா ☑**



★ இந்தியாவுடனான வரைவு சரக்குப் போக்குவரவு ஒப்பந்தத்திற்கு ரஷ்யா ஒப்புதல் அளித்துள்ளது. பரஸ்பர சரக்குப் போக்குவரவு பரிமாற்ற ஒப்பந்தத்தின் (RELOS)கீழ் இராணுவ ஒத்துழைப்பை இது மேம்படுத்துகிறது. இந்த ஒப்பந்தம், அமைதிக்காலம் மற்றும் போர்க்கால பணிகளின்போது துருப்புக்கள், போர்க்கப்பல்கள் மற்றும் விமான வசதிகளை வழங்குதல் மற்றும் கூட்டு இராணுவ நடவடிக்கைகளுக்கான சரக்குப் போக்குவரவு ஆதரவை நெறிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது இந்தியாவின் கடல்சார் ஆற்றலை மிகவும் அதிகரிப்பதோடு, ஆர்க்டிக் ஆராய்ச்சி ஒத்துழைப்பையும் ஆதரிக்கிறது.

**5. அண்மையில், தூய்மை பாரத இயக்கம்–நகர்ப்புறம் 2.0இன்கீழ், "சஃபாய் அப்னாவோ, பிமாரி பகாவோ" என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ள அமைச்சகம் எது?**

**அ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

ஆ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

ஈ. விவசாய அமைச்சகம்

★ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது தூய்மை பாரத இயக்கம்–நகர்ப்புறம் 2.0இன்கீழ், "சஃபாய் அப்னாவோ, பிமாரி பகாவோ" என்ற முன்னெடுப்பை ஜூலை.01 முதல் ஆகஸ்ட்.31 வரை நடத்தவுள்ளது. இது தூய்மை மற்றும் நலத்தில் கவனஞ்செலுத்தி, மழைக்கால சவால்களுக்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை தயார்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. சுகாதார அமைச்சகத்தின், "STOP வயிற்றுப்போக்கு பரப்புரையுடன்" இணைந்து, அதிக மழைபொழியும்போது ஏற்படும் தூய்மை மற்றும் நோய் இடர்களை நிவர்த்திசெய்ய துறைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை இது ஊக்குவிக்கிறது.

**6. அண்மையில், 'பாரத ஒலிம்பிக் ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம்' திறக்கப்பட்ட இடம் எது?**

அ. ஜெய்ப்பூர்

**ஆ. காந்திநகரம் ☑**

இ. பாட்னா

ஈ. லக்னோ

★ பாரத ஒலிம்பிக் ஆராய்ச்சி மற்றும் கல்வி மையமானது (BCORE) ஜூன்.23 அன்று குஜராத்தின் காந்திநகரத்திலுள்ள ராஷ்ட்ரிய ரக்ஷா பல்கலைக்கழகத்தில் திறக்கப்பட்டது. இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் பி டி உஷா, இந்திய விளையாட்டுகளில் அறிவு, கண்டுபிடிப்பு மற்றும் செயல்திறனுக்கான மையமாக BCOREன் பங்கை எடுத்துரைத்தார். பன்னாட்டு ஒலிம்பிக் குழுமத்தால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட, 'BCORE' ஒலிம்பிக் மதிப்புகளை ஒரு கல்வி மையமாக செயல்பட்டு ஊக்குவிக்கும்.

**7. அண்மையில், ULLAS–நவ பாரத் சாக்ஷர்தா கார்யகிரம் திட்டத்தின்கீழ் முழு செயல்பாட்டு எழுத்தறிவு பெற்ற முதல் நிர்வாக அலகு எது?**

அ. சண்டிகர்

ஆ. புதுச்சேரி

இ. இலட்சத்தீவுகள்

**ஈ. லடாக் ☑**

★ 2024 ஜூன்.24 அன்று, 97%–க்கும் அதிகமான எழுத்தறிவை அடைந்த பின்னர், ULLAS – நவ பாரத் சாக்ஷர்தா கார்யகிரம் திட்டத்தின்கீழ் முழு செயல்பாட்டு எழுத்தறிவை அடைந்ததற்கான நிர்வாக அலகாக லடாக்கை துணை நிலை ஆளுநர் Dr BD மிஸ்ரா அறிவித்தார்.

★ தேசிய கல்விக்கொள்கை–2020உடன் இணைந்த இந்தத் திட்டம், தன்னார்வத்தொண்டுமூலம் வயது வந்தோரை கல்வியறிவு, எண்ணியல் மற்றும் வாழ்க்கைத்திறன்களில் மேம்படுத்துகிறது. இத்திட்டத்தின்மூலம் நாடு முழுவதும் இதுவரை 77 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர். ULLAS திறன்பேசி செயலியில் 1.29 கோடிக்கும் அதிகமான கற்பவர்களும் 35 இலட்சம் தன்னார்வ ஆசிரியர்களும் உள்ளனர்.

**8. ஆப்பிரிக்க பன்றிக்காய்ச்சலுக்குக் காரணமான காரணி எது?**

அ. பாக்டீரியா

ஆ. பூஞ்சை

**இ. வைரஸ் ☑**

ஈ. புரோட்டோசோவா



★ மிசோரம் மாநிலத்தில் கடந்த பிப்ரவரி முதல் ஆப்பிரிக்க பன்றிக்காய்ச்சல் பரவியதிலிருந்து 3,350 பன்றிகள் இறந்தன. ஆப்பிரிக்க பன்றிக்காய்ச்சல் என்பது பன்றிகளில் 100% இறப்பு விகிதத்தை விளைவிக்கும் மிகவும் தொற்றும் வைரஸ் நோயாகும். காய்ச்சல், பலவீனம் மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவை இதன் அறிகுறிகளுள் அடங்கும். இவ்வைரஸ் நேரடி மற்றும் மறைமுக தொடர்புமூலம் பரவுகிறது; பன்றி இறைச்சிசார் பொருட்களில் நீண்டகாலம் இது வாழ்கிறது. துணை–சகாரா ஆப்பிரிக்காவைச் சார்ந்த இது, 2020இல் இந்தியாவில் முதன்முதலாக கண்டறியப்பட்டது. எந்தச் சிகிச்சையோ அல்லது தடுப்பூசியோ இல்லாத இந்த நோயின் பரவலைத் தடுக்கும் ஒரே வழியாக பாதிக்கப்பட்ட விலங்குகளை முற்றாக கொன்றொழிப்பதே உள்ளது.

**9. Innovations for Defence Excellence (iDEX) என்பது எந்த அமைச்சகத்தின் முதன்மை முன்னெடுப்பாகும்?**

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. தகவல் தொடர்பு அமைச்சகம்

**இ. பாதுகாப்பு அமைச்சகம் ☑**

ஈ. புவி அறிவியல் அமைச்சகம்

रक्षा मंत्रालय
MINISTRY OF DEFENCE
सत्यमेव जयते

★ அண்மையில், ஒரு சிறிய செயற்கைக்கோளுக்காக Innovations for Defense Excellence (iDEX)இன்கீழ் 350ஆவது ஒப்பந்தம் SpacePixxel டெக்னாலஜிஸ் லிட் உடன் கையெழுத்திடப்பட்டது. பாதுகாப்பு அமைச்சகத்தின் முதன்மை முயற்சியான iDEX, MSME–கள், புத்தொழில்கள் மற்றும் R&D நிறுவனங்களை ஈடுபடுத்துவதன்மூலம் பாதுகாப்பு மற்றும் விண்வெளித்துறையில் தன்னம்பிக்கை & புதுமைகளை ஊக்குவிக்கிறது. பாதுகாப்புப் புத்தாக்க நிறுவனம் மூலம் நிர்வகிக்கப்படுகிற இது, நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்மூலம் புதுமையாளர்களை ஆதரிக்கிறது.

**10. எந்தப் பாலைவனத்தில் ALMA தொலைநோக்கி அமைந்துள்ளது?**

அ. கலகாரி பாலைவனம்

**ஆ. அட்டகாமா பாலைவனம் ☑**

இ. சகாரா பாலைவனம்

ஈ. கோபி பாலைவனம்



★ **A**tacama **L**arge **M**illimeter/submillimeter **A**rray (**ALMA**) தொலைநோக்கியைப் பயன்படுத்திய வானியலாளர்கள் இருமய விண்மீன் அமைப்புகளைச் சுற்றி கோள் உருவாக்கம் பற்றிய புதிய நுண்ணறிவுகளைப் பெற்றுள்ளனர்; அங்கு இரண்டு விண்மீன்கள் ஒரு பொதுவான பொருண்மை மையத்தைச் சுற்றி வருகின்றன. சிலியின் அட்டகாமா பாலைவனத்தில் 66 ஆண்டெனாக்களுடன் உள்ள ALMA, மில்லிமீட்டர் மற்றும் சப்மில்லிமீட்டர் அலைநீளங்களில் உள்ள வான்பொருட்களை ஆராய்வதோடு தொலைதூர விண்மீன் திரள்கள் & விண்மீன்களைக் கண்காணிக்க தூசி மேகங்களை ஊடுருவுகிறது. பன்னாட்டு கூட்டாண்மைமூலம் இயக்கப்படும், 'ALMA' மங்கலான ரேடியோ சமிக்ஞைகளை அசாதாரண உணர்திறனுடன் கண்டறிகிறது.

**11. சாலிகுண்டம் பௌத்த பாரம்பரிய தளம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. ஆந்திர பிரதேசம் ☑

ஆ. பீகார்

இ. கர்நாடகா

ஈ. இராஜஸ்தான்



★ ஆந்திர பிரதேசத்தில் உள்ள ஸ்ரீகாகுளத்தின் பண்டைய வரலாற்றை வரலாற்று ஆய்வாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் மீட்டெடுத்து வருகின்றனர். தண்டபுரி மற்றும் சாலிகுண்டம், கற்கால குகைகள் மற்றும் பழங்கால திருக்கோவில்கள் போன்ற முக்கிய பௌத்த தலங்களுக்கு பெயர் பெற்ற ஸ்ரீகாகுளம் ஒரு காலத்தில் கலிங்க வம்சத்தின் ஒருபகுதியாக இருந்தது; பின்னர் கஜபதி அரசர்கள், கீழைச்சாளுக்கியர்கள், காகதியர்கள் மற்றும் விஜயநகர பேரரசால் ஆளப்பட்டது. அரசவல்லியில் உள்ள ஸ்ரீ சூரியநாராயண சுவாமி திருக்கோவில் மற்றும் வம்சதாரா ஆற்றங்கரையில் உள்ள ஸ்ரீமுகலிங்கம் திருக்கோவில் ஆகியவை அங்குள்ள முக்கிய தலங்களாகும்.

**12. HOPEX என்பது என்பது கீழ்க்காணும் எந்த இருநாடுகளுக்கு இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சியாகும்?**

அ. இந்தியா மற்றும் ஜப்பான்

ஆ. இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம்

இ. இந்தியா மற்றும் பிரான்ஸ்

**ஈ. இந்தியா மற்றும் எகிப்து ☑**



★ 'HOPEX' என்பது இந்திய வான்படை (IAF) மற்றும் எகிப்திய விமானப்படை இடையே இருதரப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட கூட்டு இராணுவப் பயிற்சியாகும். எகிப்தில் நடைபெறும் இந்தப் பயிற்சியில், ரபேல் போர்விமானங்கள், C–17 குளோப்மாஸ்டர் போக்குவரத்து விமானங்கள், IL–78 பீரங்கிகள் போன்ற இந்திய இராணுவ திறன்கள் பங்கேற்றன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 75,000 ரெயில் பெட்டிகள் தயாரிப்பு: ICF புதிய சாதனை.**

பெரம்பூர் ICF தொழிற்சாலை தொடங்கி 68 ஆண்டுகளில் 75,000 ரெயில் பெட்டிகளை தயாரித்து சாதனை படைத்து உள்ளது. சென்னை, பெரம்பூரில் உள்ள ஒருங்கிணைந்த ரெயில் பெட்டி தொழிற்சாலையில் (ICF) 1955ஆம் ஆண்டு முதல் ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

---

**2. ஒசூரில் பன்னாட்டு விமான நிலையம்: முதலமைச்சர் அறிவிப்பு.**

வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ஒசூரில் 2,000 ஏக்கர் பரப்பளவில் பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படும் என்றும், திருச்சியில் நூலகம் உருவாக்கப்படும் என்றும் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவித்தார்.

**₹1,185 கோடியில் மகளிர் வேலைவாய்ப்பு, பாதுகாப்புத் திட்டம்**

தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு என்ற புதிய திட்டம் உலக வங்கியின் உதவியுடன் ₹1,185 கோடியில் ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்படும் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை தெரிவித்துள்ளது.

'நான் முதல்வன்' திட்டத்தின் தொடர்ச்சியாக பட்டப்படிப்பை முடித்த வேலைதேடும் இளையோர்க்கு அவர்களின் பட்டப்படிப்பு, தனித்திறன்கள் மற்றும் ஆர்வத்துக்கு ஏற்ப திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை அணுகுவதற்கு, 'திறன் தமிழ்நாடு – நிறைப்பள்ளிகள்' என்ற மாபெரும் திட்டம் ₹100 கோடியில் தொடங்கப்படவுள்ளது. பயிற்சியின் முடிவில் பணியிடப்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்படும்.

'நான் முதல்வன்' திட்டத்தின்மூலம் கிராமப்புறம் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள சிறந்த 1,000 மாணாக்கரை அடையாளம் கண்டு அவர்களுக்குத் திறன்பயிற்சி அளித்து, உயர் வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தர, 'சிகரம் தொடு' என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---


**1. நிலவின் இருள் பகுதியிலிருந்து மாதிரிகளை வெற்றிகரமாக சேகரித்து அதை மீண்டும் பூமிக்குக் கொண்டு வந்த முதல் நாடு எது?**

**அ. சீனா ☑**

ஆ. ஜப்பான்

இ. இந்தியா

ஈ. பிரான்ஸ்



★ சீனாவின் சாங்கே–6 பணியானது, நிலவின் தொலைதூரப்பகுதியிலிருந்து, குறிப்பாக தென் துருவம்–ஐட்கென் பேசின் பகுதியிலிருந்து மாதிரிகளைச் சேகரித்து அவற்றை மீண்டும் பூமிக்குக் கொண்டுவந்து வரலாற்றுச் சாதனை புரிந்துள்ளது. ரிலே செயற்கைக்கோள்கள்மூலம் ரேடியோ சமிக்ஞைகளின் தடையைச் சமாளிப்பது, துல்லியமான தரையிறக்கம் மற்றும் இரண்டு கிகி எடையுள்ள நிலவுப்பாறை மற்றும் மண்ணைச் சேகரித்தல் ஆகியவை இதன் முக்கிய சாதனைகளாகும். இந்தப் பணி நிலவுப் புவியியல், ஆரம்பகால சூரிய குடும்ப வரலாறு மற்றும் பூமி–நிலவு உறவுகள் பற்றிய புரிதலை மேம்படுத்துகிறது.


**2. அண்மையில், 18ஆவது மக்களவையின் அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

அ. K சுரேஷ்

**ஆ. ஓம் பிர்லா ☑**

இ. இராஜ்நாத் சிங்

ஈ. அமித் ஷா



★ எதிர்க்கட்சி வேட்பாளர் K சுரேஷைத் தோற்கடித்து மக்களவையின் அவைத்தலைவராக ஓம் பிர்லா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன்மூலம் ஓம் பிர்லா மக்களவையின் அவைத்தலைவராக இரண்டாவது முறையாக பதவியேற்றார். இவ்வாறாக மக்களவையின் அவைத்தலைவராக இருமுறை பதவிவகித்த 6ஆவது நபர் இவராவார்.

**3. அண்மையில், C–DAC உயர்செயல்திறன் கணினி மற்றும் அதனுடன் தொடர்புடைய பகுதிகளில் மனிதவள மேம்பாட்டிற்கான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்க எந்த நிறுவனத்துடனான MoAஇல் கையெழுத்திட்டுள்ளது?**

**அ. அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் ☑**

ஆ. ஐஐடி, பம்பாய்

இ. ஐஐடி, மெட்ராஸ்

ஈ. இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம்

★ அதிநவீன கணினி மேம்பாட்டு மையம் (C–DAC) மற்றும் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்கழகம் (AICTE) ஆகியவை உயர்செயல்திறன் கணினி மற்றும் தொடர்புடைய பகுதிகளில் மனிதவள மேம்பாட்டை மேம்படுத்த சங்க அமைப்பு விதிக்குறிப்பில் கையெழுத்திட்டன. அதன் முதன்மை முயற்சிகளில் பெருந்திட்ட பயிற்சியாளர் திட்டங்கள், தரமேம்பாட்டுத் திட்டங்கள், ஸ்வயம் தளத்தில் HPC படிப்புகள், தொழில்சார்ந்த பாட மேம்பாடு மற்றும் AICTEஆல் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு C–DAC HPC கற்றல் தளங்களை வழங்குதல் ஆகியவை அடங்கும்.

★ இந்த ஒத்துழைப்பு புதுமைகளை வளர்ப்பதையும், தொழில் மற்றும் கல்வித்தேவைகளைப் பூர்த்திசெய்வதையும் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**4.** **'School in a Box' என்ற திட்டம் கீழ்க்காணும் எந்த வடகிழக்கு மாநிலத்தின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுடன் தொடர்புடையதாகும்?**




அ. அருணாச்சல பிரதேசம்

**ஆ. அஸ்ஸாம் ☑**

இ. நாகாலாந்து

ஈ. மணிப்பூர்

★ அஸ்ஸாமில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், தங்கள் கல்வியைத் தொடர 167 நிவாரண முகாம்களில், 'ஒரு பெட்டியில் பள்ளி' திட்டத்தின் பலனைப் பெறுவார்கள். 6 முதல் 18 வயது வரையிலான குழந்தைகளை இலக்காகக் கொண்ட இந்த முயற்சி, வீடுகள் அல்லது குடும்ப உறுப்பினர்களை இழப்பதால் ஏற்படும் அதிர்ச்சியைச் சமாளிக்க உதவுகிறது. ஒவ்வொரு முகாமும் குறிப்பேடுகள் மற்றும் கற்றல் பொருட்களுடன் UNICEF வடிவமைத்த சிறார்க்குகந்த வெளி கருவிப்பெட்டி வழங்கும். அஸ்ஸாம் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், கருவிகளின் பயன்பாட்டை அதிகப்படுத்தவும், குழந்தைகளின் மன அழுத்தத்தை குறைக்கவும் அதிகாரிகளுக்கு பயிற்சியளித்து வருகிறது.

**5.** **அண்மையில் பன்னாட்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்த டேவிட் வார்னர் சார்ந்த நாடு எது?**



**அ. ஆஸ்திரேலியா ☑**

ஆ. தென் ஆப்பிரிக்கா

இ. இங்கிலாந்து

ஈ. நியூசிலாந்து

★ 2024 – T20 உலகக்கோப்பையிலிருந்து ஆஸ்திரேலியா வெளியேறியதால் டேவிட் வார்னரின் 15 ஆண்டுகால பன்னாட்டு கிரிக்கெட் வாழ்வு அமைதியாக முடிந்தது. பன்னாட்டு கிரிக்கெட்டில் தனது இறுதிக்கட்டத்தைக் குறிக்கும் வகையில் இந்த உலகக்கோப்பையை தனது கடைசி போட்டியாக டேவிட் வார்னர் அறிவித்திருந்தார். அவர் 2023 இல் தனது கடைசி சர்வதேச ஒருநாள் போட்டியை விளையாடினார்; 2024ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அவரது கடைசி டெஸ்ட் போட்டி மற்றும் 2025 – சாம்பியன்ஸ் கோப்பையில் விளையாடுவதற்கான சாத்தியக்கூறு இருந்த போதிலும், T20 உலகக்கோப்பையோடு அவர் தனது கிரிக்கெட் வாழ்வை நிறைவு செய்தார்.

**6.** **ஜம்மு & காஷ்மீரில் பாயும் எந்த ஆற்றின்மீது ரேட்டில் மின்னுற்பத்தித் திட்டம் அமைந்துள்ளது?**



**அ. செனாப் ☑**

ஆ. ஜீலம்

இ. சிந்து

ஈ. உஜ்ஹ்

★ ஜம்மு & காஷ்மீரில் செனாப் ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ள நீர்மின் திட்டமான ரேட்டில் மின்னுற்பத்தித் திட்டத்தை 5 பேர்கொண்ட பாகிஸ்தான் தூதுக்குழு மற்றும் உலக வங்கி நிபுணர்கள் பார்வையிட்டனர். 2006ஆம் ஆண்டு முதல், பாகிஸ்தான், பன்னாட்டு நடுவர் மன்றத்தைக் கோரி தொழில்நுட்ப ஆட்சேபனைகளை எழுப்பியது, அதை இந்தியா நிராகரித்து வந்தது. சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின்கீழ், ஜம்மு & காஷ்மீரில் பாயும் நதிநீர்மீது இந்தியாவுக்கு உரிமையும், பஞ்சாபின் ஆறுகள்மீதான முழு உரிமையும் உள்ளது. இந்தியா ஒப்பந்தத்திற்கு இணங்குவதை உறுதிப்படுத்துகிறது.

**7. அண்மையில், உள்துறை அமைச்சகத்தால் சோதிக்கப்பட்ட, 'eSakshya' செயலியின் முதன்மை நோக்கம் என்ன?**



அ. சமூக வலைப்பின்னல் சேவைகளை வழங்குதல்

**ஆ. குற்றச்சம்பவத்தின் சாட்சியங்களைப் பதிவுசெய்து பதிவேற்ற காவல்துறைக்கு உதவுதல் ☑**

இ. வணிகங்களுக்கு கிளவுட் ஸ்டோரேஜ் தீர்வுகளை வழங்குதல்

ஈ. ரெயில்வேயின் உள்கட்டமைப்பு மேம்பாடு குறித்த விவரங்களை வழங்குதல்

★ மத்திய உள்துறை அமைச்சகமானது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் உள்ள தேசிய தகவலியல் மையம் உருவாக்கிய, 'eSakshya' என்ற மொபைல் செயலியை சோதனைசெய்து வருகிறது. இது குற்றக் காட்சிகளைப் பதிவுசெய்வதற்கும், மேகக்கணிமை அடிப்படையிலான தளத்தில் ஆதாரங்களைப் பதிவேற்றுவதற்கும் காவல்துறைக்கு உதவுகிறது. முதல் தகவல் அறிக்கையின் பல்வேறு கோப்புகளுடன், ஒவ்வொரு பதிவும் நான்கு நிமிடங்கள் வரை நீளமாக இருக்கும். இந்தச் செயலி டிஜிட்டல் சான்றுகளின் ஒருமைப்பாட்டை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**8. ரஷ்யாவில் நடந்த 2024–BRICS விளையாட்டுப்போட்டிகளில் இந்தியா எத்தனை பதக்கங்களை வென்றது?**

அ. 20

ஆ. 21

**இ. 29 ☑**

ஈ. 30

★ நடப்பு 2024ஆம் ஆண்டு ரஷ்யாவின் கசானில் நடைபெற்ற BRICS விளையாட்டுப்போட்டியில் இந்தியா 3 தங்கம், 6 வெள்ளி, 20 வெண்கலங்கள் என மொத்தம் 29 பதக்கங்களை வென்றது. இந்திய அணி பல்வேறு விளையாட்டுத் துறைகளில் சிறந்து விளங்கியதோடு இந்தச் சர்வதேச பல்விளையாட்டு நிகழ்வில் குறிப்பிடத்தக்க சாதனைகளை வெளிப்படுத்தியது.

**9. ஒவ்வோர் ஆண்டும், 'போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான பன்னாட்டு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**



**அ. ஜூன்.26 ☑**

ஆ. ஜூன்.27

இ. ஜூன்.28

ஈ. ஜூன்.29

★ ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.26ஆம் தேதியன்று, போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான பன்னாட்டு நாள், சமூகத்தில் போதைப்பொருளின் தீங்குவிளைவிக்கும் விளைவுகளைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கடைப்பிடிக்கப்படுகிறது. நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "The evidence is clear: invest in prevention" என்பதாகும். 1987 டிசம்பர்.07இல் ஐநா பொதுச்சபையால் நிறுவப்பட்ட இந்நாள், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.

**10. அண்மையில், முதல் 'பன்னாட்டு பால் கூட்டமைப்பு ஆசிய–பசிபிக் உச்சிமாநாடு' நடைபெற்ற இடம் எது?**

அ. வாரணாசி, உத்தர பிரதேசம்

ஆ. இந்தூர், மத்திய பிரதேசம்

**இ. கொச்சி, கேரளா ☑**

ஈ. கொல்கத்தா, மேற்கு வங்காளம்

★ முதலாவது பன்னாட்டு பால் கூட்டமைப்பு ஆசிய–பசிபிக் உச்சிமாநாடானது கேரள மாநிலம் கொச்சியில் 2024 ஜூன் 26–28 வரை போல்காட்டியில் உள்ள கிராண்ட் ஹையாத்தில் நடந்தது. "பால்பண்ணை வைத்தலில் உழவர்களை மையமாகக்கொண்ட கண்டுபிடிப்புகள்" என்ற கருப்பொருளில் நடந்த இம்மாநாடு பன்னாட்டு பால் கூட்டமைப்பின் இந்திய தேசியக்குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் 22 கண்காட்சி அரங்குகளும் 17 புத்தொழில்களும் பால்பண்ணைகள், செயலாக்க உபகரணங்கள் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்துகின்றன.

**11. ஒவ்வோர் ஆண்டும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறை (MSME) நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. ஜூன்.26

**ஆ. ஜூன்.27 ☑**

இ. ஜூன்.28

ஈ. ஜூன்.29

MSME
सूक्ष्म , लघु एवं मध्यम उद्यम
MICRO, SMALL & MEDIUM ENTERPRISES

★ கடந்த 2017ஆம் ஆண்டு முதல், ஜூன்.27ஆம் தேதி குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறை (MSME) நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இது பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பில் MSME துறையின் பங்கை அங்கீகரிக்கும் விதமாக கொண்டாடப்படுகிறது. MSMEகள் 90% வணிகங்கள், 60–70% வேலைவாய்ப்பு மற்றும் உலகளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50த்தைக் கொண்டுள்ளன. ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை MSME நாளை 2017 ஏப்ரல்.06 அன்று நிறுவியது. நடப்பு 2024இல் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், MSMEs and the SDGs" என்பதாகும்.

**12. அண்மையில், பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியில் (ISA) 100ஆவது முழுநேர உறுப்பினராக சேரவுள்ள நாடு எது?**

**அ. பராகுவே ☑**

ஆ. சீனா

இ. தென்னாப்பிரிக்கா

ஈ. பிரேசில்



★ பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியின் 100ஆவது முழு நேர உறுப்பினராவதற்கான ஏற்புறுதியை பராகுவே புது தில்லியில் வைத்து அதிகாரப்பூர்வமாக ஒப்படைத்தது. 2015ஆம் ஆண்டு COP21இன்போது இந்தியா மற்றும் பிரான்சு இணைந்து நிறுவிய பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியானது சூரிய ஆற்றலை திறம்பட பயன்படுத்துதலை ஊக்குவிக்கிறது. இந்தக்கூட்டணியில் தற்போது 119 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன; 100 நாடுகள் அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினர்களாக உள்ளன. பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி, பாரிசு காலநிலை ஒப்பந்தத்தை விரிவான சூரிய ஆற்றல் ஏற்பு மற்றும் பயன்படுத்துதல்மூலம் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. காப்புரிமை...**

இந்திய அளவில் காப்புரிமை செய்வதில் மொத்தம் 12, 948 காப்புரிமைகளுடன் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இதனை ஊக்குவிக்கும் வகையில், ஆண்டுதோறும் காப்புரிமை தொடர்பான மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்படும் என்றும் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பன்னாட்டு கணினித்தமிழ் மாநாடு நடத்தப்படும் என்றும் தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**2. குறு, சிறு நிறுவனங்களுக்காக ₹100 கோடியில் கடனுதவி திட்டம்.**

குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு ₹100 கோடியில் கலைஞர் கடனுதவி திட்டம் செயல்படுத்தப்படும் என்று குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழிற்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு கடன் கிடைப்பதை எளிதாக்கும் வகையில் தாய்கோ வங்கிமூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் கடனுக்கு 10 சதவீத என்ற வட்டி விகிதத்திலிருந்து 7 சதவீதமாக குறைக்கப்பட்ட வட்டி விகிதத்தில் ஒரு நிறுவனத்துக்கு ₹20 இலட்சம் வரை கடன் வழங்கும் வகையில் கலைஞர் கடனுதவி திட்டம் செயல்படுத்தப்படும். 2024–25 நிதியாண்டில் இதற்கென ₹100 கோடி தாய்கோ வங்கியால் ஒதுக்கப்படும்.

**தென்னை நார் பொருள்கள் ஏற்றுமதி மையம்:**

தென்னை நார்சார்ந்த பொருள்கள் ஏற்றுமதியை மேம்படுத்த பொள்ளாச்சியில் ஏற்றுமதி மையம் தொடங்கப்படும்.

---

**3. நூல் வெளியீடு...**

ISRO அறிவியலாளர் நம்பி நாராயணின் வாழ்க்கை வரலாற்றைக்கூறும், 'விண்வெளித்தழும்புகள்' என்னும் நூலின் தமிழ்ப்பதிப்பு நூல் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது.

---

**4. நான்கு புதிய மாநகராட்சிகள்.**

புதுக்கோட்டை, திருவண்ணாமலை, நாமக்கல், காரைக்குடிபோன்ற நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரமுயர்த்த வேண்டுவதற்கான மசோதா தமிழ்நாடு சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

---


# IMPORTANT LINKS

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8